Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

*வெளியீடு* : 26-05-2014 Issued : 26-05-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 18, 2014—தொகுதி 61—எண் 3**

**Tuesday the 18th February 2014—Volume 61—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**18–2–2014**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


| | | |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 321-383 |
| **2.** | **உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் குறித்த உரிமைக் குழு அறிக்கைமீதான முடிவு பற்றிப் பேச முற்படுதல்—** | 383-389 |
| | *திரு. அர. சக்கரபாணி* | 383 |
| | *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 384,386,<br>388-389 |
| | *டாக்டர் க. கிருஷ்ணசாமி* | 387 |
| **3.** | **வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—** *தொடர்ச்சி* | 390-510 |
| | *திரு. வி.சி. சந்திரகுமார்* | 390-399,<br>401-405<br>407-408,<br>412-413<br>415-417,<br>420-424 |
| | *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 392-398,<br>401-407,<br>413-415,<br>419, 456,<br>467-468,479,<br>491-493,<br>496, 499-501 |

பக்கங்கள்


**3. வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—**
தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 398-401, 503, 506 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 406-407 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 408-412, 452, 468 493,497-498, 504 |
| *மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா | 417-419, 425, 454 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 419-420, 483-484, 488-494 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 424, 505 |
| திரு. இரா. குமரகுரு | 425-449 |
| திரு. து. முருகேசன் | 449,450 |
| திரு. ஏ. லாசர் | 450-452, 454-462 |
| *மாண்புமிகு திரு. பி.வி. ரமணா | 453, 461, 498-499 |
| *திரு. பி.எல். சுந்தரம் | 462-465, 468-473 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 465-467, 502-503 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 466, |
| திருமதி எஸ். விஜயதரணி | 471 |




பக்கங்கள்


**3. வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—**
தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. இரா. துரைக்கண்ணு | 473-478 |
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 478 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 479-485 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 481-482 |
| திரு. அ. அஸ்லம் பாஷா | 485-494 |
| *மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம் | 486-488 |
| மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி | 494-495 |
| திரு. எஸ்.ஆர். பார்த்திபன் | 496-510 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 496 |

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 510-511

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு—2045

## 2014 பிப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின்.”*

*ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**63—**

### புதிய மின்மாற்றி

***38361—திரு. கே.பி. பரமசிவம்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 பிப்ரவரி 18

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்திற்கு 250 கே.வி.ஏ. திறன் கொண்ட கணபதிபாளையம் துணை மின்நிலையம் SS-1 மின்மாற்றியிலிருந்து சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கணபதிபாளையத்தில் எந்தவொரு இடத்திலும் குறைந்த மின்னழுத்தம் இல்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அங்கு தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை. எனினும், வருங்காலங்களில் தேவை ஏற்பட்டால் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குக் கடமையாற்றுவதையே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிபாடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மகத்தான உண்மை. வினாடி முள்ளையும் வெல்லும் சுறுசுறுப்போடு, தமிழ் மக்களின் வாழ்வை உயர்த்துவதில் சீரக முனை அளவுகூட சிரத்தை குன்றாமல், சத்தியப் பார்வையோடு, சலியாத உழைப்போடு தாங்கள் ஆற்றி வரும் பணிகளுக்கு தமிழக மக்கள் என்றென்றும் நன்றிக்கடன்பட்டவர்கள். கடந்த ஆண்டு தாங்கள் பிறந்தநாள் பரிசாக தமிழக மக்களுக்காக காவேரியை மீட்டெடுத்தீர்கள். இந்த ஆண்டு தங்கள் பிறந்தநாள் பரிசாக பகை சூழ்ந்து நிற்கும் பாரத நாட்டை மீட்டெடுத்து, வலிமையான பாரதத்தை உருவாக்கித் தருவீர்கள் என்ற உறுதியோடு (மேசையைத் தட்டும் ஒலி) பல்லடம் தொகுதி மக்கள் சார்பாக தங்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.



2014 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கரைப்புதூர், உபாயனூர் மற்றும் கணபதிபாளையம் போன்ற மூன்று ஊராட்சிகளும் இணைகின்ற பகுதிகளில் மின் அழுத்தம் மிகவும் குறைவாக உள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. அங்கே ஒரு துணை மின்நிலையம் அமைத்துக் கொடுத்தால்தான் மின்னழுத்தக் குறைவை முழுமையாக சரிசெய்ய முடியும். எனவே, துணை மின்நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் கிராமத்திற்கு தற்போது 250 கே.வி.ஏ. திறன் கொண்ட கணபதிபாளையம் துணை மின்நிலையம் SS-1 மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும், துறையினுடைய ஆய்வு அறிக்கைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. கணபதிபாளையத்திற்குத் தேவைப்படும் தொழிற்சாலை மின்பளு (175 HP) 130 கிலோ வாட், விவசாய மின்பளு 22 கிலோ வாட், வீடு மற்றும் வணிக மின்பளு 76 கிலோ வாட், ஆக, மொத்த மின்பளு 228 கிலோ வாட் மட்டும்தான். ஆனால், அங்கு இருக்கும் மின்மாற்றியோ 250 கே.வி.ஏ. திறன் கொண்டது. அந்த மின்மாற்றியின் அளவிற்குக் கட்டுப்பட்டுத்தான் தேவையும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் மின்பளு தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. தற்சமயம் அங்கே புதிய மின்மாற்றி அமைப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லை என்றபோதிலும், தற்பொழுது மின் தேவை பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளையும் ஏற்று, வருங்காலத் தேவையையும் கருத்திற்கொண்டு, முன்னேற்பாடாக ஒரு புதிய மின்மாற்றி அமைப்பதற்கான கருத்துருவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

[2014 பிப்ரவரி 18

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு துணை மின்நிலையம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் நிலுவையில் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**64—**

## பாலம் சீரமைத்தல்

***7958—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலுள்ள குருவிக்காரன் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகரிலுள்ள குருவிக்காரன் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு வருகிறது. உரிய ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, உயர்மட்டப் பாலம் கட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாநகரில் நிறைய பாலங்கள் கட்டப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அதேநேரத்தில் ஒரு நல்ல பதிலை அளித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குருவிக்காரன் சாலையில் அமைந்துள்ள பாலம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. 1998-ல் அந்தப் பாலத்திற்கு பிளாட்பாரம் மற்றும் கைப்பிடி போடப்பட்டது. இப்போது வைகை ஆற்றில் இஸ்மாயில்புரம், ராமராயர் மண்டபத்தை இணைக்கக்கூடிய தரைப் பாலம் வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில், இந்தப் பாலத்தை சீரமைத்து, மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் இருப்பதாக தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பாலம் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு, அந்தப் பாலம் 1980-ல் கட்டப்பட்டது. அது 1999-ல் பராமரிக்கப்பட்ட, 250 மீட்டர் நீளமும், 7.5 மீட்டர் அகலமும் கொண்ட தரைப் பாலம் ஆகும். அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதியில் அண்ணா நகரையும், அந்தப் பகுதியில் காமராஜர் சாலையையும் இணைக்கக்கூடிய பாலமாக இருப்பதால், உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே அது ஆய்வு செய்யப்பட்டு, நிதியாதாரத்தைக் கொண்டு உடனடியாக பாலம்

[2014 பிப்ரவரி 18

கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

**திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் இருபுறங்களையும் இணைக்கக்கூடிய சர்வீஸ் சாலை இப்போது ஓரளவிற்கு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. ஆனால், அந்தச் சாலை முழுமையாக போடப்படாமல் இருப்பதால் பல இடங்களுக்கு வாகனங்கள் போக முடியாத நிலைமை இருக்கிறது. அந்தச் சாலை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் வைகை ஆற்றின் இருபுறங்களையும் இணைக்கக்கூடிய சர்வீஸ் சாலையை முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தால், மதுரையில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த சர்வீஸ் சாலையை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைப் பொறுத்தவரையில், வடகரை மற்றும் தென்கரை என்று வைகை ஆற்றின் இருபுறமும் நகரம் அமைந்திருக்கிறது. அதிலே தென்கரை நகரமாகவும், வடகரையில் பல்வேறு அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டையும் ஆலன் விக்டர் மேம்பாலம் இணைக்கிறது. அதுமட்டுமில்லாமல் இரண்டு தரை பாலங்களும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகை ஆற்றை சுற்றியுள்ள பகுதியில் இருக்கக்கூடிய போக்குவரத்தை சரி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இப்போது சீர் செய்யப்பட்டு வருகிறது. விரைவாக அந்தப் பணிகள் செய்து*



2014 பிப்ரவரி 18]

*முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் இருக்கக்கூடிய சிறு பாலங்களை ஆய்வு செய்து, அதில் தேவையான பழுதுநீக்கம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை கேட்டுக்கொள்ளும் அதேநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு சிறு விண்ணப்பம் வைக்க விரும்புகிறேன். பட்டுக்கோட்டை நகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டு இன்றைக்கு 50 ஆண்டுகள் ஆகின்றன. எனவே, அதை கொண்டாடக்கூடிய வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, அந்த விழாவைச் சிறப்பாக கொண்டாடவும், அங்கே பை-பாஸ் சாலை மற்றும் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகள் தற்போது நிலுவையில் இருப்பதால் அதையும் விரைந்து முடிக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டை நகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்து இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். 50 ஆண்டு காலம் நிறைவடைந்த அந்த நகராட்சிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், 50 ஆண்டுகள் முடிவடைந்திருப்பதற்கு அடையாளமாக ஒரு விழாவை கொண்டாடுவதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான கவனத்திற்கு இந்தக் கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாலத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார். அது எந்தப்*

[2014 பிப்ரவரி 18

பாலம் என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அந்தப் பாலம் நல்ல நிலையில் இருக்கிறதா அல்லது பழுதுபட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகராட்சியிலே பழைய ஆற்காடு சாலையிலிருந்து ஆரணி நகரத்தை இணைக்கின்ற ஒரு தரைப் பாலம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்தது. இன்றைக்கு முழுவதுமாக அது அடைபட்டிருக்கின்றது. தற்போது ஏற்பட்டிருக்கின்ற மக்கள் தொகைப் பெருக்கம், வாகனப் போக்குவரத்து அதிகரித்திருப்பது போன்ற காரணங்களால் இருக்கின்ற உயர்மட்டப் பாலமானது போதுமானதாக இல்லை. கடந்த ஒரு வார காலத்தில் இரண்டு விபத்துகள் ஏற்பட்டு, இரண்டு இளைஞர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். எனவே, அதைக் கருத்திலேகொண்டு, பழைய ஆற்காடு சாலையிலிருந்து ஆரணி நகராட்சியை இணைக்கின்ற வகையிலே, புதிதாக ஒரு ஆற்றுப் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் வேண்டுமென்று கேட்கட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இறக்காதவர்களை இறந்தார்கள் என்று சொல்வது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. தயவுசெய்து ஆதாரத்தோடு சொல்லவேண்டும். இறப்பு என்றால் ஒரு மனித உயிரே போய்விடுவது. அதனால், தயவுசெய்து ஆதாரமில்லாமல், ஏதோ கோரிக்கை வைக்க வேண்டுமென்பதற்காக இதுபோன்ற கருத்துகளைச் சொல்லக்கூடாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்



2014 பிப்ரவரி 18]

அவர்களுடைய கோரிக்கை குறித்து ஆய்வு செய்து, நிச்சயமாக அது பயன்பாட்டிற்கு உகந்ததாக இருப்பின், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட வலசை கிராமத்திற்குச் செல்லக்கூடிய பாலமும், பாலமேடு பேரூராட்சிக்குட்பட்ட மஞ்சமலை ஓடையில் உள்ள பாலமும் பழுதடைந்த நிலையில் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றைச் சீர்செய்து கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து சரியாகப் புரியாத காரணத்தினால், மீண்டும் அந்தக் கேள்வியை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மீண்டும் அந்தக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, பாலமேடு பேரூராட்சிக்குட்பட்ட மஞ்சமலை ஓடையில் உள்ள பாலமும், அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட வலசை கிராமத்திற்குச் செல்லக்கூடிய பாலமும், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. அந்தப் பாலங்களை மீண்டும் சரிசெய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2014 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேரூராட்சிப் பாலங்கள் பழுதடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றை ஆய்வு செய்து, அப்படி பழுதடைந்திருக்கின்றபட்சத்தில், சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதியில் உள்ள பாலங்களில், பராமரிப்பு இல்லாமல் சில பாலங்கள் இருக்கின்றன. அவை குறித்து நான் தனியாகக் கடிதம் கொடுக்கிறேன். அதோடு சேர்த்து, மார்த்தாண்டம் பகுதியில் இருக்கக்கூடிய குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையப் பணிகள் 2012 மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருந்தீர்கள். ஆனால், இன்னும் அந்தப் பணிகள் முடிவடையாமல், சில சிக்கல்கள் அதிலே இருக்கின்றன. அதை ஆய்வு செய்து, விரைந்து அந்தப் பணிகளை முடிக்க வேண்டும். இரயில்வே நிலையத்திலிருந்து, பேருந்து நிலையத்திற்கு செல்லும் வகையில், ஒரு நடைபாதை மேம்பாலம் அமைக்க முடியுமா என்றும் ஆய்வு செய்து பார்க்கவேண்டும். ஏனென்றால், இரயில் நிலையத்திற்கு மிக அருகில் இருக்கக்கூடிய பேருந்து நிலையம் அது. ஆகையால், அதற்குண்டான ஆய்வுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பேருந்து நிலையத்திற்கு குமரித் தந்தை மார்ஷல் நேசமணியின் பெயரைச் சூட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே கேள்வியில், ஐந்து துணைக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அந்த ஐந்து துணைக் கேள்வியில் முதல் கேள்வி, அவர் குறிப்பிட்ட பாலங்கள் எத்தனை என்று குறிப்பிடவேண்டும். அப்படிக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.*

*அடுத்ததாக, பேருந்து நிலையப் பணிகள் முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் மேலும் அங்கு ஒரு மேம்பாலம் கட்டித் தரவேண்டுமென்று கூறியிருக்கிறார். அந்த மேம்பாலம் நெடுஞ்சாலையில் வருகின்றபட்சத்தில், நெடுஞ்சாலைத் துறையும், இரயில்வே துறையும் இணைந்துதான் அதைக் கட்டவேண்டும். அது நகராட்சிக்குட்பட்டதல்ல. எனவே, அதையும் ஆய்வு செய்து, நகராட்சிக்கு உட்பட்டதாக இருக்குமென்று சொன்னால், அப்படியிருந்தாலும்கூட, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, இரயில்வே துறையோடு இணைந்து அதைச் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளை முழுவதுமாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, தாங்கள் அந்தக் கோரிக்கை மனுவைக் கொடுத்தீர்களென்றால், அவை நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

*முற்பகல் 10-15*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கத்தால் எனது சிவகங்கை தொகுதியில் 3 பாலங்கள் உடைந்துவிட்டன. ஒன்று விளாங்காட்டூர், இன்னொன்று பாளையேந்தல், மூன்றாவதாக, புதுக்குளம். இந்தப் பாலங்களை புதுப்பிக்கக் கோரி தொடர்ந்து கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் வலியுறுத்தி வந்த நிலையில், நடந்து முடிந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பாளையேந்தல் பாலத்தைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு,*

[2014 பிப்ரவரி 18

தற்பொழுது அதற்கான பணிகள் தொடங்கும் நிலையில் இருக்கின்றன. இருந்தாலும் இன்னும் இரண்டு பாலங்கள் கட்டுவதற்கான அறிவிப்புகள் வராமல் இருக்கின்ற நிலையில் அந்த இரண்டு பாலங்களையும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலங்கள் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வருமானால் அதைக் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். நகராட்சிக்குட்படாத பகுதியாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கவேண்டும் என்பதற்காகவே அதைப்பற்றி என்னிடத்தில் கேட்டால் எவ்வாறு அதற்கு பதிலளிக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்ற பொன்மொழிக்கேற்ப மக்களின் முன்னேற்றத்திற்காக பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய சாலைகளுள்ள கள்ளிக்குடி ஒன்றியம், வேப்பங்குளம் கிராமத்திற்கும், வடகரை கிராமத்திற்கும் செல்லக்கூடிய பாலங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இவை ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்குட்பட்ட பாலங்கள் என்பதால் அவற்றை விரைந்து முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். எனவே, இந்த இரண்டு பாலங்களையும் உயர்மட்டப் பாலங்களாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்களும் இதே கேள்வியைத்தான் கேட்டார். அவரும் ஊராட்சிப் பகுதிகளைப்பற்றித்தான் கேட்டார். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஊராட்சி ஒன்றியத்தில் பாலம் அமைப்பது பற்றித்தான் கேட்டிருக்கிறார். இரண்டு உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் சேர்த்து, அந்தந்தப் பகுதிகளில் ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது, அங்குள்ள நொய்யல் பாலம் மற்றும் ஜமனைப் பாலம் ஆகியவை உடைந்து கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாகிறது. அந்த வழியாக எந்தவித போக்குவரத்திற்கும் வழியில்லாமல் தடை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருக்கும்பட்சத்தில் விரைவில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

[2014 பிப்ரவரி 18

**திருமதி ர. சுபா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில், 74 கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் சுவேதா ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையின்படி அந்தப் பகுதியில் ஏற்கெனவே பாலம் இருந்து, அது பழுதடைந்திருந்தால், அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், (குறுக்கீடு) அங்கு ஏற்கெனவே பாலம் இருக்கிறது என்கிறார். அதில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெஞ்சுவதில்லை பிறர் வாள், அவர் செய் கேட்டு நிற்கும், அஞ்சுவதில்லை. இந்தியத் திருநாட்டையும், முப்படைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளாமல் கண் துஞ்சுவதில்லை. எனவே, தமிழர் தோள் இருந்தால் எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர் நின்று. களம் கண்ட போர் மறவர் கடலோசை சிறகடிப்பாய், கங்கை வெல்ல கவியுடையாய் துடி, துடிப்பாய். அன்று ஆண்ட பாண்டிய மன்னன் அணிவகுத்த பெரும்படை இதுதானோ என தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்துகின்ற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, பிடாரி தெருவில் அமைந்துள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றி*



2014 பிப்ரவரி 18]

*சீரமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். அங்குள்ள போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தும், அந்தப் பாலத்தின் வழியாக மழைக் காலங்களில் வருகின்ற நீர் நிலைகளை ஆய்வு செய்தும், அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**65—**

## தொழில் மையம்

***33172—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மகளிருக்கான தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை*

[2014 பிப்ரவரி 18

ஊக்குவிக்கின்ற வகையில் மாவட்டத் தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. எந்தவொரு மாவட்டத்திலேயும் பெண்களுக்காக தனி தொழில் மையம் அமைக்கப்படுவதில்லை. பெண்களுக்காக தனி தொழில் மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை, என்றபோதிலும், தொழில் வணிகத் துறையின்மூலமாக செயல்படுத்தப்படும் பல்வேறு மானியங்கள், திட்டங்களின்மூலம் மகளிருக்கு சிறப்புச் சலுகைகளை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் தென் மாவட்டங்களை தொழில்மயமாக்குவதற்காக மதுரை, தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தினை செயல்படுத்த, சிறப்பு செயலாக்க முகமை அமைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையில் Trade Centre அமைப்பதற்கு அனுமதி அளித்த M.S.M.E. துறைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் பத்து குறுந்தொழில் குழுமங்கள் அமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்ததற்கும் நன்றியைக் கூறி, அந்தக் குறுந்தொழில் குழுமம் ஒன்றை விருதுநகர் மாவட்டத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு பத்து குழுமங்களைப் பெற்று, சிறப்புக் குழுமத் திட்டத்திலே, தமிழ் மாநிலம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத்



2014 பிப்ரவரி 18]

தட்டும் ஒலி) அந்த வகையிலே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழுமத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சார்பில் கோப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதியில் நிச்சயமாக அந்தக் குழுமத்தை கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சில பணிகள் என்று சொல்லுகின்றபோது மகளிருக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில், திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டை, சேலம் மாவட்டம் கருப்பூர், மதுரை மாவட்டம் கப்பலூர், காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் போன்ற பகுதிகளிலே எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகளிருக்காக தொழிற்பேட்டைகளை அமைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தங்கள்வாயிலாக உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் ஏராளமாக மல்லிகைப் பூ உற்பத்தியாகின்றது. மதுரை மல்லிகைப் பூவிற்கு கூடுதல் மணம் உண்டு. எனவே, மல்லிகைப் பூவைப் பயன்படுத்தி அங்கே அரசு சார்பிலோ அல்லது தனியார் துறை சார்பிலோ சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட் தொழிற்சாலை அமைக்க இயலாது என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எந்தவொரு தொழிற்சாலையையும் அரசு அமைப்பது கிடையாது. அரசு அமைப்பதற்கு முன்வரவில்லையென்றாலும்கூட அத்தகைய சிறிய தொழில் செய்வதற்கு தொழில்முனைவோர்

[2014 பிப்ரவரி 18

*முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியங்களைத் தந்து உதவுவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**66—**

**பணிபுரியும் மகளிர் விடுதி**

***28852—திரு. து. முருகேசன்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கல்பட்டில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பணிபுரியும் மகளிரின் நலனைக் கருத்தில் கொண்டு 14-5-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் 13 மாவட்டங்களில் புதிதாக 20 பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்க அறிவிப்பு செய்து, அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் புதிதாக 3 பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அருகே கூடுவாஞ்சேரியில் அய்யஞ்சேரி என்ற இடத்தில் பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க மாவட்ட நிருவாகத்தால் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

**திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியைச் சுற்றி மகேந்திரா சிட்டி மற்றும் பல தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. தனியார் தொழிற்சாலை, அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்ற மகளிர் பல மாவட்டங்களில் இருந்து வந்து தங்கி வேலை செய்கின்ற சூழ்நிலை உள்ளது. அவர்கள் குடும்பம் காக்க தனியார் விடுதியில் தங்கி வருகின்றார்கள். அங்கே விடுதிக் கட்டணம் அதிகமாக இருப்பதால் இவர்கள் வாங்கும் சம்பளத்தில் அதைக் கட்ட பெரிதும் சிரமப்படுகின்றனர். செங்கல்பட்டில் அரசு விடுதி அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும் இருக்கும். எனவே, மகளிர் விடுதி அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டுக்கும் கூடுவாஞ்சேரிக்கும் ஒன்றும் பெரிய தூரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மகேந்திரா சிட்டி என்பதே கூடுவாஞ்சேரிக்கு அருகிலேதான் இருக்கிறது. மறைமலை நகர், அடுத்தது மகேந்திரா சிட்டி. ஆக, அருகிலேயே இருக்கிற காரணத்தாலும், பணிபுரியக் கூடிய பெண்கள் தாம்பரத்திலிருந்து வரக்கூடியவர்கள், செங்கல்பட்டில் இருந்து வரக்கூடியவர்கள் என இரண்டு பகுதிகளிலேயிருந்து வேலைக்குச் செல்லக்கூடியவர்களுக்கு நடுவிலே ஒரு பகுதியைத் தேர்வு செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்குமே என்பதற்காகத்தான் கூடுவாஞ்சேரியிலே அய்யஞ்சேரி என்ற இடத்தில் அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 18

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி சொல்லுகிறேன். அதேநேரத்தில், இந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி என்று பல்வேறுபட்ட கல்லூரிகள் சமீபகாலத்திலே நமது ஆட்சியிலே நிறுவப்பட்டு, நூற்றுக்கணக்கான மகளிர் ஊழியர்கள் இன்றைக்கு தருமபுரி நகரத்திலே பணிபுரிகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமீபகாலத்திலே நிறைய பொறியியல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் வந்தன என்று சொல்கிறார்கள். சமீபகாலத்திலே எப்போது வந்தது என்று தெளிவாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அம்மா அவர்கள் ஆட்சியிலே இத்தகைய கல்லூரிகள் எல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டுவரப்பட்டன என்பது உண்மைதான். கல்லூரிகளில் பணிபுரியக்கூடிய பெண்கள், அலுவலகங்களிலே பணிபுரியக்கூடியவர்கள் இருக்கிறார்கள்.



2014 பிப்ரவரி 18]

தொட்டில் குழந்தைகள் அதிகமாக உள்ள மாவட்டம் தருமபுரி மாவட்டம், குறிப்பாக கடந்த காலத்தில் பெண் குழந்தைகள் அதிகமாக இருந்தன, இப்போது இல்லை. அவர்கள் பணிபுரிவதற்கு அரசு ஒரு மகளிர் விடுதியைக் கட்டித் தருவதற்கும், அதேபோல, திருப்பூர் பகுதியிலே பல மாவட்டங்களிலிருந்து வந்து பணி புரியக்கூடிய பெண்களுக்கு திருப்பூரில் ஒரு மகளிர் விடுதியை கட்டித் தருவதற்கும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையிலே கேட்க வேண்டிய கேள்வியை இப்போது சமூக நலத் துறையில் கேட்டிருக்கிறார்கள். கேள்வி பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்கப்படுவது சம்பந்தமானது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு 2014-2015 ஆம் நிதியாண்டில் 17 கோடியே 50 இலட்சம் செலவில் 14 பணிபுரியும் மகளிர் விடுதி புதிதாக கட்டப்பட வேண்டுமென்று அறிவுறுத்தி இருக்கிறார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கோருவதற்கு முன்னுரிமை தந்து, கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற பகுதிகளில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைப்பது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று அயராது உழைத்துக்கொண்டிருக்கும் வருங்கால பாரதப் பிரதமர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். I.T. துறையில் வேலை செய்யும் பெண்கள் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து அதிக அளவில் வேளச்சேரியில் வசிக்கின்றனர். அவர்களுக்கு பெண்கள் தங்கும் விடுதி அமைக்க மாண்புமிகு அமைச்சர்

[2014 பிப்ரவரி 18

*அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**67—**

## வேளாண் ஆராய்ச்சி நிலையம்

***37312—திரு. இரா. துரைக்கண்ணு:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*



2014 பிப்ரவரி 18]

**திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் பிப்ரவரி 24 ஆம் தேதி 66-வது பிறந்தநாள் காணும் கழகத்தின் காவல் தெய்வம், ஏழையெளிய மக்களின் கண்கண்ட தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் இதழில் வெளியிடச் செய்து காவேரி டெல்டா விவசாயிகளின் உரிமையை மீட்டுத் தந்த தமிழக வீராங்கனை, தமிழகத்தில் கல்விப் புரட்சி, இரண்டாம் பசுமைப் புரட்சி ஆகியவற்றை படைத்திட்ட வரலாற்றுத் தலைவி, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக திகழ்கின்ற வகையில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கிய விவசாயிகளின் பாதுகாவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை நன்றியுடன் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதி முற்றிலும் விவசாயத்தைச் சார்ந்த பகுதியாகும். இங்கு நெற்பயிரும், கரும்பும் முழு அளவில் விளைகின்றன. எனவே, விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று அங்கே வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்துத்தர மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதனை நிறைவேற்றித் தருவார்களா என்று மீண்டும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் பாபநாசத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவிலும், தஞ்சாவூரில் இயங்கும் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் அங்கிருந்து 33 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. அவை அப்பகுதி விவசாயிகளின் தேவைக்கேற்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், அவ்வப்போது சந்தேகங்களை நிவர்த்தி செய்தும், தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளின் பயிர் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் வேப்பங்குளம் ஆகிய*

[2014 பிப்ரவரி 18

இடங்களில் எண்ணெய் பனை மற்றும் தென்னை ஆகிய பயிர்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அருகில் உள்ள மாவட்டங்களில் செயல்படுகின்ற நீடாமங்கலம் மற்றும் சிக்கல் வேளாண் அறிவியல் மையங்கள் விவசாயிகளுக்கு தொழில்நுட்பம் தொடர்பான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. எனவே, பாபநாசத்தில் உடனடியாக புதிதாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலாவது என்னுடைய கோரிக்கையினை நிறைவேற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையிருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சி தற்போது குன்றி இருக்கின்றது என்பதை நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பல அணைகள் அங்கு இருந்தாலும், நீர் வளங்கள் அங்கு இருந்தாலும் பயிர்களை பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகள் அங்கு சரியாக இல்லை



2014 பிப்ரவரி 18]

என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அங்கு பேச்சிப்பாறையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அதனை நன்கு develop செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை குறித்து முழுமையாக ஆராய்ந்து அதுபற்றி பின்னர் முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

### புதிய கட்டடம்

***3922—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, கவுண்டம்பாளையத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் திறன்மிகு பயிற்சி மையத்திற்கென ரூ.16 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும்,

[2014 பிப்ரவரி 18

இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் பழைய கட்டடங்களை புதுப்பித்து பராமரிப்புப் பணி செய்வதற்காக ரூ.62.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்பத்தை உலகத்தில் எழுப்பி வழி நடத்தும் நாளைய பாரதத்தின் ஒளிவிளக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். நான் வெற்றி பெற்றவுடனே என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சென்று அங்கே படித்துக்கொண்டிருக்கின்ற மாணவச் செல்வங்களை நேரடியாகக் கண்டபோது, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு எதையும் செய்யவில்லை என்று கூறினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், அந்த மாணவச் செல்வங்களுக்காக சுமார் 1 கோடியே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, புதிய கட்டடங்கள் கட்டித் தந்து, பழைய பகுதிகளையெல்லாம் மாற்றித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், அங்கே படித்துக்கொண்டிருக்கிற மாணவச் செல்வங்கள் அரசுப் பள்ளியிலே படிக்கின்ற மாணவச் செல்வங்களைப் போல எங்களுக்கும் மடிக்கணினி வேண்டும்; எங்களுக்கும் மிதிவண்டி வேண்டும் என்று ஒரு கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே வைத்தார்கள். அங்கே 1,130 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் விலையில்லா மடிக்கணினி வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, மாணவச் செல்வங்கள் சார்பாக நான் கோடானு கோடி நன்றியை சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்லாமல், அங்கே பயில்கின்ற மாணவர்களுக்கு



2014 பிப்ரவரி 18]

விலையில்லா மிதிவண்டி, விலையில்லா சீருடை, அதைத் தைப்பதற்கு தையல் கூலி 300 ரூபாயை ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாணவச் செல்வங்களின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகையும் வழங்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், அங்கே பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் 100 பேர் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த உதவித் தொகையைத் தந்திருக்கிறார்கள். மேலும் ரூபாய் ஒரு கோடியே 60 இலட்சம் செலவில் ஒரு கட்டடத்தைக் கட்ட உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மாணவச் செல்வங்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆனைக்கட்டி அருகில் மலைவாழ் பகுதியிலே வசிக்கின்ற மாணவச் செல்வங்கள் படிப்பதற்காக அரசு தொழில்நுட்பக் கல்லூரி கட்டுவதற்காக 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, இதுசம்பந்தமாக கேள்வி கேட்டவுடனே நிதி ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அரசு தொழிற்பயிற்சி மையத்திற்கு அருகில் அரசு வேலைவாய்ப்பு அலுவலகம் உள்ளது. அந்தக் கட்டடமும் பழுதடைந்துள்ளது. அந்தப் பள்ளிக்கும் சுற்றுச்சுவர் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட வேண்டியிருந்தாலும், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கினால் உடனடியாக அந்தச் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி குறைவாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

## உயர்மட்டப் பாலம்

*6459—**திரு. பா. கணேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, ஒரக்காட்டுப்பேட்டை அருகில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

உத்திரமேரூர் தொகுதி, ஒரக்காட்டுப்பேட்டை அருகில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.



2014 பிப்ரவரி 18]

**திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான தமிழகத்தை உருவாக்கிய வருங்கால பாரதமே, காவேரி கண்ட பொன்னியின் செல்வியே! நம் தமிழினம் காக்கும் தமிழினத் தலைவியே! அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவற்றினை அனைத்து மக்களும் பெற்றிட நாளை இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களெல்லாம் நித்தம் நித்தம் வணங்கும் ஆராதனைக்குரிய தெய்வம், தங்கத் தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிந்து வணங்குகிறேன். உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி, ஒரக்காட்டுப்பேட்டை ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதிக்குட்பட்ட, ஒரக்காட்டுப்பேட்டை அருகே பாலாற்றின் குறுக்கே ரூபாய் 24 கோடி செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏதுவாக, 5-12-2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக, பாலம் அமையவுள்ள இடத்தின் நேர்பாடு இறுதி செய்யப்பட்டு, அடித்தள மண் பரிசோதனைப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது பாலத்தின் வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வடிவமைப்புப் பணிகள் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் முடிந்தவுடன் விரைந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.

**திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்திரமேரூர் சட்டமன்றத்

[2014 பிப்ரவரி 18

தொகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, 24 கோடி ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலம் கட்ட திட்டம் தந்தமைக்கும், இன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையையும், நாளை டெல்லி செங்கோட்டையையும் அரசாட்சி செய்யப்போகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் உத்திரமேரூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் தடைபட்டிருந்த போரூர் மேம்பாலப் பணிகள், இந்த அரசு வந்தவுடன் துரித நடவடிக்கை எடுத்து, பணிகள் துவங்க ஆரம்பித்தன என்றாலும்கூட, நெரிசலான அந்தச் சாலையில் பணிகள் மிகவும் மெதுவாக நடந்துகொண்டிருக்கின்றன. எனவே, பணிகளை துரிதப்படுத்தி, அந்த மேம்பாலப் பணிகள் முடித்து, இந்த ஆண்டே மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்த வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய பதிலும் கொடுத்திருக்கின்றோம். கடந்த கால ஆட்சியிலே எந்த முதற்கட்ட பணியுமே தொடங்கப்படாமல் அவசர கோலத்திலே அந்தப் பாலப்பணி தொடங்குவதற்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டன. மேலும், பாலம் அமைகின்ற பகுதியில் உள்ள இடத்தின் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே அந்தப் பணி இடையிலே தடைபட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகு அதைத் துரிதப்படுத்தி வழக்குகள் எல்லாம் பைசல் செய்யப்பட்டு பணிகள் இப்போது துவங்கப்பட்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகளை



2014 பிப்ரவரி 18]

முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டத்தை இணைக்கும் விதமாக காவேரியாற்றின் குறுக்கே, 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தொடரிலேயே பாலம் கட்டப்படும் என்று சொல்லப்பட்டு, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் எத்தனை ஆண்டுகளுக்குள் முடிவடைந்து மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வைக்கின்ற கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. எப்போது இந்தப் பாலம் கட்டப்படும் என்று கடந்த கூட்டத்தொடரிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்தப் பாலம் கட்டுவதற்கான பணிகள் விரைந்து செயல்படும்விதமாக டெண்டர்கள் விடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. தஞ்சாவூருக்கு பாசனத்திற்கு தண்ணீர் விடுகின்ற காலத்திலேயும், காவேரி ஆற்றிலே தண்ணீர் அதிகமாக செல்லக்கூடிய நேரங்களிலேயும் பாலப் பணிகள் தடைபடும். ஆகவே, கால நிர்ணயம் செய்ய முடியாது. தண்ணீர் நிற்கின்றபோது அந்தப் பாலப் பணிகளை விரைந்து செய்து முடிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

[2014 பிப்ரவரி 18

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை பகுதியை இரண்டாகப் பிரிக்கிற தண்டவாளம் அருகே வியாசர்பாடியில் அடிப்பாலம் உள்ளது. இது உயரம் குறைவானது. நீர்ப்பிடிப்பும் உள்ள இடம். 50, 60 ஆண்டுகளுக்கு மேலாகவே இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. இப்போது அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒரு பகுதியில் பாலப்பணிகள் முடிந்து, தற்போது தண்டவாளத்திற்கு மேல் இருபக்கமும் இணைக்கவேண்டிய வேலை மட்டும் நிலுவையில் இருக்கிறது. இரயில்வே துறையிடம் நாங்கள் கேட்டபோது, தமிழக அரசினுடைய போக்குவரத்து காவல் துறை, குடிநீர் வழங்கல் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகியோர் செய்யவேண்டிய சில வேலைகள் பாக்கி இருக்கின்றன என்றார்கள். வாகனங்கள் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்துதரவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். நிதிப் பிரச்சினை எங்களுக்கு இல்லை. இரண்டே இரண்டு பில்லர்கள்தான் போடவேண்டும். அதைப் போட்டுத் தர நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும், இரயில்வே துறை எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை விரைவுபடுத்தி அந்தப் பாலத்தை ஒரு சில மாதங்களுக்குள்ளாக திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது, வியாசர்பாடி பாலம் என்று கருதுகிறேன். இப்பாலம் மூன்று பிரிவுகளாகக் கட்டப்படுகிறது. இரண்டு பிரிவுகளில் தற்போது பணிகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன. இரயில்வே பணிகள் முடிந்தவுடன் போக்குவரத்துக்கு திறக்கப்படும். ஒரு பிரிவில் கழிவுநீர் குழாய்கள் அகற்றப்பட்ட பின்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கழிவுநீர் குழாய்களை அகற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தற்போது இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்க இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியபோது அங்கே இரயில்வே பாதையிலே வேலைகள் நடைபெறுவதற்கு போக்குவரத்து நெரிசல் தடையாக



2014 பிப்ரவரி 18]

இருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுகுறித்து காவல் துறை உயர் அதிகாரிகளிடத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. போக்குவரத்தை மாற்றுப் பாதையில் திருப்பி பாலப் பணிகள் தடையில்லாமல் நடப்பதற்கு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அவர்களும் ஆவன செய்வதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, விரைந்து அந்தப் பாலப் பணிகளை முடிப்பதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகருக்கு பைபாஸ் சாலை அமைக்கப்படுமா என்று சென்ற கூட்டத்தொடரிலே நான் கேட்ட துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார். அந்த பைபாஸ் சாலை ஆய்வுப் பணி இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு நகராட்சியில் சுற்றுச் சாலை அல்லது புறவழிச் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். நிதிநிலைக்கேற்ப அங்கிருக்கின்ற மக்களுடைய பிரச்சினையையொட்டி, அங்கிருக்கின்ற போக்குவரத்து நெரிசலையொட்டி, எந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுக்க முடியுமோ அந்தப் பகுதியை எடுத்து, மேற்கண்ட பணியை செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற கொள்கையோடு தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

எனது வேடசந்தூர் தொகுதி வழியாகச் செல்லக்கூடிய திண்டுக்கல்-கரூர் மாநில நெடுஞ்சாலையில் வெள்ளப்பாறை அருகே உள்ள ஓடையில் கட்டப்பட்டுள்ள பாலமானது Narrow Bridge ஆக உள்ளது. ஆனால், அந்தச் சாலை இருவழிச் சாலையாக மாற்றப்பட்டு பல ஆண்டுகளாகியும்கூட பாலம் மட்டும் இன்னும் ஒருவழிப் பாலமாக Narrow Bridge ஆக உள்ளது. ஆகவே, அந்தப் பாலத்தை அகற்றி, புதிய உயர்மட்டப் பாலம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியின் மூலமாக பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 65 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, அதிலே 49 பாலங்கள் நிறைவுபெற்றுள்ளன. அதிலே 14 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல 2012-2013 ஆம் ஆண்டில் 121 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, 47 பாலப் பணிகள் முடிவுற்றுள்ளன. அதில் தற்போது 55 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, 2013-2014 ஆம் ஆண்டில் 125 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, தற்போது 96 பாலப் பணிகள் முடிவுற்றுள்ளன. அதில் ஒட்டுமொத்தமாக தற்போது 69 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 311 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, இதுவரை 96 பாலப் பணிகள் முடிக்கப்பெற்று அம்மாவினுடைய பொற்கரங்களால் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 69 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2014 பிப்ரவரி 18]

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

***2905—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கட்டாயமேடு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், சின்னபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பாஹனபள்ளி முழுநேர நியாய விலைக் கடையானது 431 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இதில் 102 குடும்ப அட்டைகளுடன் கட்டாயமேடு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையை துவக்கினால், தாய் கடையில் 329 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். எனவே, இந்தக் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை தற்போது

[2014 பிப்ரவரி 18

திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சி, கடம்பங்குடி கிராமத்தில், ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதற்கான கருத்துரு மாவட்ட வழங்கல் அலுவலர்மூலம் அனுப்பப்பட்டு ஓராண்டு காலம் ஆகிறது. கடம்பங்குடிக்கும் ஒக்கூருக்கும் இடையே 6 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதனால், கடம்பங்குடி கிராமத்திலிருக்கிற மக்கள் ஒக்கூருக்குச் சென்று பொருட்கள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். கட்டடம் கட்டுவதற்கு O.N.G.C. நிறுவனம் 4 இலட்சம் ரூபாய் நிதியுதவி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதேமாதிரி, கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடமும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, பாளையம் ஒன்றியம், ரெட்டியார்பட்டி ஊராட்சி, ரெட்டியார்பட்டி கிராமத்தில் 5,500 மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்கள் அனைவரும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள நியாய விலைக் கடையில் 1,500 குடும்ப அட்டைகள் உள்ளன. மக்கள் நீண்டநேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளதால், அங்கே பகுதி நேர கடையை அமைத்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமருகின்றேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தியாகும் நிலையில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுசம்பந்தப்பட்ட கருத்தைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**71—**

## மேய்ச்சல் நிலம்

***8838—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரியிலுள்ள செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்குக் கூடுதலாக மேய்ச்சல் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2014 பிப்ரவரி 18

*சேலம் மாவட்டம், மேச்சேரியிலுள்ள ஆடு ஆராய்ச்சி நிலையம் 162.50 ஏக்கர் நிலத்திலே இயங்கி வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்திலே 900 ஆடுகள் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கே 20 ஏக்கர் நிலத்திலே, தீவனப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தற்சமயம், அங்கே இருக்கின்ற ஆடுகளுக்கு, அங்கிருக்கின்ற ஆடு ஆராய்ச்சி நிலையம் செயல்படுகின்ற இடமே போதுமானதாக துறை கருதுகிறது. எனவே, மேற்படி இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்திலே 162 ஏக்கர் நிலம் இருந்தாலுங்கூட, அங்கு 10 ஏக்கர் நிலத்தில் மட்டுமே ஆடுகளுக்கு தீவனப் பயிர் வளர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த 10 ஏக்கரில் ஒரு ஏக்கருக்கு 15 ஆடுகள்வீதம் 150 ஆடுகள் மட்டும் வளர்த்து பராமரிக்க முடியும். தற்போது, 932 ஆடுகள் உள்ளன. இந்த ஆராய்ச்சி நிலையத்திலுள்ள 150 ஏக்கர் நிலத்தையும் சமன்படுத்தி, பண்படுத்தி, நீர் வசதி ஏற்படுத்தி, ஆராய்ச்சி நிலையத்தை ஆடுகள் ஆராய்ச்சிக்காக முன்னேற்றம் செய்திட அரசு முன்வரவேண்டும். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 2 மருத்துவர்களும், 2 மருத்துவரல்லாத காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும். அதேபோல தமிழகம் முழுவதும் மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. காலிப் பணியிடங்களை நிரப்பி, கால்நடை மருத்துவமனையின் வளர்ச்சிக்கு உதவ அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அங்கே இருக்கின்ற 900*



2014 பிப்ரவரி 18]

*ஆடுகளுக்குத் தேவைப்படுகின்ற வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு எதிர்காலத்திலே அதிகமான நிலம் தேவைப்படும் என்று சொன்னால், அதுகுறித்து துறை ஆய்வு செய்யும் என்பதை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜஸ்தான், மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு அரசு மானியம் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதனால் அங்கே ஆடு வளர்ச்சி அதிகமாக உள்ளது. தமிழகத்திலும் அதேபோல ஆடு வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற வகையிலே விவசாயிகளுக்கு மானியம் வழங்கினால் விவசாயிகள் அவர்களுடைய பொருளாதாரத்தை நிர்ணயித்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். இன்றைக்கு தமிழக அரசு விவசாயிகளுக்கு இலவசமாக ஆடுகளை வழங்குகிறது. அதேபோல, தேவையான தீவனங்களையும் கொடுத்து உதவினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராஜஸ்தான் மாநிலத்தில் மானியம் தருவதாகச் சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் விலையில்லாத ஆடுகள் ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றன, (மேசையைத் தட்டும் ஒலி) கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. யாதவர்கள்மூலம் இந்தத் தொழிலை செய்கின்ற பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட விலையில்லாத ஆடுகள், மாடுகள் கொடுக்கின்ற திட்டம் கிடையாது. தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது. எனவே, மானியம் கொடுக்கின்ற பேச்சுக்கே இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவனத்தைப் பற்றிச் சொன்னார்கள். தற்சமயம் அத்துணை மாவட்டங்களிலும் கால்நடை உலர் தீவனத்திற்கு*

[2014 பிப்ரவரி 18

*அம்மா அவர்கள் ரேஷன் கார்டு கொடுத்து இருக்கிறார்கள். வெளியிலே 7, 8 ரூபாய்க்கு உலர் தீவனம் விற்கப்படுகிறது. ஒரு ரேஷன் கார்டுக்கு ஒரு கறவை மாட்டிற்கு 3 கிலோ உலர் தீவனம் 2 ரூபாய் என்ற விலையில் இங்கே விற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 125 தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**72—**

**பட்டா**

*__27464—திரு. கார்த்திக் தொண்டைமான்:__

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மணவிடுதி மற்றும் பெருங்களூர் கிராமம், போரத்தில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மணவிடுதி கிராமம், புல எண் 491, மொத்தப் பரப்பு 59.67.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் காடு புறம்போக்கு என உள்ளதாலும், பெருங்களூர் கிராமம் போரம் புல எண் 505 மொத்தப் பரப்பு 45.54.0 எக்டேர் கிராமக் கணக்குகளில் மேய்ச்சல்தளம் என உள்ளதாலும் மேற்கண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் அல்லல்களைத் தீர்க்க வாராது வந்த மாமணியாய், காலம் தந்த கொடையாக, இந்தியர்களின் நலன் காக்கும் படையாக, மக்கள் வாழ்வு மிளிர, ஒளிர, மகத்தான திட்டங்களை நாளும் நாளும் வாரி வழங்கும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேர்த்திமிகு அரியணையை அலங்கரிக்கும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 40, 50 ஆண்டு காலமாக அப்பகுதியிலே தொடர்ந்து குடியிருந்து வரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மக்களுக்கு பட்டா வழங்க வழியில்லை என்றாலும்* one time scheme *என்ற அடிப்படையில் மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் சிறப்பு நேர்வாக ஏதேனும் செய்ய வழிவகை உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய இடங்களில் உள்ள நபர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஒருமுறை வரைமுறைப்படுத்திய பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் மேற்கண்ட மக்கள் தாங்கள் அனுபோகத்தில் இருந்துவரும் மொத்த இடத்திற்கும் முழுமையாகப் பட்டா வழங்கக் கோருவதால் வழங்க இயலாத நிலை இருந்து வருகிறது. எனினும் மேற்காணும் நபர்களுக்கு தலா ஒரு ஏர்ஸ் வீதம் பட்டா வழங்க ஆய்வு செய்து விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 18

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒலியின் ஓசையாய், பொன்னான திருவடியாய், உழைப்பின் சிகரமாய் விளங்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், மனிதநேயமிக்க துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்கள் வாயிலாக நன்றியைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் போக்குவரத்து நிறைந்த மதுரை மெயின் ரோட்டில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை தற்போது மாற்றியமைப்பதற்காக மதுரை வத்தலகுண்டு ரோட்டில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். நிலம் கையகப்படுத்தியிருந்தால் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

**திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்கிற நிலையை மாற்றி, வடக்கு வாழ்கிறது தெற்கும் தலைமையேற்கிறது என்கிற நிலைமையை உருவாக்கிட (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் உரிமையை கேட்டுப்பெறுகின்ற இடத்தில் இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தியாவிற்கே வாரி வழங்கக்கூடிய நிலையை உருவாக்க செங்கோட்டையிலே நமது கொடி பறந்திடவேண்டும், செந்தமிழ்ச் சிறப்புகளை இயம்பிடவேண்டும், நாடு காக்கும் நல்வாய்ப்பு நம்வசம் வேண்டும். நற்றமிழ்த் தாய் பொற்கரத்தில் நாடு மலரவேண்டும், சீண்டுகின்ற சீனாவின் சிண்டு ஒடுக்கப்பட வேண்டும், வாலாட்டும் பாகிஸ்தானின் வால் அறுக்கப்பட வேண்டும், கொடுங்கோல் இலங்கையின் கொட்டம் அடக்கப்பட வேண்டும், கச்சத் தீவை மீட்டு வந்து கடல் உரிமையைக் காத்திடவேண்டும், கொடியவர் கூட்டத்தைக் கூண்டில் நிறுத்தவேண்டும், இதற்கு கோடி சிங்கத்தின் தைரியம் குடியிருக்கும் வீரத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) செங்கோட்டையிலே அமர்த்திடவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, சேலம் மாநகர், தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொண்டலாம்பட்டி பகுதி 54-வது கோட்டம், சண்முகநகர், ராஜமாரியம்மன் கோயில் பின்புறம், நத்தம் புறம்போக்குப் பகுதியில் 108 குடும்பத்தினர் குடும்ப அட்டை, மின் இணைப்பு, வாக்காளர் அடையாள அட்டை பெற்று 40 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலமாக இருப்பின் ஆய்வு செய்து அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 18

**73—**

## வீட்டுமனைப் பட்டா

***6979—திரு. கோ. வெங்கடாஜலம்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய கிராமங்களிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தைச் சேர்ந்த தளவாய்ப்பட்டி மற்றும் செட்டிசாவடி கிராமங்கள் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளன. இப்பகுதி நிலத்தின் சந்தை மதிப்பு மிக அதிகமாகவுள்ளது. இருப்பினும், வீட்டுமனைப் பட்டா இல்லாத அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற ஆதி திராவிட மக்களின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய கொள்கையினை பின்பற்றும்விதமாக நிதிநிலைமை மற்றும் அப்பகுதியில் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டும் நில எடுப்புச் சட்ட விதிகளுக்குட்பட்டும் நில எடுப்பு செய்து மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம் கனிம வளங்கள் நிறைந்த பகுதியாக உள்ளதாலும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்பதாலும், மாற்று இடம் கண்டறியப்பட்டு அப்பகுதிவாழ் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

**திரு. கோ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! மனித சக்தியைக் கடந்த மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தவப் புதல்வியே! நாளைய பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரமே! அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரங்களுடனும், நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்து நாடாளப்போகும் ஏழரை கோடி தமிழக மக்களின் ஒளிவிளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தை வழிநடத்தப்போகும் 110 கோடி இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே! தினந்தோறும் நாங்கள் வணங்கும் குலதெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய பகுதிகளில் ஆதி திராவிட மக்கள் 30 ஆண்டுக்காலமாக கரட்டு புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அந்தப் பகுதி மக்களின் தேவைக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் இடங்களில் வீட்டுமனைப் பட்டா இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாமன்ற உறுப்பினர் வீட்டுமனைப் பட்டா கோரும் இடத்தில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமானால், அரசு புறம்போக்கு நிலத்தில் வழங்க வழிவகை இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஆட்சேபணையற்ற*

[2014 பிப்ரவரி 18

புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லையெனில், தனியார் நிலங்களை ஆதி திராவிடர்களுக்காக நில எடுப்பு சட்டம் 31/1978-ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது. அதன்படி மாநகராட்சி பகுதி என்றால் 1 சென்ட் நிலம், நகராட்சிப் பகுதியாக இருந்தால் ஒன்றரை சென்ட் நிலம், இதர பகுதிகள் எனில் 3 சென்ட் நிலம் என்ற அளவில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது. இந்த மனைப் பட்டா வழங்குவதற்கு, கிராமப் பகுதியாக இருந்தால் தனி நபர் ஆண்டு வருமானம் ரூ.40,000 என்றும், நகரப் பகுதியாக இருந்தால் ரூ.60,000 என்றும் இருக்கவேண்டும். அதன்படி தனியார் எவரேனும் பேச்சுவார்த்தைமூலம் வழிகாட்டி மதிப்பீட்டிற்கு ஒன்றரை மடங்குக்கு மிகாமல் இடம் வழங்க முன்வருவாரேயானால், நிலத்தை உடனடியாக கையகப்படுத்தி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய பகுதிகளில் நீண்ட காலமாக ஆதி திராவிடர்கள் மற்றும் பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குடியிருந்து வருகின்றார்கள். அந்தப் பகுதி கரட்டுப் புறம்போக்கு என்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டாவது பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தை ஆய்வு செய்து, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## ஓட்டுநர் உரிமம் தேர்வு

***23329—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வினை கண்காணிப்புக் காமிரா மூலமாக கண்காணிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை, நாமக்கல் (வடக்கு), கடலூர், சேலம் (மேற்கு), திண்டுக்கல், திருச்சி (மேற்கு), கரூர், ஈரோடு, மதுரை (வடக்கு), விருதுநகர், கோயம்புத்தூர் மையம், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் சங்ககிரி ஆகிய 14 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உள்ள ஓட்டுநர் தேர்வு தளங்கள், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான தேர்வினை கண்காணிப்புக் காமிராமூலம் கண்காணிக்கும் வகையில் தொலைநோக்குப் பார்வையோடு, புதிய தொழில்நுட்பத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 கோடி ரூபாய் நிதியினை வழங்கி இருக்கின்றார்கள். எஞ்சியிருக்கின்ற அலுவலகங்களில் படிப்படியாக ஓட்டுநர் தேர்வுத் தளங்களை முற்றிலும் கணினிமயமாக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் உரிமத்திற்காக விண்ணப்பித்தவர்களுக்கு சரியாக போக்குவரத்துச் சட்டங்கள் சொல்லிகொடுப்பதில்லை.

அதற்குரிய நடவடிக்கைகளை போக்குவரத்து அதிகாரிகள் பின்பற்றுவது இல்லை. வாகனங்களை இயக்கத் தெரிந்தவர்களை சரியாக பரிசோதித்து ஓட்டுநர் உரிமத்தினை வழங்கினால், வாகன விபத்துகளை தவிர்க்கலாம், தவிர்த்திருக்கலாம், இனி வருங்காலத்திலும் தவிர்க்கலாம். நல்ல ஓட்டுநர்களை தேர்வு செய்தால்தான் போக்குவரத்து சரியாக இயங்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கும் மற்றும் ட்ரெய்லர், ஜே.சி.பி., பொக்லைன் போன்ற வித்தியாசமான வாகனங்களை ஓட்டுவதற்குரிய உரிமம் தனியாக வழங்கப்படுமா என்பதனை தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில், தமிழகத்தில் தரமான ஓட்டுநர்களை உருவாக்கவேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கும்மிடிப்பூண்டியில் 15 கோடி ரூபாய் மதிப்பில் 55 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச தரத்திலான ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை நிறுவுவதற்கு நிதியினை வழங்கியுள்ளார்கள். ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக 13 மாவட்டங்களில் தலா ஒரு கோடி ரூபாய் மதிப்பில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். 2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் வாகனங்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 66 இலட்சத்து 25 ஆயிரத்து 653 ஆக இருந்தபொழுது, மொத்த விபத்துகளின் எண்ணிக்கை 67 ஆயிரத்து 757. 2013 ஆம் ஆண்டு மொத்த வாகனங்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 82 இலட்சத்து 86 ஆயிரத்து 777 ஆக உயர்ந்தது. ஓர் ஆண்டில் வாகன எண்ணிக்கை 16 இலட்சத்து 61 ஆயிரத்து 124 ஆக உயர்ந்திருந்தபொழுதும்கூட, மொத்த விபத்துகளின் எண்ணிக்கை 66 ஆயிரத்து 238. 2012 ஆம் ஆண்டு இருந்த மொத்த வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது 0.41 சதவிகிதமாக இருந்த விபத்துகளின் எண்ணிக்கை, 2013 ஆம் ஆண்டு



0.36 சதவிகிதமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களினுடைய சீரிய நடவடிக்கைகளினால் குறைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் முற்றிலுமாக விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதுவரை போக்குவரத்துத் துறையினுடைய வரலாற்றில், தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில், சாலைப் பாதுகாப்பு வார விழாவை சிறப்பாக தமிழகமெங்கும் கொண்டாட வேண்டுமென்றும், மக்களுக்கு எழுச்சி தினமாக, மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியவகையில் கொண்டாட வேண்டுமென்றும் அறிவுறுத்தி, அதற்காக மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் நிதியை வழங்கியுள்ளார்கள்.

மேலும், ஓட்டுநர் தேர்வுத் தளங்கள் முற்றிலுமாக கணினிமயமாக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். இதுவரை தமிழகத்தில் எந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலும் இல்லாத வகையில் முதல் கட்டமாக 14 ஓட்டுநர் தேர்வுத் தளங்களை முழுமையாக கணினிமயமாக்குவதற்கு 10 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன். ஓட்டுநர் உரிமம் பெறுவது முற்றிலும் கண்காணிக்கப்பட்டு, முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் ஆய்வாளரின் மேற்பார்வையில்தான் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ பொதுவாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக இப்பொழுது அந்தக் கருத்தை சொல்லிக்கொண்டிருக்கின்றார். முற்றிலும் சரியான தகுதி வாய்ந்தவர்களுக்கு மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதளம்மூலமாக Learner’s Licence பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[2014 பிப்ரவரி 18

முன்வருவார்களா என்பதை தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதளம்மூலம் ஓட்டுநர் உரிமம் கொடுக்க வேண்டுமென்றால் அவர்கள் test track-ல் சரியாக வாகனத்தை ஓட்டுகிறார்களா, இல்லையா என்பதை எப்படி ஆய்வு செய்ய முடியும்? அவர்கள் ஓட்டுநர் தேர்வுதளங்களில், தங்களுடைய வாகனத்தை இயக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 10 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கியிருக்கின்ற 14 அலுவலகங்களில், ஓட்டுநர் உரிமத்தைப் பெறுவதற்கு வருகின்றபொழுது, அந்த வாகனத்தை அவர் ஓட்டுகின்றபொழுது முற்றிலும் அது கணினியிலே படம் பிடிக்கப்பட்டு, அவரிடத்தில் அதை C.D. ஆக வழங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். அந்த C.D.ஐ அவர்கள் பெற்றுக்கொண்டு, நாம் என்ன தவறை செய்தோம் என்பதை தெரிந்துகொண்டு, தவறு செய்கின்றவர்கள் அதைத் திருத்திக்கொண்டு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குண்டான வாய்ப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். 10 கோடி ரூபாய் மதிப்பில் 14 அலுவலகங்கள் என்பது இதுவரை இல்லாத அளவிற்கு தமிழகத்தில் முதல் முறையாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் ஒரு துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, அந்த அலுவலகம் செயல்படுவதற்காக வாடகைக் கட்டடம் பார்க்கப்பட்டு



2014 பிப்ரவரி 18]

இருக்கின்றது. அது எப்பொழுது செயல்பாட்டிற்கு வரும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த மூன்று ஆண்டுகளில், 5 புதிய சரக அலுவலகங்களும், 18 புதிய பகுதி அலுவலகங்களும், 10 தரம் உயர்த்தப்பட்ட பகுதி அலுவலகங்களும் உருவாக்கப்பட்டன. அதேபோல இரண்டாகப் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட 6 புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை மக்களுடைய பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வால்பாறை தொகுதியில் புதிதாக அறிவிக்கப்பட்ட பகுதி அலுவலகத்தை விரைவில் பொதுமக்களுடைய பயன்பாட்டுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது திருக்கரங்களால் தொடங்கி வைக்கவுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

**நினைவு மண்டபம்**

***37518—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 பிப்ரவரி 18

*(அ) வேதாரண்யத்தில் சர்தார் வேதரெத்தினம் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் சர்தார் வேதரெத்தினம் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

**திரு. என்.வி. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக்கிக் காட்டியுள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவி, எங்கள் தெய்வத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்க! ஆசியக் கண்டத்தில் இந்தியாவை முன்னோடி நாடாக்கிட இலக்குகொண்டு இயங்கும் புரட்சித் தாய் எங்கள் அம்மா அவர்கள் வாழ்க! திக்கற்ற தென் திசை தமிழர்களுக்கு திசைகாட்டி தீர்வு புரிந்த தீரத்தாய் எங்கள் அம்மா அவர்கள் வாழ்க! ஒரு நாள் போய், மறு நாள் வராது, ஒவ்வொரு நாளும் துயரம் எய்தும் மீனவர் வாழ்வுக்கு மீட்சி வழங்கிய மேன்மைத்தாய் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாள் ஒன்றில் சாரம் சாரமாய் வரும் சாதனைகளை எண்ணிட இயலாமல் நாளே களைத்துப்போகும் சரித்திர ஆட்சி நடத்துகிற சாதனைத் தாய் எங்கள் அம்மா அவர்கள். கடல் காணாது கருகிய காவேரிக்கு, கடல் காட்டும் கலங்கரை விளக்கமாய் விளங்கும் காவேரித் தாய் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று இந்திய அரசியல் வரலாற்றிலேயே முதன்மையாக பல்லாயிரம் கோடி ரூபாய் நிதியினை வரியில்லாத வரவு-செலவுத் திட்டமாக வாரி வழங்கியிருக்கும் வள்ளல் தாய், கருணைக் கடவுள், கல்வித் தாய் எங்களின் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*



2014 பிப்ரவரி 18]

*இன்று ஜனநாயக நாடாக விடுதலை பெற்று வீறு நடைபோடும் இந்தியாவில் சுதந்திரம் பெறுவதற்காக வெள்ளையரை எதிர்த்து எழுந்த போராட்டங்களில் மிக முக்கியமான போராட்டமாகிய உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் இந்தியாவிலேயே இரண்டு இடங்கள் வரலாற்று சிறப்பு வாய்ந்தவை. ஒன்று, மகாத்மா காந்தியடிகள் அவர்கள் அறப்போர் நடத்திய குஜராத் மாநிலத்தில் உள்ள தண்டி; இன்னொன்று தென்னகத்திலே நம்முடைய தமிழ்நாட்டில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அறப்போர் நடத்திய வேதாரண்யம் ஆகும்.*

*1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி நடந்த வேதாரண்யம் சத்தியாகிரகப் போராட்டத்தில் தளகர்த்தராக களம் அமைத்து, இராஜாஜி அவர்கள் தலைமையில் போராடியவர் சர்தார் வேதரெத்தினம் அவர்கள் ஆவார். அன்று அவர் நடத்திய தீவிர போராட்டத்திற்காக சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டு, சிறைத் தண்டனையும் பெற்று, ஏககாலத்தில் மூன்று தண்டனைகளையும் அனுபவித்தவர் சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வேதரெத்தினம் அவர்கள் ஆவார். இந்திய விடுதலைப் போரில் வெள்ளையர் கொடுத்த புளியங்கொம்பு அடிகளினால் இரத்தம் சிந்தி தமிழ்நாட்டில் வேதாரண்யத்திற்கு சிறப்பிடம் தேடித் தந்த அந்தத் தியாகச் செம்மலின் போராட்டத்திற்குப் பரிசாக வேதாரண்யத்தில் ஒரு நினைவு மண்டபம் அமைத்து சிறப்பு செய்திட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் தாயுமானவர் மரபிலே 25-12-1897 அன்று பிறந்தவர்தான் சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வேதரெத்தினம் அவர்கள். மகாத்மா காந்தியடிகளின் கொள்கையினால் ஈர்க்கப்பட்ட இவர், திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களோடு இணைந்து 1930 ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் நடத்தப்பட்ட உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டார். வேதரெத்தினம் அவர்களின் கடமை உணர்வுதான், வேதாரண்யம், உப்பு சத்தியாகிரகம் நடத்திட சரியான இடமாக இராஜாஜி அவர்களால் தேர்ந்தெடுக்க*

[2014 பிப்ரவரி 18

வைத்தது. 1931-ல் திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் மாநாட்டில் அன்னாருக்கு 'சர்தார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1946 ஆம் ஆண்டு கஸ்தூர்பாய் காந்தி கன்னியா என்ற குருகுலத்தை இவர் தொடங்கினார். சுதந்திரப் போராட்டத்தில் சர்தார் வேதரெத்தினம் அவர்களின் சொத்துக்கள் அனைத்தும் ஆங்கிலேயர்களால் பறிமுதல் செய்யப்பட்டன.

அவரின் தியாகத் தலைமைமாறாத வகையில் வேதாரண்யம் வடக்கு வீதியில் உப்பு சத்தியாகிரக நினைவு மண்டபமும், அதன் முன்பு சர்தார் வேதரெத்தினம் வளைவும், இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகம் செய்த இடத்தில் உப்பு சத்தியாகிரக நினைவு ஸ்தூபியும் நினைவுச் சின்னங்களாக பரிமளிக்கின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த சர்தார் வேதரெத்தினம் அவர்களுக்கு வேதாரண்யத்தில் நினைவு மண்டபம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையினை நாளைய இந்தியாவின் வழிகாட்டி, தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்ற (மேசையைத் தட்டும் ஒலி) அளப்பெரும் பணியாற்றிவரும் தங்கத் தாரகை, தமிழ்த் தாய்க்கு சிலை கண்ட பாரதத் தாய், தமிழினத்தைக் கட்டிக்காக்கும் தமிழ்த் தாயின் திருமகள், தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கும் தமிழினத்தின் தலைமகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் மாநிலங்களிலேயே தமிழ்நாட்டின் சிறப்புப் பெற்ற முதலமைச்சராக, சிறப்பான ஆட்சியை மக்கள் நலனுக்காக நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, மணிமண்டபம் அமைப்போம் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா



2014 பிப்ரவரி 18]

அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 235 பாடல்களை எழுதியும், பாரி மன்னனின் உற்ற தோழனாகவும், பாரியின் மறைவுக்குப் பிறகு, பாரியின் புதல்விகள் அங்கவை, சங்கவையை திருக்கோவிலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த தெய்வீக மன்னனுக்கு மணம் முடித்தபிறகு, நண்பனுடைய மறைவுக்குப் பிறகு உயிரோடு இருக்க விரும்பாத காரணத்தினால், தென்பெண்ணையாற்றில் உள்ள குன்றின்மீது அமர்ந்து உயிர்நீத்தார் கபிலர். அது இன்றுவரை கபிலர் குன்றாக பாவிக்கப்பட்டு வருகின்றது. பல்லாண்டுகாலமாக கபிலர் கோட்டமாக அது அறிவிக்கவேண்டும் என்பது பொது மக்களுடைய எதிர்பார்ப்பு. 57 பாடல்களை எழுதிய ஔவையாருக்கு கோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 235 பாடல்களை எழுதிய கபிலருக்கு பல ஆண்டுகாலமாக மக்கள் கோரிக்கை வைத்தும் இன்றுவரை கோட்டம் அமைக்கப்படவில்லை. அவர் ** என்பதால் அந்தக் கோட்டம் அமைக்கப்படவில்லை என்ற கருத்துகூட பொது மக்கள் மத்தியிலே நிலவுகிறது. எனவே, உடனடியாக இந்த அரசு கபிலருக்கு கோட்டம் அமைக்க முன்வருமா எனத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர், தென்பெண்ணையாற்றின் நடுவில் உள்ள குன்றின்மீது அமர்ந்து சங்கப் புலவர் கபிலர் அவர்கள் உயிர்நீத்தார். அந்த இடமானது தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சங்கப் புலவர் கபிலர் அவர்களுக்குக் கோட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 பிப்ரவரி 18

வைத்திருக்கின்றார். அவருடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், பொற்கால முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கும்போது ** என்ற வார்த்தையை ஜாதியைக் குறிப்பிடும்படி குறிப்பிட்டார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் பேசும்போது, கால்நடையை இலட்சத்திற்கு மேற்பட்டது என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரமாக 1,127 என்று குறிப்பிட்டார். இலட்சத்திற்கு மேற்பட்டது என்று சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பார்த்துவிட்டு சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாப்பிரிக்கா நாட்டிலே மகாத்மா காந்தியோடு இணைந்து, அவர் நடத்திய விடுதலை போராட்டத்திலே பங்கேற்று, 1914 ஆம் ஆண்டு மரணம் அடைந்த மரியாதைக்குரிய தில்லையாடி வள்ளியம்மை அவர்களுடைய நூற்றாண்டு நினைவு தினம் இந்த ஆண்டு, பிப்ரவரி மாதத்திலே துவங்குகிறது. அவருடைய புகழுக்கு பெருமை சேர்க்கின்றவகையில், அந்தத் தியாகி தில்லையாடி வள்ளியம்மையினுடைய நூற்றாண்டு விழாவை தமிழக அரசே கொண்டாட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்றித்தர முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## மாணவர் விடுதி

*__24653—திரு. சோழன் சித. பழனிச்சாமி:__*

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பீர்க்கலைக்காட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பீர்க்கலைக்காட்டுக்கு அருகில் புதுவயல் என்னுமிடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகள் இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவியரின் விடுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன. எனவே, பீர்க்கலைக்காட்டில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட கிழக்குப் பருவமழை நம் வாசலுக்கு வர மறுக்கின்றது. தென்மேற்குப் பருவமழை நம் திசைகளில் தலைகாட்ட பழகுகின்றது. மனசாட்சியற்ற மத்திய அரசு, புரட்சித் தலைவி அம்மா ஆளுகின்ற பொன்னார் தமிழகத்தின்மீது மண்ணை வாரி தூற்றுகின்றது. சுற்றிலும் துரோகம் தோளுயர்த்தி நிற்கின்றது. வானம் பொழியாதா, வாழ்வு சிறக்காதா என்று தமிழர்கள் தவம் இருக்கின்ற இந்த வேளையில், வரியில்லாத ஒரு நிதிநிலை அறிக்கையைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*முற்பகல் 11-25*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒன்றைப் பதிய விரும்புகிறேன். எல்லோருக்கும் எமன் எருமை வடிவிலே வருவான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களை எதிர்ப்பவர்களுக்கு எமன் இட்லி வடிவத்திலே வரவிருக்கின்றான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

*அம்மா, ஓங்கி உயர்ந்து நிற்கின்ற இங்கிலாந்தை அன்று மீட்டுத் தந்த சர்ச்சில் அவர்களை 66-வது வயதில்தான் இங்கிலாந்தின் பிரதமராக அந்த மக்கள் தேர்வு செய்தார்கள். அம்மா, சரித்திரம் மீண்டும் திரும்புகிறது. அம்மா, அதே 66-வது வயதில் இந்தியாவின் பிரதமராகத் தேர்வு செய்ய மக்கள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழகத்தில் காங்கிரசுக்கு முடிவு கட்டினார் அறிஞர் அண்ணா. அகண்ட பாரதத்தில் காங்கிரசுக்கு முடிவு கட்டுவார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பீர்க்கலைக்காடு கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அங்கே 720 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல புதுவயல் பேரூராட்சியில் இருக்கக்கூடிய பிற்பட்டோர் நல விடுதிக்கு மாணவர்கள் வர*



*வேண்டுமென்றால், 12 கிலோ மீட்டர் தொலைவு வரவேண்டும். பீர்க்கலைக்காடுக்கு வருகின்ற மாணவர்களே 20 கிலோ மீட்டருக்கு அப்பாலிருந்துதான் அந்தப் பள்ளிக்கு வருகிறார்கள். ஆகவே, அங்கே பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் தொடங்குவதற்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய 720 மாணவர்கள் 15, 20 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வருகிறார்கள். சரியான நேரத்தில் வாகனங்களிலோ அல்லது மிதிவண்டிகளிலோ வந்து சேர முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், ஏழை, எளிய மாணவச் செல்வங்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியிலே ஒரு பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட அனுமந்தக்குடி மேல்நிலைப் பள்ளிக்கும் பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய*

[2014 பிப்ரவரி 18

*கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**77—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

*__4225—திரு. துரை. மணிவேல்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. விதிகளுக்குட்பட்டு, மக்கள் தொகைக்கேற்ப புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செந்நெல் அடி தொடரும், பொன்னி நதி பாயும், மடை புனலும் புகழ் பாடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*



2014 பிப்ரவரி 18]

*புரட்சித் தலைவி எங்கள் அம்மா, தெய்வத் திருமகன் தேவர் திருச்சிலைக்குப் பூட்டி வைத்த பொற்கவசம் மிளிரும் ஒளிபோல (மேசையைத் தட்டும் ஒலி) பூமி உள்ளவரை புகழ் மணக்கும் மீனாட்சித் தாயே எங்கள் அம்மா! எண்ணற்ற திருக்கோயில் குடமுழுக்கு பொற்கலசங்களில் ஊற்றுகின்ற புனித நீர்த் துளிகளெல்லாம் புகழ் பாடும் திருவரங்கத் தெய்வமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தேவாரம், திருவாசகம் திருமறை நூலின் பக்கங்கள் நிறைவு செய்யப்பட்ட ஒன்று. தாயே, உங்கள் சாதனைப் பொன்னேட்டின் பக்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கட்டும் தாயே!*

*முற்பகல் 11-30*

*அரியலூர் தொகுதி, அரியலூர் ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை ஊராட்சி, கள்ளக்குடி, வண்ணாரப்பேட்டை, ஏமேரி மக்கள்தொகை 5,000. அருந்தாள் ஊராட்சி, பாளையம் அர்ச்சனாபுரம் மக்கள்தொகை 3,000. ஆலந்துறையார் கட்டளை ஊராட்சி, பழனூர், வாழைக்குழி, கீழக்காங்கேயனூர், மேலக்காங்கேயனூர் மக்கள்தொகை 5,000. மேலும், 30 கிராமங்கள் அந்த ஊராட்சியைச் சுற்றியுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையம் உள்ள இடம் கீழப்பளூர் 20 கிலோ மீட்டர். சுண்டக்குடி 15 கிலோ மீட்டர்; பையூர் 13 கிலோ மீட்டர்; அரசினுடைய விதியின்படி 8 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் இருந்தால் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம். அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற ஏதுவாகவும், அவசர மருத்துவ உதவி பெறவேண்டுமென்பதாலும், கருப்பிலாக் கட்டளை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச்சென்று, ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத்தர வேண்டி அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால் சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகையும், மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகையும், இரு சுகாதார நிலையங்களுக்கிடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர்*

[2014 பிப்ரவரி 18

இடைவெளியும் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையான அரியலூர் வட்டாரத்தில் உள்ள மொத்த மக்கள்தொகை 1,51,825. ஏற்கெனவே அங்கே 6 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஒரு urban P.H.C.-ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையமும் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கேற்ப, தூரத்தைக் கருத்தில்கொண்டு, துறையின்மூலம் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

**திரு. துரை. மணிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பகுதியைப் பொறுத்தவரை அது மிகவும் பின்தங்கிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும், கருப்பிலாக் கட்டளை ஊராட்சியைச் சுற்றிலும், அதிக தொலைவில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அரசினுடைய விதிகளுக்குட்பட்டு, அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, கருப்பிலாக் கட்டளை ஊராட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஆண்டே செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையை மகத்தான சேவைத் துறையாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளில் புதிதாக 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும், இந்த



2014 பிப்ரவரி 18]

ஆண்டு, கடந்த கூட்டத் தொடரிலே, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, இதுவரை யாரும் செய்யாத அளவிற்கு 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று ஆண்டுகளில் இதுவரை மொத்தம் 165 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உறுப்பினர்கள் திரு. மு.க.ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் குறித்த உரிமைக் குழு அறிக்கைமீதான முடிவு பற்றிப் பேச முற்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஓர் உரிமை மீறல் சம்பந்தமாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவையின் தீர்மானம். அதைப் பற்றியெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையினுடைய தீர்மானம் அதைப் பற்றி பேசுவதற்கில்லை. (குறுக்கீடுகள்) அவையினுடைய முடிவு அது. (குறுக்கீடுகள்) அவையினுடைய முடிவு. அதைப் பற்றி தனிப்பட்ட முறையில் பேசுவதற்கில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அவையினுடைய முடிவு அது. அதைப் பற்றி எதுவும்

*பேசுவதற்கில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அவை உரிமைக் குழுவினுடைய பரிந்துரையினை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே அறிவித்ததற்குப் பின்னால், அந்தப் பொருள் குறித்து இங்கே விவாதிப்பதற்கோ, பேசுவதற்கோ சட்ட விதிகளில் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இந்தப் பொருள் பற்றி எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடுகள்) இதை அவையில்* raise *பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினைப் பற்றி விவாதிப்பதற்கோ, இங்கே* raise *பண்ணுவதற்கோ விதிகளில் இடமில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே அவை முன்னவர் அவர்கள் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் நேற்றைய பிரச்சினை குறித்து இங்கு பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. வி.சி. சந்திரகுமார் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் அவைக்கு வந்து தகராறு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் திட்டமிட்டுச் செயல்படுகிறீர்கள். (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது பேச வேண்டும் என்று நீங்கள் கேட்டால், நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது பேச வேண்டுமென்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) விதிகளைப் பாருங்கள். (குறுக்கீடுகள்) அவையினுடைய விதிகளைப் பாருங்கள். அவையினுடைய விதிகளைப் பாருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவையினுடைய விதிகளைப் பாருங்கள். விதிகளில் இடம் இல்லாதபோது நீங்கள்*



raise *பண்ணுவது நியாயம் அல்ல. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றே கலாட்டா பண்ண வேண்டுமென்று வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கின்றேன். (குறுக்கீடுகள்) பிறகு என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையின் தீர்ப்பு குறித்து கருத்து சொல்வதற்கு விதிகளில் இடம் இல்லை. (குறுக்கீடுகள்) கருத்து சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) கருத்து சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு முடிவோடு வந்திருக்கிறீர்கள். இதற்கு மேலும் நீங்கள் கலாட்டா செய்வீர்கள் என்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. இதுசம்பந்தமாக பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதுசம்பந்தமாக பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) முதலில் அவரவர் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கைகளுக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய இருக்கைகளுக்குப் போய் உட்காருங்கள். இங்கு பேச முடியாது. (குறுக்கீடுகள்) இங்கு பேச முடியாது. இங்கு* raise *பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அது முடிந்த சப்ஜெக்ட். (குறுக்கீடுகள்) அதுகுறித்து, அவை முன்னவர் அவர்கள் ஏற்கெனவே உங்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக எந்தவிதமான கேள்விகளையும் கேட்பதற்கு விதிகளில் இடம் இல்லை. (குறுக்கீடுகள்) விதிகளை எடுத்துப் படித்துப் பாருங்கள். இப்போது உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச முடியாது. விதிகளில் இடம் இல்லாததால் இதுகுறித்து நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேச வேண்டுமெனில், திரு. சந்திரகுமார் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார் பேசியதற்கடுத்து நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதோ திட்டம் போட்டு வந்து கலாட்டா பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய ஆணைக்குக் கட்டுப்படாமல் இதுபோன்று தவறாக*

நடந்துகொள்வது முறையற்ற செயல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சொன்ன தீர்ப்பில் இல்லாத வேறு பொருள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) அதுசம்பந்தமாக பேசுவதற்கு விதிகளில் இடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுசம்பந்தமாக பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. விதிகளில் இடம் இல்லை. (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லை. அதுசம்பந்தமாக பேசுவதற்கு விதிகளில் இடம் இல்லை. திரு. சக்கரபாணி, நீங்கள் இரண்டு, மூன்று தடவை எம்.எல்.ஏ.-வாக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு விதி தெரியாதா? (குறுக்கீடுகள்) விதி தெரியாதா உங்களுக்கு? உங்களுக்கு நடைமுறைகள் தெரியாதா? (குறுக்கீடுகள்) தெரிந்தும் வேண்டுமென்றே நீங்கள் இவ்வாறு நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்று இப்படிச் செய்கிறீர்கள். இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. நான் எச்சரிக்கிறேன். அதுகுறித்து பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. அதுசம்பந்தமாகப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லை. (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லை. விதிகளில் இடம் இல்லை. அவையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது, என்ன பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது இதுசம்பந்தமாக என்ன பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவையை நடத்தவிடாமல் வேண்டுமென்றே திட்டம் போட்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது, நீங்கள் வற்புறுத்துவது நியாயம் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றே திட்டம்போட்டு வந்திருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், விதிகளில் இடம் இல்லாதபோதும், பலமுறை நான் வற்புறுத்தி சொன்னதற்குப் பிறகும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டதற்குப் பிறகும், வேண்டுமென்றே அவையை நடத்தவிடாமல் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)



(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து கோஷமிட்டனர்; சில உறுப்பினர்கள் கீழே அமர்ந்து கோஷமிட்டனர்.)

அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். கோஷமிட விடாமல் அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) விதிகளில் இடம் இல்லாதபோது இவ்வாறு நடந்து கொள்வது நியாயமே இல்லை. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றனர்.)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) உங்களுக்கு என்ன பிரச்சினை? (குறுக்கீடுகள்) இல்லை, உங்களுக்கு என்ன பிரச்சினை? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா, உங்களுக்கு என்ன பிரச்சினை? (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) மைக் கொடுங்கள். என்ன பிரச்சினை என்று சொல்லுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையை நடத்தவிடும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னைப் பார்த்து பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன விஷயம்?

*முற்பகல் 11-40*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் அவை உரிமைக் குழுவினுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடு) அதைப் பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் அதைப் பற்றி பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள், அதைப் பற்றி பேசக்கூடாது, உட்காருங்கள்.

*(குறுக்கீடு) அதுசம்பந்தமாக பேசுவதற்கு இடமில்லை. (குறுக்கீடு) இல்லை, அதுசம்பந்தமாக பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அவை ஏற்கெனவே ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுசம்பந்தமான கோரிக்கை எதுவும் இல்லை. (குறுக்கீடு) இதுசம்பந்தமாக எந்தக் கோரிக்கையும் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். என்னை சபையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடு) என்னை சபையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற முடிவோடு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் இந்தமாதிரி பேசுவது முறையல்ல. அமைதியாக உட்கார்ந்துகொண்டு அவையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவில் ஒரு பொருள் பற்றி மூன்று முறை கூட்டங்கள் நடைபெற்றன. அவை உரிமைக் குழுவில் உறுப்பினராக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் அங்கே நீண்ட நேரம் தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்தார்கள். அவ்வாறு எடுத்து வைத்ததற்குப் பின்னால், அவை உரிமைக் குழுவினுடைய முடிவின்படிதான் நேற்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு தீர்ப்பினை வழங்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு விசாரிக்கப்பட்டது. அதில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார். மாண்புமிகு உறுப்பினர்*



*திரு. துரைமுருகன் அவர்கள் 5 நாட்கள் சபை நடவடிக்கைகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்ற உத்தரவினை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எதற்காக வழங்கினார்கள் என்பதற்கான காரண, காரியங்களை இங்கே வைக்கப்பட்ட அவை உரிமைக் குழுவின் அறிக்கையின்மூலமாக அனைத்து உறுப்பினர்களும் தெரிந்துகொள்ளலாம்.*

*இதற்குப் பின்பும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், வேண்டுமென்றே சபையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முன்பாக வந்து குழப்பத்தை ஏற்படுத்தி, அவர்கள் வலுக்கட்டாயமாக எங்களை வெளியேற்றுங்கள் என்ற ஒரு சூழ்நிலையை அவர்களாகவே உருவாக்குகிறார்கள். இது சபைக்கு உகந்த செயல் அல்ல. அதைப் பின்தொடர்ந்து, அவர்களுடைய பாணியில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்களும் இங்கே எழுந்து நின்று, வேண்டாத வீண் விவாதங்களுக்கு உட்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கையை இங்கே எழுப்பலாம். ஏற்கெனவே முடிந்த பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு விதியில் இடமில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு அவைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதற்கு நான் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அதைப் பற்றி பேச முடியாது. (குறுக்கீடு) அதைப் பற்றி பேச முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள்.*

*(புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்களும் அவையைவிட்டு வெளியேறினர்.)*

## 3. வரவு–செலவுத் திட்டம், 2014–2015, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. விசி. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 11-45

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் கேப்டன் அவர்களுக்கு நன்றியைக் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே என்னுடைய கருத்தைப் பதிவு செய்கின்றேன்.

முதலில் எனது ஈரோடு கிழக்குத் தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே அளித்து, அந்தக் கோரிக்கைகளை அவையிலே நான் பேசியதாகக் கருதி, அவற்றைப் பதிவு செய்து கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு முன்பு இதுபோல் கொடுத்தது தவறி, அது பதிவாகாமல் போய்விட்டது. எனவே, இதை நிச்சயம் பதிவு செய்து கொள்ளவேண்டும். என்னுடைய தொகுதி கோரிக்கைகள்தான்; இதிலே வேறு எந்த விஷயமும் இல்லை. இதிலே என்னுடைய கோரிக்கைகள்தான் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டுக் கடைசியாக தொகுதி கோரிக்கைகளைக் கொடுங்கள். அதைப் பதிவு செய்துகொள்ளலாம்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ஏற்கெனவே கடைசியிலே கொடுத்ததுதான் பதிவாகவில்லை. அதனால்தான் இப்போது முன்கூட்டியே கொடுத்துவிடுகிறேன்; வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே குற்றச்சாட்டாக எதையும் கொடுக்காதீர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நிச்சயமாக அதிலே எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. கோரிக்கைகள்தான் இருக்கின்றன;





நிறைவேற்றி வைக்கக்கூடிய கோரிக்கைகள்தான் இருக்கின்றன. வேறு எதுவுமில்லை. அதேபோல, இன்னும் ஒரு கோரிக்கை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைப் பற்றிப் பேச வேண்டாம். (குறுக்கீடு) அதைப் பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** இல்லை, ஒரேயொரு கோரிக்கைதான். உங்களை வேறு ஒன்றும் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவையினுடைய தீர்மானம். (குறுக்கீடு) அவையினுடைய தீர்மானம் குறித்து நீங்கள் பேசக்கூடாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன பேசப் போகிறேன் என்று கேட்டுவிட்டு, வேண்டுமானால் நீக்கிவிட்டுப் போங்கள். வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றிப் பேசக்கூடாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நான் கருத்தைத்தானே பதிவு செய்கிறேன். (குறுக்கீடுகள்) கோரிக்கைதானே வைக்கிறேன். (குறுக்கீடுகள்) கோரிக்கைதானே வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இவ்வளவு நேரம் தெளிவாக அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உரிமைக் குழு இரண்டு, மூன்று முறை கூடி இதுகுறித்து விவாதித்து, முடிவு செய்து, அவையிலே ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பற்றி விமர்சனம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) அதைப் பற்றி விவாதிப்பது முறையல்ல. அதைப் பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அதைப் பற்றிப் பேசாமல், வேறு சப்ஜெக்ட்டைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள். அதைப் பற்றிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) அதைப் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லித்தானே அவர்களை வெளியேற்றியிருக்கிறோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** உங்களிடம் வேறு என்ன கேட்கிறேன்? இதைக்கூடக் கேட்கக்கூடாதா இந்தச் சபையிலே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் அதைப் பற்றிப் பேசக்கூடாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அதை நீங்கள் ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் உங்களுடைய சௌகர்யம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைப் பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் அதைப் பற்றி பேசக்கூடாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே, மாநில அரசினுடைய மொத்த வருவாய் வரவுகள் 1,27,389.83 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்குச் செலவுகள் 1,27,100.47 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதிலே சம்பளத்திற்காக என்று 35,720.86 கோடி ரூபாயும், ஓய்வூதியத்திற்காக என 16,020.63 கோடி ரூபாயும், மானியம் மற்றும் உதவித் தொகைக்காக என்று 49,068.03 கோடி ரூபாய் எனவும், வட்டி செலுத்துவதற்காக மட்டும், 15,463.90 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தவகையிலே பார்க்கின்றபோது, கிட்டத்தட்ட 1,14,273.42 கோடி ரூபாய் செலவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிச் சொல்லப்பட்டிருக்கின்ற நிலையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே விதி 110-ன்கீழ், ** அறிவிப்புகளை இந்த மூன்றாண்டுகளிலே கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிவிப்புகளையெல்லாம், ** தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிப் பணிகளை நீங்கள் எப்படி செய்யப்போகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திட்டங்களின்மூலமாக இவ்வளவு தொகையை இந்த அவையிலே அறிவித்திருக்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் தவறான கருத்தினை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் அதைப் பற்றி ஏதாவது குறிப்பு வைத்திருந்தால், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிட்டுத்தான், அதுகுறித்துப் பேசவேண்டும். ஆகவே, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஆதாரமில்லாமல் அதுபோன்று பேசாதீர்கள். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால் என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள். நான் அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அதைப் பற்றி விவரம் இருந்தால் என்னிடம் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் அதிலே ஒரு தொகையைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குண்டான புள்ளிவிவரம் உங்களிடம் இருந்தால், என்னிடம் கொண்டுவந்து கொடுங்கள். அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். நீங்கள் இப்போது வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** விதி 110-ன்கீழ் பல அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்; ** திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதுகுறித்துத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறிப்பிட்ட தொகை தொடர்பான புள்ளிவிவரத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், சொன்னால் எதையும் செய்யாமல் விடமாட்டார்கள் என்பதுதான் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் பொறுமையாக இருக்கவேண்டும். மூன்று ஆண்டு காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றிச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

*சரித்திர ஆட்சியை நீங்கள் கூர்ந்து கவனித்தீர்களென்றால் உங்களுக்கு நன்றாகப் புரியும். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்திய அளவில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மந்த சூழ்நிலை, நிதி நெருக்கடி போன்ற இவ்வளவு பிரச்சினைகளிலும், மாநிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய நம்முடைய சொந்த வரி வருவாயிலிருந்து ஒரு திறமையான நிதி நிருவாகத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வாறெல்லாம் கையாண்டு, மக்களுக்குச் சேரவேண்டிய அனைத்து நலத் திட்ட உதவிகளையும் தொலைநோக்குப் பார்வையுடைய திட்டங்களாக மாற்றி, பயன்கள் அனைத்தும் பயனாளிகளுக்கு நேரடியாகக் கிடைக்கின்றவகையில் ஒரு சிறப்பான ஆட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அதில் ஒரு சிறிய, கடுகளவுகூட நீங்கள் குற்றம் சொல்ல முடியாது. நடைமுறையில் ஏதாவது சிக்கல் இருந்தால் அதை நீங்கள் எடுத்துச் சொல்லலாம். ஆனால், பொத்தாம் பொதுவாக நீங்கள் வாய்க்கு வந்தபடி சொல்லிவிட்டால், புள்ளிவிவரங்கள் இல்லாமல் அது அவைக் குறிப்பில் ஏறாது, அது உகந்த வாதம் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புள்ளிவிவரங்கள் என்றால் நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதன் அடிப்படையிலேதான் சொல்லியிருக்கிறேன். ** என்னிடத்தில் புள்ளிவிவரங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லாததை நீங்கள் எவ்வாறு சொல்ல முடியும்? அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அந்த புள்ளிவிவரம் இல்லாமல் இருக்கும்போது திரும்பத் திரும்ப நீங்கள் அதே வார்த்தையை அவைக் குறிப்பில் பதிவு செய்ய முயற்சிக்க வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த ஒரு திட்டத்தை அறிவித்தாலும் அந்தத் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டு, செயலாக்கத்திற்கு படிப்படியாக வந்து, நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுதான் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் பொத்தாம் பொதுவாக அறிவிக்கமாட்டார்கள். அறிவித்தால் அந்தப் பணியை செய்யாமல் விடமாட்டார்கள் என்பதுதான் சரித்திரம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், வேறு பொருள் பற்றிப் பேசுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2011-ல் ரூ.1,01,349.45 கோடி அளவிற்கு தமிழக அரசுக்குக் கடன் இருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் 28,267 கோடி ரூபாய் கடன் வாங்க அனுமதிக்கப்பட்டாலும், தமிழக அரசு 25,000.22 கோடி ரூபாய் மட்டுமே கடன் பெறுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன்மூலம் 31-3-2015-ல் தமிழ்நாட்டின் மொத்த கடன் தொகை ரூ.1,78,170.76 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வட்டி செலுத்துவதற்காக மட்டும் ரூ.15,463.90 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுமார் நான்கு ஆண்டு காலங்களில் 77,000 கோடி ரூபாய் கடன் சுமை அதிகரித்துள்ளது என்பது இதன்மூலம் தெளிவாகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நிதி நிருவாகத்தினுடைய அளவுகோலின்படி கடன் வாங்கப்படுவது என்பது ஒரு தொடர் நிகழ்ச்சி. ஆனால், வாங்கப்படுகின்ற கடன் எந்த மாதிரியான திட்டங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது என்பதுதான் இங்கே நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம். வாங்கப்படுகின்ற கடன் முழுவதும் திட்ட செலவினங்களுக்காக செலவழிக்கப்படுகிறது. அதுதான்* Asset. *சொத்துக்களை உருவாக்குவதற்காக கடன் வாங்கப்படுகிறது. அதுவும் மத்திய அரசின் சட்டத்தின்மூலமாக*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

ஒரு வரையறை செய்யப்பட்டிருக்கிறது. அது தமிழ்நாடு பொறுப்புடைமை விதி, சட்டம் *2003*, பிரிவு *(3)*, உட்பிரிவு *(1)*-ன்கீழ், அதாவது *3* சதவீதத்திற்குள் கடன் தொகை இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த *3* சதவீதத்திற்கு உட்பட்டுத்தான் கடன் வாங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவ்வாறு வாங்கப்பட்ட கடன் அளவும் தொடர்ந்து *3* ஆண்டுகளாக வரையறைக்குட்பட்டதாகத்தான் இருக்கிறது. வரையறையை மீறி கடன் வாங்கப்படவில்லை. அதிலும், வாங்கப்பட்ட கடன் அளவும், கடன் வாங்கும் அளவுகோலில் குறிக்கப்பட்டிருக்கும் அளவுக்கும் குறைவாகத்தான் வாங்கப்பட்டு, நிதிநிலை பொறுப்புடைமை சட்ட விதிகள் முழுமையும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2011* ஆம் ஆண்டில் மட்டும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *2011* ஆம் ஆண்டில் மட்டும் *11.07* சதவீதம் வட்டிக்காக செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல, *2014-2015* ஆம் ஆண்டில் *12.14* சதவீதமாக அது அதிகரித்திருக்கிறது. கடந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளிலும், *2014-2015*-ல் *10.99* சதவீதம் மட்டுமே வட்டி செலுத்த வேண்டியிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு சொல்லப்பட்டிருப்பதற்கு மாறாகவே இன்றைக்கு *1.15* சதவீதம் மொத்த வருவாயிலிருந்து வட்டி அதிகமாக செலுத்தவேண்டிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *11-55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும், ஒரு



2014 பிப்ரவரி 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

திட்ட மதிப்பீட்டை நாம் சொல்கின்றோம். அரசு தொடர்ந்து ஓர் ஆண்டு அதனை செயல்படுத்துகின்றபோது அந்த நிதியாண்டு முடிவதற்குள் திருத்த மதிப்பீடு வரும். திருத்த மதிப்பீட்டின் கணக்கினைத்தான் திரு. சந்திரகுமார் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். நாம் கட்டுகின்ற வட்டியின் அளவும் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கின்றது. ஒரு வரையறையை மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கின்றது. அந்த கட்டுப்பாட்டுக்குள்தான் வட்டியின் அளவும் இருக்கின்றது என்பதை மாண்புமிகு திரு. சந்திரகுமார் அவர்களுக்குத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் இவ்வாறு சொல்கிறோம் என்று சொன்னால், எங்கள் பகுதியிலே சொல்வார்கள். வட்டிக்கு பணம் வாங்கி செலவழித்தால், அந்த வட்டியைக் கட்டுவதற்குகூட வட்டிக்கு பணம் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் வட்டிக்கு பணம் வாங்க வேண்டாம் என்பதுதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் கட்சிகள் தமிழ்நாட்டினை ஆண்டு வந்திருக்கின்றன. அந்த ஆட்சியினுடைய திறன்களையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுக்காலங்களில் எவ்வாறு இந்த நிதிநிலையைக் கையாண்டு கொண்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். அதாவது இந்தியாவில் பெரிய அளவில் பொருளாதார மந்தம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. பொருளாதார மந்த நிலையினால் மற்ற மாநிலங்கள் பாதிப்பு அடைந்துள்ளன. தமிழ்நாடும் பாதிப்பு அடையும் என்ற சூழ்நிலை வந்திருந்தாலும், கிட்டத்தட்ட பாதிக்கு மேலாக *49,000* கோடி ரூபாயை சமூக நலத் திட்டங்களுக்காக மட்டும் ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொருளாதார பாதிப்பினால் மக்கள் எந்த துன்பத்தினையும் அடைந்து விடக்கூடாது என்பதற்காக முழுப் பாதுகாப்பையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

அனைத்துத் தரப்பு மக்களும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களும் பொருளாதாரத்தில் ஒரு சம நிலையை அடைய வேண்டுமென்ற இலக்கினை நோக்கித்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு நல்லாட்சியைத் தொடர்ந்து மூன்றாம் முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்தும் சட்டத்திற்குட்பட்டு இந்த நிதிநிலை கையாளப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழக மின் வாரியமே உடன்குடி அனல் மின் நிலையத்தை ரூ.8,000 கோடி செலவில் தொடங்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே அது குறித்த தகவல் எதுவுமே இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் அறிவித்த எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்தாமல் விடுவதில்லை. அந்த அடிப்படையில் உடன்குடியில் 660 மெகா வாட் திறன் மற்றும் 1,320 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்குவதற்கான எல்லா அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்கின்ற நிலையில் இருக்கிறது. அநேகமாக ஓரிரு வாரங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு,* letter of indent *ஒப்புதல் கடிதம் அவர்களுக்கு வழங்கப்படும். அந்தத் திட்டம் ஓரிரு வாரங்களில் இறுதி செய்யப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*



2014 பிப்ரவரி 18]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று சோலார் எனர்ஜிமூலம் 3,000 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே சோலார் எனர்ஜிமூலம் மின் உற்பத்தி செய்வது சம்பந்தமாக எதுவுமே சொல்லப்படவில்லை. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டதாக தெரியவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிரச்சினைகளையெல்லாம் மின்சார வாரிய மானியக் கோரிக்கைகளில் விளக்கிக் கூறலாம் என்றிருந்தேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இப்போது இந்த விளக்கத்தை தெரிவிக்கின்றேன். கடந்த 2012 ஆம் ஆண்டு, தமிழகத்தில் சூரிய மின் சக்திமூலம் 3,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருந்தது. அதன்படி முதல் வருடத்தில் சூரிய மின் சக்திமூலம் மின் உற்பத்தி செய்வதற்கு 1,000 மெகா வாட் வீதமும், மூன்று ஆண்டுகளுக்கு 3,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 1,000 மெகா வாட் மின் உற்பத்தி கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதில் 698 மெகா வாட் அளவிற்குத்தான் மின் உற்பத்தி செய்வதற்காக ஒப்பந்தப்புள்ளி எடுக்க கம்பெனிகள் கலந்து கொண்டன. ஆனால் 1,000 மெகா வாட் அளவிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கேட்டிருந்தாலும்கூட, 698 மெகா வாட் மின் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, அந்த கம்பெனிகளுக்கு* letter of indent *வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்புதல் கடிதமும் வழங்கப்பட்டுவிட்டது. அவர்கள் விரைவில் வேலைகளைத் தொடங்குவார்கள். அவ்வாறு தொடங்குவதற்கும், மத்திய அரசு சட்டத்தின்படி மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் அனுமதி பெறவேண்டும். நாம் 698 மெகா வாட் கொள்முதல் செய்திருக்கின்ற இந்த சூரிய ஒளி மின்சக்திக்கு ஒப்புதல் பெறுவதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த விண்ணப்பத்திற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 பிப்ரவரி 18

ஆணையம் இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை. அவர்களின் ஒப்புதலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அவர்கள் ஒப்புதல் கிடைத்தவுடன் ஏற்கெனவே ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதால், அந்த ஆணை கிடைக்கப்பெற்றவுடன் அவர்கள் உடனடியாக உற்பத்தியைத் தொடங்கிவிடுவார்கள். இதுதான் நிலை.

*நண்பகல் 12-00*

அதுமட்டுமல்ல; மற்றொன்று, இதிலே இருக்கின்ற ஒரு இடர்ப்பாட்டையும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். சூரிய ஒளி மின்சக்திக் கொள்கையிலே அம்மா அவர்கள் அளித்த திட்டப்படி உயரழுத்த மின்சாரம் Commercial H.T.P. வணிக உயரழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் ஆண்டுக்கு தங்களுடைய மின் பயன்பாட்டில் 3 சதவிகிதம் சூரிய ஒளி மின்சக்தியைப் பயன்படுத்தவேண்டும். இரண்டாவது ஆண்டிலே 3 சதவிகிதம், ஆக மொத்தம் இரண்டு ஆண்டுகளுக்குள் 6 சதவிகித மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்தவேண்டுமென்று நம்முடைய திட்டத்திலே கொண்டு வந்திருந்தோம். ஆனால், அதிலே தனியார் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்குத் தடையாணை பெற்றுவிட்டார்கள். ஆக, 6 சதவிகித சூரிய ஒளி மின்சக்தியை பயன்படுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாது என்று தனியார் வழக்கு தொடுத்து, அதிலே அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பினையும் பெற்றிருக்கிறார்கள். இப்போது நீதிமன்றத்தின் தடை இருப்பதால், S.P.O. (Solar Power Obligation) என்ற கொள்கையையும் அமல்படுத்த இயலவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும் நீதிமன்றமே குறுக்கிட்டாலுங்கூட, அதிலே தன்னுடைய சாதுரியத்தால், ஆளுமைத் திறமையால் இதை எப்படி எதிர்கொள்வது என்று யோசித்து அதற்கான மாற்று வழியையும் கண்டுபிடித்து, 6 சதவீதம் மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை என்ற உத்தரவை நீதிமன்றம் வழங்கினாலுங்கூட, தமிழ்நாடு மின்சார வாரியமும் தமிழ்நாடு மாநில அரசும் தனது சொந்தப் பொறுப்பிலே அந்த 698 மெகா வாட் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கு உத்தரவை வழங்கியிருக்கிறது. அதனால் ஏற்படக்கூடிய வரியிழப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நீங்கள் கவலைப்படவேண்டாம். நீதிமன்றம் தடையாணை வழங்கினாலும், மாற்று வழியிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே கிரானைட் குவாரியிலே நடைபெற்ற ** இந்த அரசு வந்து விசாரித்து, அதிலே சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கு எல்லாம் தொடுத்து இன்றைக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது. சிறையிலே இருப்பவர்கள் இருந்தார்கள். அதேபோல, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் கடற்கரையோரம் உள்ள தாது மணல்களை ** எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலே ஐ.ஏ.எஸ். அதிகாரி (குறுக்கீடு) நான் முழுவதுமாக சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதல் வாதமே தவறு. ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதுகுறித்து முழுமையாக விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கோர்ட்டில் வழக்கு நிலுவையில் இருக்கின்றது. கோர்ட்டில் இருக்கின்ற ஒரு பொருள் பற்றி நீங்களாக ஒரு தீர்ப்பினை அளிக்கக்கூடாது. கோர்ட்டில் இருந்து என்ன தீர்ப்பு வருகிறது என்று பார்த்து அதற்கு முன்னால் உங்களுடைய comments-ஐ நீங்கள் சொல்லலாமேயொழிய, கோர்ட்டில் வழக்கு இருக்கும்போது நீங்களாகவே உங்களுடைய

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தீர்ப்பாக அதுவும் சட்டமன்றத்தில், இந்த மாமன்றத்தில் பதிய வைக்கக்கூடாது. இந்த நடைமுறையை நீங்கள் கடைப்பிடிக்கக்கூடாது என்பதை நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த இரு பிரச்சினைகளும் உரிய விசாரணையில் இருக்கின்றன என்பதையும் இதுகுறித்து மீண்டும் விவாதத்தைத் தொடரவேண்டாம். வேறு பொருள் பற்றி பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், நீதிமன்றத்தில் இருப்பதைப் பற்றிப் பேச வேண்டாம். வேறு பொருள் பற்றிப் பேசுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க வந்தது, ககன்தீப் சிங் பேடி என்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரி கொடுத்த அறிக்கையை வெளியிடலாமே என்பது பற்றிதான் பேச வந்தேனே தவிர, நீதிமன்ற விஷயத்திற்குள் நான் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் சொன்ன தாது மணல் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கிரானைட் பிரச்சினையாக இருந்தாலும் சரி, விசாரணை செய்வதற்கு ஓர் அதிகாரியை நியமித்திருக்கிறோம். அவர் விசாரித்து அறிக்கை கொடுப்பார். அந்த அறிக்கையை நாம் தீர்ப்பாக எடுத்துக்கொள்ள முடியாது. மறுபடியும் அதுகுறித்து தீவிரமாக விசாரித்து, பரிசீலனை செய்து, இவை எல்லாம் உண்மையிலேயே நடைபெற்றனவா என்பதனை அறிந்த பிறகு ஒரு முடிவுக்கு வந்து அதன் பிறகு அரசு வழக்குத் தொடுக்கும். ஆனால், மதுரையில் அத்தனை குவாரிகளும் முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் புகார் வந்தவுடனேயே நிறுத்தப்பட்டு அவர்கள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை எந்த மாநில அரசும் செய்ய முடியாத காரியங்களைச் செய்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நடவடிக்கை எடுத்து இரண்டு ஆண்டுகளாக அந்தத் தொழில் முடக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அது மாண்புமிகு முதலமைச்சர்



புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் முடியும். வேறு யாராலும் முடியாது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருள் குறித்தும் தம் கருத்தை சொல்லவோ, அப்பொருள் பற்றி குறிப்பிடவோ கூடாது என்று பேரவை விதி 92 (i)-ன்கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த சப்ஜெக்ட் குறித்து பேசாதீர்கள். நீங்கள் வேறு பொருள் குறித்து பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள்தொகையில் 48.45 சதவிகித மக்கள், அதாவது சுமார் 3½ கோடிக்கும் அதிகமான மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. மொத்த மக்கள்தொகையில் பாதிக்கு மேலானவர்கள் வசிக்கும் நகர்ப்புறங்களின் வளர்ச்சிக்கு இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 3,734 கோடி ரூபாய் என்பது மிகமிகக் குறைவாக இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாக இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல், நகர்ப்புறத்தில் 17.28 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. அதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் என்ற திட்டம் துவக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்த நிதியாண்டிலே 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை சதவீதக் கணக்கில் பார்க்கும்போது, ஒரு குடும்பத்திற்கு ரூ.1,150 என்ற வகையிலே மட்டும் வருகின்றது. எனவே, இந்த நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்திற்கு இன்னும் அதிகமான அளவிலே நிதியை ஒதுக்கி வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்கள் 17.78 இலட்சம் என்று பல புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நிதியினை அதிகப்படுத்தி, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களின் நிரந்தர வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

நகர்ப்புறங்களில் குடிபெயர்ந்திருப்பதனால் அவர்களுக்கு அதிக நிதியை ஒதுக்கவில்லை என்ற ஒரு தவறான கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் பதிய வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சி அமைப்புகள் இரண்டுவிதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று நகராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் என்றும், மற்றொன்று கிராமப்புறங்களில் உள்ள ஊராட்சிகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010-2011-ல் உள்ளாட்சி அமைப்பில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு 5,249 கோடி ரூபாய் என்ற அளவில்தான் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீர்மிகு நல்லாட்சியில் 2011-2012-ல் ரூ.6,833 கோடியாகவும், 2012-2013-ல் அது ரூ.7,925 கோடியாகவும், நடப்பு ஆண்டில் 2013-2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் அது ரூ.10,173 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, வருகின்ற நிதியாண்டான 2014-2015-ல் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக ரூ.10,177 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார், நீங்கள் 22 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 22 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அமைச்சர்கள் பேசிய நேரத்தையும் சேர்த்து சொல்கிறீர்கள். நான் 10 நிமிடங்கள்கூட பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்கு கணக்கு இல்லை. நான் சபையை நடத்த வேண்டும். நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேசுங்கள். நான் அதற்கு என்ன செய்ய முடியும்? இன்றைக்கு இன்னும் 9 பேர் பேச வேண்டியுள்ளது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4,500 கோடி ரூபாய் பயிர்க் கடன்



2014 பிப்ரவரி 18] [திரு. வி.சி. சந்திரகுமார்]

வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 3,948 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.552 கோடி இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால், இந்த ஆண்டு அதை ரூ.5,000 கோடியாக உயர்த்தி இருக்கிறீர்கள். அவ்வாறு உயர்த்தப்பட்ட அந்த முழுத் தொகையும் பயிர்க் கடனாக வழங்கப்படுமா என்பதை இந்த நேரத்திலே என்னுடைய கேள்வியாக எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இந்த நிதியாண்டு முடியவில்லை. மார்ச் 31 வரை உள்ளது. அது முடிந்த பின்னர் முழுக் கணக்குகளும் வந்த பிறகு முழுமையாக நூற்றுக்கு நூறு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, ஏற்கெனவே இவர் கடன் அளவைப் பற்றி இங்கே பல வினாக்களை எழுப்பியிருந்தார். கடன் பெறாமல் எந்த அரசும் நடைமுறையில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ள முடியாது. உரிய கடனைப் பெறலாம். அதாவது அந்தக் கடனை அடைக்கக்கூடிய வழிவகைகளையும் இந்த அரசு ஆராய்ந்து பார்த்து கடன் வழங்கலாம். அதில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை. அதாவது, குடும்பத்தினுடைய வரவு-செலவு, நாட்டினுடைய வரவு-செலவு, எதுவாக இருந்தாலும் வரவுக்குள் செலவு இருக்கவேண்டும். உதாரணமாக, சில பிரச்சினைகளில் நாம் வீட்டினுடைய பல பணிகளுக்கு கடன் வாங்குவோம். அந்தக் கடனை நமக்கு வருகின்ற வருமானங்களை வைத்து அடைத்துக்கொள்ளலாம். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், கடன் அளவு வளர்ந்து, அதன் அளவுகோல் மாநில மொத்த உற்பத்தியின் மதிப்பில் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். இந்த மூன்று ஆண்டுகளாக அந்தக் கட்டுப்பாட்டுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் நடைபெற்று இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 2011-2012-ல் மாநில ஒட்டுமொத்த உற்பத்தியில் கடன் அளவு 25.02 சதவீதம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

*இருக்கலாம் என்பது மத்திய அரசு வரையறுத்துள்ள கட்டுப்பாடு. ஆனால் மாநில அரசு, வாங்கிய கடன் அளவு 2011-2012-ல் 19.84 சதவீதமாகவும், 2012-2013-ல் இது 19.25 சதவீதமாகக் குறைந்தது. மீண்டும் 2013-2014-ல் 19.25 சதவீதத்திலிருந்து 18.94 சதவீதமாகக் குறைந்து, வருகின்ற நிதியாண்டில், 2014-2015-ல் 18.94 சதவீதமாக இருக்கும் என்ற வரையறைக்குட்பட்டுத்தான் கடன் வாங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு சந்திரகுமார் அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் பேசும்போது, 4,500 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டது. ஆனால், 3,900 கோடி ரூபாய்தான் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், சென்ற டிசம்பர் வரை வழங்கப்பட்ட தொகை அது. தகுதியுள்ள விவசாயிகள் யாராவது பயிர்க் கடன் கேட்டு விண்ணப்பித்து யாருக்கும் வழங்கவில்லையென்ற குறை எந்த மாவட்டத்திலாவது வந்திருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகத் தெரிவிக்கவேண்டும். அனைவருக்குமே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. பயிர்க் கடன் பெற்று குறுகிய காலத்தில் பயிர்க் கடன்களைத் திருப்பிக் கட்டியவர்களுக்கு, வட்டியை இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்களது அரசுதான் செலுத்தி வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஓர் அரசும் இந்தியாவில் இதுவரை செலுத்தவில்லை. மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், முதலில், 2011-2012-லே பயிர்க் கடனுக்காக ரூ.3,000 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு, அது 3,282 கோடி ரூபாயாக வழங்கப்பட்டது. அதேமாதிரி 2012-2013-லே வழங்கப்பட்டு வந்ததுதான், சென்ற 2013-2014 டிசம்பர் வரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 3 மாதங்கள் இருக்கின்றன. பருவ காலம் என்று ஒன்று இருக்கிறது.*



2014 பிப்ரவரி 18][திரு. செல்லூர் கா. ராஜு]

*அந்தப் பருவ காலத்தில் மீதமுள்ள தொகை வழங்கப்படும். விவசாயிகளுடைய நலன் கருதி அவர்கள் வட்டிக்கு வாங்கிய கடனில் அந்த வட்டியை, எந்த ஒரு முதலமைச்சரும் தர முன்வராத சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 200 கோடி ரூபாய் வரை தனது அரசே செலுத்துவதாக தாயுள்ளத்தோடு அறிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் பேசும்போது தாது மணல் பிரச்சினை பற்றி இங்கே சொன்னார்கள். இந்தப் பிரச்சினை அரசினுடைய கவனத்திற்கு வந்தபோது, உடனடியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு அதுகுறித்து விசாரிப்பதற்கு உயர் அலுவலரை நியமித்து தற்போது முழுவதுமாக தாது மணல் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடத்திற்குள் உரையை முடியுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மயிலாடுதுறையிலே பேருந்து நிலையம் கட்டுவதற்கு 2006 ஆம் ஆண்டில் இன்றைய முதலமைச்சர் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், கடந்த 2, 3 கூட்டத் தொடர்களாக அதுகுறித்து பேசப்பட்டும், இதுவரையிலும் அதற்கான பணிகள் துவங்கப்படவில்லை. ஒவ்வொரு முறையும் அமைச்சர் பெருமக்கள் பேசுகின்றபோது மாண்புமிகு முதல்வருடைய திருக்கரங்களால் துவங்கப்பட்ட திட்டங்களெல்லாம் நிச்சயமாக செய்து முடிக்கப்படும் என்று சொல்கிறார்கள். 2006-லிருந்து 2011 வரைக்கும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறை ஆட்சிப் பொறுப்பேற்றபோது இந்தப் பணி துவங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். நாங்களும் இல்லையென்று சொல்லவில்லை. மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே முதல்முறையாக நானும், அந்த மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். அந்த ஆய்வின் அடிப்படையிலே, அந்தப் பகுதியில் கால்வாய் செல்கின்ற காரணத்தால், அங்கே சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் வேறு இடம் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. அந்த மாற்று இடம் கையகப்படுத்தப்பட்டவுடனே பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நலப் பணிகள் எதுவுமே எந்த நேரத்திலும் தடை செய்யப்பட முடியாது.

சில சூழ்நிலைகள் காரணமாக கால நேரம் நீட்டிக்கப்படுகின்றனவே தவிர மற்றபடி அந்தப் பணிகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். புது சப்ஜெக்டிற்கெல்லாம் போகாதீர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** புது சப்ஜெக்டிற்கு போகவில்லை. ஒரு நிமிடம். ஏன் இதைக் கேட்கிறோம் என்றால், நேற்று எங்களுடைய திருக்கோவிலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய பகுதியில் பேருந்து நிலையப் பிரச்சினை, இன்றைக்கு மயிலாடுதுறை. இப்படி ** எங்கள் மனதிலே ஒரு கருத்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்நோக்கம் கற்பித்து நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அது மாதிரியெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) ஆதாரத்துடன் பேசவேண்டும். நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உங்களை ** இன்று இந்த நிமிடத்தில் திரு. சந்திரகுமார் மாண்பு பொருந்திய இந்த அவையிலே பேசுவதற்கே வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வையால், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் எழுந்து நிற்கின்றீர்கள்?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்காக வெயில் என்றும் பாராமல், மழை என்றும் பாராமல் கடுமையாக உழைத்து உங்களுக்காக வாக்குகளை சேகரித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உங்களை வெற்றிபெறச் செய்த காரணத்தால்தான் (குறுக்கீடுகள்) இந்த அவையிலே நீங்கள் அமர்ந்திருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் பேசி முடிக்கின்றவரை உட்காருங்கள். உணர்ச்சிவசப்படுவதிலே எந்தப் பலனும் இல்லை. உங்கள் தலைவர் மாதிரியே நீங்களும் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள். இது தவறான கருத்து அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்று நீங்கள் அனைவரும் எழுந்து நிற்பது முறையல்ல.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவரைப் போலவே இருக்கிறார்கள். ஒரு கேள்வி கேட்டால், அந்தக் கேள்வியை முழுமையாக உள் வாங்கிக்கொண்டு பிறகு பதில் சொல்லவேண்டும். ஏதாவது கேள்வி கேட்டுவிட்டு ஆ, ஊ என்று சொன்னால் என்ன பிரயோஜனம்? (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *இதற்கும் பதில் தருகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் வெற்றி பெற்றீர்கள் என்று இப்போதும் ஆணித்தரமாக சொல்லி, அந்த வெற்றிக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா மட்டும்தான் காரணம் என்பதையும் சொல்லி, அதற்கு அடுத்ததாக நாங்கள் இருந்ததால்தான் வெற்றி பெற்றோம் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே அதற்கு விடையாக, (குறுக்கீடுகள்) பொறுமையாகக் கேளுங்கள். அவசரப்படாதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, அதற்கும் அடுத்ததாக, நாங்கள் இருந்ததால்தான் வெற்றி பெற்றோம் என்று நீங்கள் சொன்ன உடனேயே, 6 மாதங்களில் உள்ளாட்சிமன்றத் தேர்தல் வந்தது. (குறுக்கீடுகள்) நாடாளுமன்றத் தேர்தலைவிட, சட்டமன்றத் தேர்தலைவிட, உள்ளாட்சிமன்றத் தேர்தல் என்பது மிக முக்கியமான தேர்தல். அந்தத் தேர்தலில் யாருக்குக் கூடுதலாக செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள்தான் வெற்றி பெறமுடியும். அந்தத் தேர்தலில் இந்தியத் துணைக் கண்டத்திற்கே பறைசாற்றுகின்ற வகையிலே, தமிழகம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பின்னால்தான் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) 90 விழுக்காடு நிரூபித்துள்ளது. எத்தனை பதவிகள்? உள்ளாட்சிப் பதவிகளில் மட்டும், 1,19,000 பதவிகளில் 95 விழுக்காடுகளுக்கு மேல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் வெற்றி பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளாக வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்குக் கிடைத்த வெற்றி. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தியாகத்திற்குக் கிடைத்த வெற்றி. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மக்களுக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்களே அவர்கள் விரல் காட்டியதற்காகக் கிடைத்த வெற்றி. உங்களுக்காகக் கிடைத்த வெற்றி அல்ல. இப்போது நீங்கள் பேசுகின்றீர்கள் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உழைப்பால் கிடைத்த வெற்றி, ** என்று சொல்கிறீர்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் மக்களை மட்டும்தான் நேசிக்கின்றார். இன்று, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த 20 கிலோ*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



*அரிசி இலவசமாக வழங்கக்கூடிய திட்டத்தின்மூலம், தி.மு.க. தொண்டனுடைய வீட்டிலே இருக்கின்ற மனைவியும் 20 கிலோ அரிசியை வீட்டிற்கு வாங்கி வந்து உணவு செய்துகொண்டுதான் இருக்கிறார். அதேபோல உங்களுடைய குடும்பத்திலே இருக்கின்றவர்களும், வாங்கிச் செல்கின்றார்கள்.*

*பிற்பகல் 12-20*

*அதைப்போலவே, விலையில்லாத மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் கொடுத்தார்கள். கடந்த ஆட்சியில் முன்னாள் முதல்வர் கருணாநிதி இலவசமாக தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்தார். அந்தத் தொலைக்காட்சிப் பெட்டியை மாவட்டச் செயலாளர் யாருக்குக் கொடுக்கச் சொல்கிறாரோ அவருக்குக் கொடுத்தார்கள். ஒன்றியச் செயலாளர் யாருக்குக் கொடுக்கச் சொல்கிறாரோ அவருக்குக் கொடுத்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் என்று சொல்லி கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. அவர் எந்தக் கட்சி என்பது முக்கியம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் என்னுடைய மக்கள்; அவர் தி.மு.க.-வைச் சேர்ந்தவராக இருக்கலாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம். நான் இந்த நாட்டின் முதலமைச்சர், என்னுடைய மக்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். சமதர்ம சமுதாயத்தை, பொதுவுடமை இயக்கத்தை (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளடக்கி நல்லதோர் ஆட்சி செய்துகொண்டிருக்கிற எங்கள் காவல் தெய்வம், இந்தத் தமிழகத்தைக் காக்கின்ற தெய்வம், எதிர்காலத்தில் இந்தியத் திருநாட்டைக் காக்கின்ற தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) உலக அரசியலில் இந்தியாவை வல்லரசாக மாற்றக்கூடிய திறமை படைத்தவர், தின்மைப் படைத்தவர், உறுதி படைத்தவர், உலகத் தலைவர்கள் எந்தச் சூழ்நிலையிலும், யாரென்று வந்தாலும் அவர்களுக்குச் சவாலாக நிற்கின்ற ஒரே தலைவர், உன்னதத் தலைவர் உங்களையும் காப்பார், உங்கள் மக்களையும் காப்பார் என்று சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் கொறடாதான் பேசிக்கொண்டிருக்கிறார்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய முற்போக்கு திராவிட கழக வேட்பாளர்கள் தொகுதியில் எந்தத் தொகுதியிலேயும் அவர் பிரச்சாரம் செய்யவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர்...... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சந்திரகுமார், அவை முன்னவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். பேரவை முன்னவர் அவர்கள் எழுந்தால் அவர் பேசி முடிக்கும் வரை அமைதி காக்க வேண்டும் என்பதுதான் அவையினுடைய மரபு. (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் பேச எழுந்து நின்றால், நீங்கள் அத்தனை பேரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் பேசிக்கொண்டுதானே இருக்கிறீர்கள். திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வி.சி. சந்திரகுமார் பேசுவதற்கு நேரம் கொடுக்கிறேன் இல்லையா? அதற்குப் பிறகு என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசவிடாமல் நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு நீங்கள் பேசுங்கள். அவர் பேசி முடிக்கட்டும். திரு. சந்திரகுமார், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *நாங்கள் பெருந்தன்மையாக இருக்கிறோம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசுங்கள்.*



**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபோது 2011-க்குப் பிறகு நடந்ததையெல்லாம் சொன்னார்கள். அதற்கு முன்பு 2006-ல், 2009-ல் தேர்தல் நடந்தது. 2006-ல் உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. அப்போது அத்தனை இடத்திலேயும், அத்தனை தேர்தல்களிலேயும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியை தழுவியது. தேசிய முற்போக்கு திராவிட கழகத்துடன் இணைந்ததால்தான் வெற்றிபெற்றது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். திரு. சந்திரகுமார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லமுடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது அதைக் கேளுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சந்திரகுமார், நீங்கள் சொல்லிவிட்டீர்கள் இல்லையா, உட்காருங்கள். மாண்புமிகு திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் ஏதோ வேகத்தோடு பேசுவதாக நினைத்துக்கொண்டு தப்புத்தாளங்கள் போட்டுக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டில் சட்டமன்ற பொது . . . (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னவென்று, விசாரிக்கின்றேன். உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், உங்களுக்குப் பொதுவாக சட்டமன்ற துணைத் தலைவர் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்களைத் தேர்ந்தெடுத்து முன் வரிசையில் உட்கார வைத்திருக்கிறீர்கள். ஏதாவது பேச வேண்டுமென்றால், அவரிடம்*

*சொல்லி பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒட்டுமொத்தமாக, எல்லோரும் எழுந்து நின்று பேசினால் சபையை எப்படி நடத்த முடியும்? சொல்லுங்கள். அது தவறான நடைமுறையாகும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டே பேசுவது முறையல்ல. பிறகு நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் நடவடிக்கை எடுத்துவிடுவேன். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டே பேசினால் அது முறையல்ல. அவர் பதில் பேசுகிறாரல்லவா? அதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத்தான் நான் வாய்ப்புத் தருகிறேன் அல்லவா, அப்புறம் என்ன? (குறுக்கீடுகள்) நான் சொல்லவில்லை, உங்கள் கட்சி உறுப்பினர்கள்தான் பேசவிடமாட்டேன் என்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி நான் வாய்ப்புக் கொடுத்தால்கூட, உங்கள் கட்சி உறுப்பினர்கள்தான் அவரைப் பேச விடாமல் தடுக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் இங்கே ஏதேதோ சில பிரச்சினைகளைப் பற்றி ரொம்ப வேகத்தோடு பேசினார். 2011-ல் சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடந்தபோது மாண்புமிகு அம்மாவினுடைய தலைமையில் கூட்டணி பேசப்பட்டு, கூட்டணி வேட்பாளர்கள் அனைவருக்கும், அனைத்துத் தொகுதிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் மாவட்டங்களில், ஒன்றிரண்டு இடங்களில் பேசக்கூடிய வாய்ப்பினை பெற்றார்கள். (குறுக்கீடு) அப்பொழுது, அந்த மேடைகளில் அங்கு கூட்டணி கட்சிகளாக இருந்த நீங்களும் வந்தீர்கள். உங்களுக்காகவும், உங்களுடைய சின்னத்தை சொல்லியும் மாண்புமிகு அம்மா அவர்கள் வாக்குக் கேட்டார்கள். அதுதான் உண்மை. அதில் எங்களுடைய சட்டமன்ற வேட்பாளர்கள் ஒரு மாவட்டத்தில் 4, 5 பேர் போட்டியிட்டாலும், ஒரு வேட்பாளர் இருக்கின்ற தொகுதியிலும், மாண்புமிகு அம்மா அவர்களும் மற்ற வேட்பாளர்களும் அங்கே வந்தார்கள். அந்த மேடைகளில் நின்று அவர்களுக்காகவும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்குகள் கேட்டார்கள். 2011 ஆம் ஆண்டைய சட்டமன்ற பொதுத் தேர்தலில் தமிழக மக்களை பார்த்து நாமெல்லாம் என்ன கேட்டோம்? மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின்*



*முதலமைச்சராக வருவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு வாக்களியுங்கள் என்று சொல்லித்தான் வாக்கு கேட்டோம். தனிப்பட்ட பன்னீர்செல்வத்திற்கோ, தனிப்பட்ட மோகன்ராஜூக்கோ அல்லது தனிப்பட்ட சந்திரகுமாருக்கோ மக்கள் வாக்களிக்கவில்லை. இதை நீங்கள் நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2006-2011இல் தமிழகத்தில் நடந்த அக்கிரமங்கள், அநியாயங்கள், இவற்றையெல்லாம் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்றால், ஒரு நல்லாட்சி தமிழகத்தில் அமைய வேண்டும். அது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களால்தான் முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நம்பிக்கையை தமிழக மக்கள் பலமாகக் கொண்டிருந்தார்கள். பல்வேறு ஆட்சிகளை மக்கள் பார்த்துவிட்டார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமிழகம் மீண்டும் விடுதலை பெறவேண்டுமென்றால் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக வரவேண்டும், வரவேண்டும், வரவேண்டும் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் வாக்களித்தார்கள். தனிப்பட்ட முறையில் எனக்கு செல்வாக்கு இல்லை. நான் தனிப்பட்ட முறையில் நின்றால் ஜெயிக்க முடியாது, திரு. மோகன்ராஜ் தனிப்பட்ட முறையில் நின்றால் ஜெயிக்க முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக வருவதற்காகத்தான் நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்பதனையும் நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதும் அவைக்குறிப்பில் இருக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதும் அவைக்குறிப்பில் உள்ளது. 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. நிதிநிலை அறிக்கையின்மீது பேசி முடியுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *அதைப்போல, இன்னொன்று. இதை என்னுடைய குற்றச்சாட்டாக நினைக்க வேண்டாம். ஏனென்றால், சட்டமன்றத்தைப் பற்றி விமர்சனம் செய்யக்கூடாது. இருந்தாலும்*

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 பிப்ரவரி 18

அதில் ஒரு சின்ன விஷயம். நீங்கள் அதை சரிசெய்ய வேண்டுமென்பதற்காகத்தான். வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தைப் பற்றி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தைப் பற்றி நீங்கள் பேச முடியாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** சொல்லவிடாமலேயே பேசினால் (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர் விடுதி பற்றியது, சட்டமன்றத்தைப் பற்றி இல்லை. சட்டமன்ற உறுப்பினர் விடுதியைப் பற்றியது. சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அரசு விருந்தினர் மாளிகையிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், விடுதி என்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதுகுறித்து நீங்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். இந்த அவையில் பேச முடியாது. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். இந்தப் பேரவையில் பேசுவது மரபு இல்லை. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள், நான் கேட்டுக்கொள்கிறேன். அதில், என்ன குறையோ அதை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யலாம். என்னுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிறதைப் பற்றி இங்கே பேசக்கூடாது. அவையில் விவாதிக்கக்கூடாது. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து சொல்லுங்கள், பார்க்கலாம்.

பிற்பகல் 12-30

**திரு. வி.சி. சந்திரகுமார்:** விவசாயிகளுக்குக் கூடுதலாக வருவாய் கிடைக்கும் என்கின்ற வகையிலேதான் கால்நடை வளர்ப்புத் தொழில் இருக்கிறது என்று நீங்களே நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நேற்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபொழுது 1,124 மாடுகள்தான் இறந்து போய் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், 1,124 மாடுகள் இறந்து விட்டன என்றால் எதற்காக தமிழ்நாடு முழுவதும் பல இடங்களிலே விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். இதில் இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். அந்த விவசாயிகள் போராட்டத்திலே சொன்ன முக்கிய குற்றச்சாட்டு ** என்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 18] [திரு. வி.சி. சந்திரகுமார்]

குற்றச்சாட்டை நீங்கள் தயவுசெய்து கூர்ந்து கவனித்து அதை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமாரி நோயைப் பற்றி நேற்றைக்குக்கூட அவர்களுடைய உறுப்பினர் பேசியபோது இலட்சக்கணக்கில் இறந்ததாக தவறான தகவலைத்தான் சொன்னார்கள். அதையும் நீங்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கவேண்டும். இன்றைக்குக்கூட ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதுவும் தவறு. தெளிவாகக் கணக்கெடுத்து, புள்ளிவிவரத்தோடுதான் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறோம். 1,124 மாடுகள் தான் இறந்திருக்கின்றன. அப்போது ஏற்காடு இடைத்தேர்தல் வந்த நேரம், அக்டோபர், நவம்பர் மாதம் அது. கோமாரி நோய் வழக்கம்போல் அந்தக் காலங்களில் வருவது வழக்கம்தான். ஏற்காடு தொகுதி இடைத் தேர்தல் என்பதால்தான் எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் அதைப் பெரிதுபடுத்தியதே தவிர, இது புதியதாக வருகின்ற நோய் அல்ல. பொதுவாக 1,124 என்பதற்கு மாவட்ட வாரியாக எங்களிடத்திலே புள்ளிவிவரம் இருக்கிறது. விவசாயிகள் யாரும் போராடவில்லை. எதிர்க்கட்சிகள்தான் ஆங்காங்கே தூண்டிவிட்டு நிவாரணம் கேட்கிறார்களே தவிர, விவசாயிகள் போராடவில்லை. நீங்கள் தவறான தகவலைச் சொல்கிறீர்கள். ஏற்கெனவே 30,000 கால்நடைகள் பாதிக்கப்பட்டன என்பது உண்மை. ஆனால், இறந்தது 1,124 கால்நடைகள்தான். அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, போர்க்கால அடிப்படையில் 220 சிறப்பு மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் உடனடியாக 1½ கோடி ரூபாய்க்கு மருந்துகளை வாங்க அனுமதித்து அந்த நோய் டிசம்பர் மாதத்திற்குள்ளாகக் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது, இப்போது நடப்பது பிப்ரவரி மாதம். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களில் யாராவது டிசம்பர் மாதத்திற்குப் பின்னால், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஒரு கால்நடையாவது இறந்ததாக உங்களால் நிரூபிக்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த டிசம்பர் மாதமே நோய் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. ஏறக்குறைய 1,124 கால்நடைகள் இறந்தன என்பதற்கு எங்களிடத்திலே ஆதாரம் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. டி.கே.எம். சின்னையா][2014 பிப்ரவரி 18

இன்னொரு முக்கியமான செய்தியை நீங்கள் இங்கே தெரிந்துகொள்ளவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசிகளை 6 மாதங்களுக்கு ஒரு முறை அரசின் சார்பாக போட்டுக்கொண்டு இருக்கிறோம். உதாரணமாக, ஒரு கிராமத்தில் 500 கால்நடைகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே இருக்கிற விவசாயப் பெருமக்கள் ஒரு தவறான கண்ணோட்டத்தில், நீங்கள் தடுப்பூசி போட்டீர்கள் என்றால் பால் நிறைய கறக்காது, எங்கள் மாடு சினையாக இருக்கிறது, இதெல்லாம் போட முடியாது என்று சொல்லி, 100 கால்நடைகளுக்கு போடாமல் விட்ட அந்த மாடுகள்தான் இறந்திருக்கின்றன என்பதற்கு எங்களிடத்தில் ஆதாரம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடை தடுப்பூசி போடாத அந்த மாடுகள்தான் அதிகமாக இறந்திருக்கின்றன என்பதை நாங்கள் ஆய்வு செய்திருக்கிறோம். பல்கலைக்கழகத்திலேயும் அதைப் பெற்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். வருங்காலத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் அவர்களுடைய கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை நூறு சதவீதம் போட வேண்டும் என்பதற்காகத்தான் வருகிற மார்ச் மாதம் போட இருக்கிறோம். எனவே, தடுப்பூசி போடாத மாடுகள்தான் இறந்திருக்கின்றன என்பதை நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். எனவே, இதில் விவாதம் செய்வதற்கு அவசியம் இல்லை. இரண்டு மாத காலங்கள் ஆகிவிட்டன. நவம்பர் மாதத்தில் ஏற்காடு தொகுதி இடைத்தேர்தல் வந்ததால்தான் அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் அறிக்கை விட்டு இதைப் பெரிதுபடுத்தினார்களே தவிர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அதிக அளவில் இறக்கவில்லை. உடனடியாக தலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வு நடத்தி அனைத்து மாவட்டங்களிலும் 220 மருத்துவக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டு இருக்கின்றன. முதன் முறையாக உடனடியாக 220 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு அந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைக்குக்கூட இலட்சக்கணக்கில் இறந்திருக்கின்றன என்று சொன்னார்கள், அது தவறு. இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அவர்கள் தொகுதியில் இலட்சக்கணக்கில் என்று சொல்கிறீர்கள். எந்தெந்த இடங்களில் இறந்துவிட்டது என்று சொல்லமுடியுமா? யாராலும் முடியாது. எனவே, இலட்சக்கணக்கில் என்று சொல்வதெல்லாம் தவறு; 1,124-தான். ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதை நீங்கள் இறந்தது என்று சொல்கிறீர்கள், அது முற்றிலும் தவறு. எனவே, இறந்தவை 1,124 தான் என்பதை நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். அதுகூட கால்நடை நோய் தடுப்பூசி போடாத கால்நடைகள்தான் இறந்தன என்பதை நான் இங்கே உறுதியாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2014 பிப்ரவரி 18][திரு. டி.கே.எம். சின்னையா]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள், ** என்ற தவறான தகவலை இங்கே சொன்னார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்களைக் கொடுத்தால் அவைக் குறிப்பில் ஏற்றலாம், புள்ளிவிவரங்கள் இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார் ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடு) ஆதாரம் கொண்டு வரும் வரை அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஆதாரம் கொண்டு வந்து கொடுத்தால் அது அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளப்படும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது அவர் தொகுதியில் நடைபெறும் பணிகளைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013-2014 ஆம் ஆண்டிற்கு 9 புதிய பகுதி அலுவலகங்கள் தொடங்குவதற்கு ஆணை வழங்கினார்கள். அந்த 9 அலுவலகங்களில், 7 அலுவலகங்கள் தே.மு.தி.க., கம்யூனிஸ்டு, மனிதநேய மக்கள் கட்சி, பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளைச் சார்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய தொகுதிகளில் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2012-2013 ஆம் ஆண்டு சூலூரில் புதிய பகுதி அலுவலகம் தொடங்கப்பட்டு அது மக்களுடைய பயன்பாட்டில் இருக்கின்றது. சூலூர் சட்டமன்ற உறுப்பினர், 'எங்களுடைய பகுதிகளுக்கு பகுதி அலுவலகம் வேண்டும், மக்களுக்குத் தேவை' என்று சட்டமன்றத்தில் அவர் கேள்வி எழுப்பவில்லை. அதேபோல், கும்மிடிப்பூண்டியில் பகுதி அலுவலகம் வேண்டுமென்று கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பவில்லை, கோரிக்கை வைக்கவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுடைய தேவைகளை அறிந்து உரிய காலத்தில், உரிய அலுவலகங்கள் அந்தப் பகுதிகளுக்குத் தேவை என்று மக்களுக்காக பல்வேறு திட்டங்களையும், அலுவலகங்களையும் வழங்கியிருக்கின்றார்கள். மக்களை நேசிக்கக்கூடிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் நேசிக்கும் தலைமை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், 55 நிமிடங்கள் ஆகிவிட்டன. இல்லை, கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொன்னார்கள். உங்களுடைய அணியிலே இருக்கின்ற பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த தோழர்கள்கூட கோமாரி நோய்க்காக போராட்டங்கள் நடத்தினார்கள். நான் கேட்க வருவது கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு இழப்பீடு தர வேண்டுமென்பதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மீண்டும், மீண்டும் அதையே பேசுவது நல்லதல்ல.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** எனது தொகுதிக் கோரிக்கைகள்: ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் பகுதியையும், நாமக்கல் மாவட்டம்,



பள்ளிபாளையம் பகுதியையும் இணைக்க காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலத்தின் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் பயன்படுத்த முடியாமல் உள்ள மூன்று பிரதான சாலைகளை செப்பனிட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

சென்னிமலை ரோட்டில் இருந்து ஜெகன்னாதபுரம் காலனி, என்.ஜி.ஓ. காலனி வழியாக பெருந்துறை ரோட்டை இணைக்கின்ற 60 அடி சாலை திட்டம், ஈரோடு இரயில் நிலையத்தில் இருந்து பெரியார் நகர் வழியாக பிரப்ரோட்டை இணைக்கும் 80 அடி சாலை திட்டம், ஈரோடு கள்ளுக்கடைமேடு நீல்கிரிஸ் அருகில் இருந்து பட்டக்காரர் வீதி வழியாக, ஸ்டேட் பேங்க் ரோடு வழியாக 60 அடி சாலை திட்டம், ஈரோடு மாநகருக்கு வெளிவட்ட சுற்றுச்சாலை அமைக்கும் பணி ஆகியவற்றை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

மேட்டூரிலிருந்து ஈரோட்டிற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். தற்போது ஊராட்சிக் கோட்டையில் இருந்து குடிநீர் கொண்டு வருகின்ற திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். அதற்குரிய நிதி இதுவரை ஒதுக்கவில்லை. உடனடியாக நிதி ஒதுக்க ஆவன செய்ய வேண்டும்.

ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு கல்லூரியாக மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோடு மாநகராட்சியில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டும். ஈரோடு மாநகராட்சி ஓடைப்பள்ளத்தின் இரண்டு புறமும் பாதைகள் அமைக்கப்பட்டு கால்வாய் போல் அமைத்து சீர்படுத்தித் தர வேண்டும்.

செம்மொழி மாநாட்டிற்காக ஈரோட்டிலிருந்து கோவைக்கு மாற்றம் செய்யப்பட்ட பொதுப் பணித் துறை வட்டத்தை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு)—PWD - BUILDING CIRCLE-ஐ மீண்டும் ஈரோட்டிற்கு மாற்றம் செய்து தர வேண்டும்.

ஈரோடு மாவட்ட அரசு பொது மருத்துவமனைக்கு 20 கிலோ வாட் ஜெனரேட்டர் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 பிப்ரவரி 18

ஈரோடு மாவட்டம் அரசு பொது மருத்துவமனைக்கு புதிய லிப்ட் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பொது மருத்துவமனைக்கு செவிலியர், உதவியாளர் (Nursing Assistant) நியமனம் செய்ய வேண்டும்.

ஈரோடு மாவட்டம் பொது மருத்துவமனைக்கு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறையாக உள்ளதை பூர்த்தி செய்ய வேண்டும்.

ஈரோடு மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்க வேண்டும்.

ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குள் புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டும். பழைய கட்டடத்திற்கும், புதிய கட்டடத்திற்கும் இணைப்புப் பாலம் அமைக்க வேண்டும். புதியதாக லிப்ட் வசதி செய்து தர வேண்டும்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

காவேரி ஆற்றிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு குடிநீர் எடுக்கும் வாட்டர் பம்ப், மோட்டார் பம்புகள் புதியதாக பொருத்தி குடிநீர் சீராக விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோடு பன்னீர்செல்வம் பார்க் அருகில் உள்ள கனி மார்க்கெட்டில் ஜவுளி வணிக வளாகம் உருவாக்கிட நிதி ஒதுக்கிட வேண்டும்.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை எம்.ஜி.ஆர். சிலை அருகில் செய்யப்படும் மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

ஈரோட்டில் ஒருங்கிணைந்த புறநகர் பேருந்து நிலையம் அமைத்திட வேண்டும்.

ஈரோட்டில் கொசுவை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



2014 பிப்ரவரி 18] [திரு. வி.சி. சந்திரகுமார்]

சாக்கடைகளை சுத்தம் செய்ய வேண்டும். தெரு விளக்குகள் எரிவது இல்லை. பாதாளச் சாக்கடைக்கு குழி தோண்டியதால் ரோடுகள் குண்டும் குழியுமாக உள்ளன. இவற்றை சரி செய்ய வேண்டும்.

இலவச பஸ் பாஸ் பெற்ற பள்ளிக் குழந்தைகள் செல்வதற்கு சிறப்பு பஸ் இயக்க வேண்டும்.

அங்கன்வாடிகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லை. வாடகைக் கட்டடத்தையும் காலி செய்ய சொல்கிறார்கள். எனவே, மாநகராட்சிப் பகுதியில் மாற்று பயன்பாட்டிற்கு உள்ள காலி இடத்தை பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுக்குமாடி குடியிருப்புகளை பராமரிக்க வேண்டும்.

ஈரோட்டின் மையப் பகுதியில் உள்ள ஓடையின் இரண்டுபுறமும் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்கள் புதியதாக நியமனம் செய்யப்படுவதில் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் செய்ய வேண்டும்.

ராஜாஜிபுரம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கும் ஆலமரத் தெரு, முனிசிபல்சத்திரம், வண்டியூரான் கோவில் தெரு, கிருஷ்ணம்பாளையம், வைராபாளையம், காந்தி நகர், எம்.ஜி.ஆர். நகர், பாரதி நகர், பண்ணாடி தெரு ஆகிய பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரோட்டின் மையத்தில் சென்டர் மீடியனில் விளம்பரப் பலகைகள் *1,500* உள்ளன. அவற்றை அகற்ற வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் கிழக்கு தொகுதியில் *2* மண்டலங்கள் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 பிப்ரவரி 18

ஈரோட்டில் சட்டக் கல்லூரி மற்றும் விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டும்.

பாதாளச் சாக்கடையின் வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

RKV Road-ல் உள்ள தினசரி காய்கறி மார்க்கெட் கட்டடத்தைச் சீர்செய்ய வேண்டும்.

வ.உ.சி. சிறுவர் பூங்கா மற்றும் ஆஞ்சநேயர் கோயிலைச் சுற்றியுள்ள பூங்கா பகுதிகளை சுத்தம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விட வேண்டும்.

கே.ஏ.எஸ். நகர், மரப்பாலம் வீதி, வி.வி.சி.ஆர். நகர், மோகன் தோட்டம் போன்ற பகுதிகளில் 25 ஆண்டு காலமாக தார்ச் சாலை இல்லாமல் உள்ளது. 90 சதவிகிதம் பேர் மாநகராட்சி அப்ரூவலுக்கு பணம் செலுத்தி இருக்கிறார்கள். எனவே, தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாதி, மதம், மொழி, இனம் கடந்து எந்த பாரபட்சமுமின்றி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறைமூலமாக, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ள 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் விழுப்புரம் மாவட்டத்தில் தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியான ரிஷிவந்தியத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதே மாவட்டத்தைச் சார்ந்த மற்றொரு தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களின் சட்டமன்றத் தொகுதியான திருக்கோவிலூரிலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் உரை பக்கம் 19 இல் 35-வது பத்தியை எதிர்க்கட்சி உறுப்பினர் படிக்கவேண்டும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்த ஆண்டு கால்நடை இறப்பின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய, அனைத்து மாவட்டங்களுக்கும் 12 கோடி ரூபாய் செலவில் கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இனி, வருகின்ற காலங்களிலே கால்நடைகள் இறந்தால் காப்பீடு உண்டு என்பது இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு. 10 நிமிடங்களில் உரையை முடிக்கவேண்டும்.

பிற்பகல் 12-40

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியாவை ஆளப்போகும் ஆளுமை கொண்ட சர்வ அவதானியாய், தர்ம தேவதையாய், கர்மயோகியாய், காவேரியை மீட்ட தாயாய், தொல்லைகளைத் துரத்தி புதிய எல்லைகளைத் தொட்ட தாயாய் விளங்கும், துஞ்சா கண்கொண்டு அஞ்சா நெஞ்சம் கொண்ட எங்கள் அன்னையே! தமிழகத்தைப் பிடித்திருந்த தரித்திரத்தைப் போக்கிய புதிய சரித்திரமே! சூரியனை விழுங்கி ஏழைக்கு ஒளி தரும் எங்கள் சோலார் விளக்கே! இந்த மாமன்றத்தில் இன்று உரை நிகழ்த்த இந்த எளியவனுக்கும் வாய்ப்பு அளித்த எங்கள் இதய தெய்வமே! கழகத்தின் காவல் தெய்வமே! மக்கள் திலகம் கண்டெடுத்த எங்கள் மாதரசியே! உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! எங்கள் அம்மாவே, தங்களின் பொற்பாதம் பணிந்து எனது உரையைத் துவக்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, ஓர் அரசு, 200 வருடங்களில் செய்து முடிக்க வேண்டிய

சாதனைகளை இரண்டரை ஆண்டு காலங்களில் செய்து முடித்து இந்தியாவில் இருக்கும் முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதன்மையான முதலமைச்சராக, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வழிகாட்டக்கூடிய முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களின் மணிமகுடமே! மாற்றாரை மலைக்க வைக்கும் வகையில் மலைக்கோட்டையில் பெற்ற மகத்தான வெற்றியைக் கண்டு, மனக்கோட்டை கட்டியவர்கள் நிலை குலைந்துபோனார்கள். “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத புகழ் என்று சங்கே முழங்கு” என்பதற்கிணங்க, சங்கரன்கோவில் வெற்றி, சரித்திரம் போற்றும் சாதனைகளுக்குக் கிடைத்த வெற்றி. புதிய புறநானூற்றின் புரட்சிப் பூபாளமே! புதுக்கோட்டை மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ்க்கோட்டை என நிரூபித்துக்காட்டியது. வெற்றி, வெற்றி, வெற்றி. இயற்கை எழில் கொஞ்சும் ஏற்காட்டில் மாற்றம் தந்த மக்களின் ஏற்றத்தைப் போற்றும் வகையில் எவரும் எதிர்பாராத இமாலய வெற்றி, வெற்றி படைக்கும் அம்மா! வீரம் படைக்கும் அம்மா! விவேகம் படைக்கும் அம்மா! நாளைய பாரதத்தின் அம்மா! எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணும் காரியங்களிலெல்லாம் எண்ணிலடங்கா வெற்றி, புனித ஜார்ஜ் கோட்டையில் வெற்றி, புகழ்மிகு வெற்றி, அகவை அறுபத்து ஆறில் செங்கோட்டையில் வெற்றி, இல்லங்கள்தோறும் ஒலிப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இனியவை நாற்பதும் உறுதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பேசத் தெரியாமல் நிதிநிலை அறிக்கையிலே குறை என்று * உண்மைக்குப் புறம்பாக சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உண்மைக்குப் புறம்பாக என மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு) உட்காருங்கள், உங்கள்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



துணைத் தலைவர் அவர்கள் இருக்கின்றார். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றியாகிவிட்டது. எல்லோரும் உட்காருங்கள்.[1]

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தே.மு.தி.க. சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பாடில்லாமல் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை வரிக்கு வரி, வரி விதித்து மக்களை வாட்டிடும் மைய அரசின் பட்ஜெட்டுக்கு மாறாக வரி என்ற வார்த்தையே ஒரு வரியில்கூட காண முடியாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அரசின் பட்ஜெட்டை நானிலம் அறிந்ததில்லை இதுவரை; அம்மா உங்களை நாவார புகழ்ந்திட ஏதுமில்லை வரையறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமான தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டத்தின்மூலமாக 10,099 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, தமிழகத்தை அனைத்து மாநிலமும் திரும்பிப் பார்க்கின்ற வகையில் உலகத் தரத்திற்கு இணையாக தமிழகத்தின் காவல் தெய்வம், காவல் துறையின் செயல்பாட்டிற்கு ரூ.5,186.20 கோடி ஒதுக்கியுள்ளார்கள்.

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால், அது கல்வி வளர்ச்சியின் மூலமே சாத்தியம் என்ற நிஜத்தை நினைவில் நிறுத்தி, எந்த அரசும் பள்ளிக் கல்விக்கு இதுவரை ஒதுக்காத அளவிற்கு ரூ.17,731 கோடி ஒதுக்கீடு செய்து கல்விக்கு வித்திட்ட கலைமகள் சரஸ்வதியாம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இலவசப் பேருந்து பயணச் சலுகை, 4 செட் சீருடைகள், புத்தகப்பை, காலணிகள், வரைபடப்

புத்தகங்கள், கலர் பென்சில்கள், மாணவிகளுக்கு சானிடரி நாப்கின்கள், சைக்கிள்கள் மற்றும் பள்ளி வளர்ச்சிக்கான கல்வி உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க ரூ.1,631.53 கோடி ஒதுக்கி மாபெரும் கல்விப் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தேசிய அளவில் பல பாராட்டுகளை பெற்றுள்ளதோடு மற்ற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் வளமான எதிர்காலத்திற்கு 5.5 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்க ரூ.1,100 கோடி ஒதுக்கி அனைத்து மாணவ, மாணவிகளையும், பெற்றோர்களையும் மகிழச் செய்த தாயே!

இந்தியாவின் புதுமைப் படைப்பு மையமாகவும், அறிவாற்றலின் தலைநகரமாகவும் தமிழ்நாடு திகழவேண்டும் என்ற மகத்தான இலட்சிய குறிக்கோளுடன் 'தொலைநோக்குப் பார்வை 2023' இலக்கை எட்டிட, உயர் கல்வித் துறையில் 12 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், 4 பொறியியல் கல்லூரிகளும், 11 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும் புதியதாகத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள அரசு கல்வி நிறுவனங்களில் 798 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கி உயர் கல்வி சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தி இத்துறைக்கு ரூ.3,627.93 கோடி ஒதுக்கியுள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசு.

விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர கிராமப்புற ஏழையெளியோருக்கு விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் புதுமையான திட்டத்தின்மூலம் 12,000 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்க ரூ.43.65 கோடியும், ஒன்றரை இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்க 198.25 கோடி ரூபாயையும் ஒதுக்கியுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

ஒரு கோடியே 94 இலட்சம் ஏழை, எளிய குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்குவதற்காக பொது விநியோகத் திட்டத்திற்கு ரூபாய் 5,300 கோடி ஒதுக்கிய எங்கள் அன்னலட்சுமியே!



கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அவர்கள் அடித்த கொள்ளையாலும், ஆற்றல் இல்லாத நிருவாகத்தாலும் தறிகெட்ட நிலையில் இருந்த போக்குவரத்துக் கழகங்களை சரி செய்து, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே ஆண்டுகளில் 19 ஆயிரத்து 167 ஆக இருந்த பேருந்து சேவைகளை, 20 ஆயிரத்து 643 ஆக உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், ரூ.697.96 கோடி செலவில் 3 ஆயிரத்து 994 புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்துள்ளார்கள். இந்த ஆண்டிலும் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகளை வாங்க நிதியொதுக்கியது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிக்கு சான்றாகும்.

கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் நலனைக் காக்க மருத்துவத் துறைக்கு புத்துணர்வு அளித்து, இந்த ஆண்டில் ரூ.100.44 கோடியில், 118 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ரூ.76.13 கோடி மதிப்பீட்டில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், மருத்துவத் துறைக்கு இதுவரை எந்த ஒரு மாநில அரசும் ஒதுக்கீடு செய்ய முடியாத அளவிற்கு ரூ.7,005.02 கோடி ஒதுக்கிய மக்கள் போற்றும் மனித குல மாணிக்கமே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட விவசாயிகளுக்கு உழவர் பெரு விழா நடத்தி, வேளாண்மைத் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ ரூ.1,115 கோடி ஒதுக்கிய எங்களின் பசுமைத் தாயே!

வருவாய்த் துறை, பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே சென்று, குறைகளை விரைவாகத் தீர்ப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த மாபெரும் திட்டமே 'அம்மா திட்டம்'. இந்தத் திட்டத்தினால் கிராமங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெற்றார்கள். இந்தத் திட்டத்தை பாரதமே பார்த்து வியக்கின்றது தாயே!

இந்தியாவில் எந்த மாநில அரசும் செயல்படுத்த முடியாத அளவிற்கு ஆதி திராவிடர், பழங்குடியின மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், கல்வியில் தேர்ச்சி பெறவும், வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும் பல்வேறு நலத் திட்டங்களைச்

செயல்படுத்துவதற்காக ரூ.7,603 கோடி ஒதுக்கியுள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசு. இது மொத்த நிதி ஒதுக்கீட்டில் 18.02 சதவிகிதம் ஆகும்.

வீடு இல்லாத ஏழை, எளியோருக்கு சூரிய ஒளி மின் வசதியுடன்கூடிய 60,000 பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்திற்கு இந்த ஆண்டில் ரூ.1,260 கோடி ஒதுக்கியும், இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சத்து 6 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு ரூ.729.69 கோடி ஒதுக்கியும், ஏழைகள் வாழ்வில் ஒளி விளக்காய் திகழ்கின்றார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தமிழகத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் கட்டமைப்புத் திட்டத்தில் 1,500 கிலோ மீட்டர் சாலைகளை அகலப்படுத்தவும், 3,500 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தவும் ரூ.2,800 கோடி ஒதுக்கி பொலிவுமிக்க தமிழகத்தை உருவாக்கும் வரலாற்றுத் தலைவியே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்பாண்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டு, மழைக் காலத்தில் மண்பாண்டங்கள் செய்ய இயலாத நிலையை கருத்தில்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக் காலத்தில் ரூ.4,000/- வழங்க ரூ.4.50 கோடி ஒதுக்கிய மண்பாண்டத் தொழிலாளர்களின் காவல் தெய்வமே!

விவசாயிகளின் நலனைக் காக்க, விவசாய உற்பத்தியைப் பெருக்க, தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க, மாநிலத்தில் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு ரூ.119.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இந்தியாவிற்கே வழிகாட்டியாய் விளங்கி, தமிழகத்தை வளம்மிக்க மாநிலமாக உருவாக்கவும், நீர்ப் பாசனத் துறைக்கு ரூ.3,669.79 கோடி ஒதுக்கிய பாசனத் தாயே!

தங்கம் வாங்கி தாலி செய்வதற்குக்கூட இயலாத நிலையில் இருந்த ஏழைப் பெற்றோர்களின் துயர் துடைக்க தாலிக்குத் தங்கம் வழங்கும் திருமண உதவித் தொகைத் திட்டத்திற்கு ரூ.751.09 கோடி ஒதுக்கி, பெண்கள் வாழ்வில் ஒளியேற்றிய எங்கள் அணையா விளக்கே!

ஏழை, எளிய குடும்பத்து தாய்மார்களின் வேலைப் பளுவைக் குறைப்பதற்காக 35 இலட்சம் குடும்பங்களுக்கு மிக்ஸி, கிரைண்டர்,



மின் விசிறி வழங்கும் மாபெரும் திட்டத்திற்கு இந்த ஆண்டில் ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கித் தந்த தன்னிகரில்லா தலைவியே!

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.4,200 கோடி ஒதுக்கீடு செய்து, உழவர் பெருமக்களின் உயர்வுக்கு வழிகாட்டும் ஒப்பற்றத் தலைவியாகத் திகழ்கிறார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வரும் மாதாந்திர உதவித் தொகையை ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கி, அவர்தம் நெஞ்சத்தில் பால் வார்த்ததோடு, பல்வேறு நலத் திட்டங்களையும் செயல்படுத்தியதன்மூலமாக இந்தியாவிலேயே சிறந்த மாநிலத்திற்கான தேசிய விருது கிடைத்ததே அது, அம்மாவின் கருணை உள்ளத்திற்குக் கிடைத்த ஒரு மகத்தான சாட்சி. இது மனசாட்சி இல்லாத மாற்றாரும் ஏற்க வேண்டிய உண்மைச் சாட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே தமிழ்நாடு தொழில் உற்பத்தி மையமாகவும், அமைதிப் பூங்காவாகவும் திகழ்வதால் இந்த இரண்டரை ஆண்டுகளிலே ரூபாய் 26 ஆயிரத்து 625 கோடி அளவிற்கு முதலீட்டாளர்களால் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, ரூபாய் 10 ஆயிரத்து 660 கோடி முதலீடும் செய்யப்பட்டுள்ளதனால் 10 ஆயிரத்து 22 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கிய ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். அதுமட்டுமா, தமிழ்நாட்டின் தொழில் வளத்தையும், கட்டமைப்பையும் ஊக்குவிக்க சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்த ரூ.100 கோடி நிதி ஒதுக்கி, தொழில் துறைக்கே மாபெரும் தொழில் புரட்சியை ஏற்படுத்தியவர் எங்கள் அன்னை.

பொதுத் துறை நிறுவனமான நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 5 சதவிகித பங்கை தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்த மத்திய அரசிடமிருந்து போராடி மீட்டு, அதனை தமிழகத்தின் சொத்தாக்கியதை மக்கள் வியந்து பாராட்டுகின்றனர் தாயே!

*பிற்பகல் 12-50*

*இந்தியத் திருநாடே வியந்து பாராட்டக்கூடிய வகையில் 297 இடங்களில் மலிவு விலை அம்மா உணவகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி, மூன்று ரூபாய்க்கு தயிர் சாதம், ஐந்து ரூபாய்க்கு சாம்பார் சாதம் என வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஏழையெளிய மக்களும் தூய்மையான குடிநீர் அருந்த மலிவு விலையில் அம்மா குடிநீர் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் குறைந்த விலையில் உயிர் காக்கும் மருந்துகள் கிடைக்க 100 இடங்களில் அம்மா மருந்தகங்கள் அமைக்க ரூ.20 கோடி நிதி ஒதுக்கிய எங்கள் தாயே!*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊழல் எதிர்ப்பு மாநாடு என்றார்கள், ஊதாரித்தனமான செயலால் உதவாக்கரை மாநாடாகவும், தொண்டர்கள் உதைவாங்கும் மாநாடாகவும் நடந்ததை நாடே பார்த்து நகைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) தொலைக்காட்சியில் தொட்டில் கட்டி ஆட்டியது நாடும், ஏடும் நன்கு அறிந்ததே.*

*ஊழல் உதிர்ப்பு என உளறிவிட்டு, டெல்லியில் மாபெரும் ஊழல் பெருச்சாளியோடு கைகோர்த்த கூடல்; இது ஊர்ஜிதமாய் ஆதாயத் தேடல். ஒன்றும் பேசாதவரும், ஒன்றுமே பேசத் தெரியாதவரும் சந்தித்ததால் என்ன ஆதாயம் கிடைக்கப் போகுது தமிழ்நாட்டிற்கு? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊழலில் ஊறித் திளைத்தவர்களை ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் ஊழல்வாதிகளைச் சந்தித்தது, சந்திக்க கால அவகாசம் கேட்டு மண்டியிட்டுக் கிடந்ததை சந்தர்ப்பவாதம் என்றுதான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. குமரகுரு:** *200 கோடி என்றனர், 300 கோடி என்றனர், 400 கோடி என்றனர், 500 கோடி என்றனர்; இறுதியில் கிடைத்தது தெருக்கோடிதான். (மேசையைத் தட்டும் ஒலி) என் பின்னால் படையே இருக்கிறது எனக் கூறிக்கொண்டு ஊர் ஊராய்ச் சுற்றிவரும் உளறல் பேர்வழியின் பட்டையைக் கிளப்புகிற நாள் வெகுதூரத்தில் இல்லை தாயே.*



*இந்நேரத்தில் ஒரு நிகழ்ச்சி என் ஞாபகத்துக்கு வருகிறது தாயே, நாங்கள் எல்லாம் சிறுவயதாய் இருந்தபோது, கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் பூம்பூம் மாட்டுக்காரன் வருவான். அவனிடம் பூம்பூம் மாடு ஒன்று இருக்கும். அதனிடம் அவன் இந்த வீட்டில் இருப்பவர்கள் பிச்சை போடுவார்களா எனக் கேட்பான். அதுவும் தலையாட்டும், அதைப் பார்த்து நாம் சந்தோஷம் அடைந்து பிச்சை போடுவோம், அதுபோல, அம்மா நீங்கள் அதிக அளவில் பிச்சையிட்டதால் இங்கு ஒரு பூம்பூம் மாட்டுக்காரன் கொழுத்தும், தலைக்கனம் பிடித்தும், வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிக்கொண்டு சுற்றி வருகிறான். (மேசையைத் தட்டும் ஒலி) அவன் அங்கீகாரம் பெற்றதற்கு அம்மா நீங்களே கர்த்தா என்று இந்த மாநிலமும், நானிலமும் அறியும்.*

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களது இருக்கைக்கு அருகில் வந்து பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் இடத்திற்கு செல்லுங்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன். உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேதார்நாத்தில் வெள்ளம் என்றாலும், ஒடிசாவில் புயல் என்றாலும், அந்தமானில் படகு விபத்து என்றாலும், இலங்கைக் கடற்படையினரால், தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டாலோ, இலங்கை தமிழர்கள் பாதிக்கப்பட்டாலோ, எங்கெல்லாம் தமிழருக்கு ஆபத்தோ, அங்கெல்லாம் மின்னல் வேகத்தில் சென்று உதவிடும் எங்கள் கருணைக் கடலே!

மாநாடு போட்டு தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி பித்தலாட்டம் பேசுபவர்களுக்கு காவேரி நதி நீரைப் பெற்றுத் தரத் தெரியவில்லை; இலங்கை அரசுக்கு எதிராய் குரல் கொடுக்கத் தெரியவில்லை; தமிழ்ப் புத்தாண்டு தெரியவில்லை; தமிழர்களின் மனம்

புண்படாமல் பேசத் தெரியவில்லை; தமிழகத்துப் பிள்ளைகளைப் படிக்க வைக்கத் தெரியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* மைனாரிட்டி அரசாய் தமிழகத்தை ஆண்டபோது, மத்திய அரசாங்கத்திடம் இருந்து மின்சாரம் பெறத் தெரியவில்லை; நம்மிடமிருந்து வாங்கும் நிலக்கரியையே திரும்பப் பெறத் தெரியவில்லை. மண்ணெண்ணெய் பெறத் தெரியவில்லை; மீனவர்களைப் பாதுகாக்கத் தெரியவில்லை; ஆனால் தாயே அம்மா, எனக்கு ஒரு சந்தேகம். இவருக்குத்தான் ஒன்றும் தெரியவில்லையே, இவருக்கு என்னதான் தெரியும் என்று நான் நினைத்து பார்த்தபோது, எனக்கு ஒரு உண்மை புலப்பட்டது. தமிழக மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றியவுடன் கருவூலத்தைத் துடைக்கத் தெரியும். மகளுக்கு பதவி வாங்கத் தெரியும். குடும்பத்துக்கு சொத்து சேர்க்கத் தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் செய்தவர்களைக் காப்பாற்றத் தெரியும். மக்கள் காதில் பூச்சுற்றத் தெரியும். மக்களுக்கு கிள்ளியும் கொடுக்காமல், மொத்தத்தையும் அள்ளிக்கொண்டு போகத் தெரியும். பேரனிடமே பேரம் பேசத் தெரியும். தமிழை கொலை செய்துவிட்டு, தமிழனுக்கு துரோகம் செய்துவிட்டு, தமிழை செந்தமிழ் என சொல்லத் தெரியும். மானம் இல்லாமல் மத்திய அரசிடம் மண்டியிடத் தெரியும். இவ்வளவு இருந்தும் அவரிடம் என்ன இல்லை என்று பட்டியலிட்டுப் பார்த்தேன். தைரியம் இல்லை, மானம் இல்லை, தமிழுக்காக தமிழகத்து மக்களுக்காகப் போராடும் துணிவு இல்லை. பொம்மை மத்திய அரசிடம் மக்களுக்காகப் பேச மனம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடு மீண்டும் வெள்ளை இனத்திடம் கொள்ளை போகவா? நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தைரியம் எங்கே, ஊமைத்துரையின் தைரியம் எங்கே போயிற்று? மத்தியில் ஆள ஆண்டவனே யாரையும் படைக்கவில்லையா? மத்தியில் நல்லாட்சி செய்ய இறைவா நீ யாரைப் படைத்துள்ளாய்? அப்துல் கலாம் கண்ட கனவு இந்தியா வல்லரசு ஆக வேண்டும் என்றால், அது யாரால் முடியும்? என்னுள்ளே எழுந்த இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் இதோ! அதிகாரம் படைத்து



தமிழர்களை ஆட்டிப் படைத்த வெள்ளையர்களைக் கண்டு அஞ்சாமல் அவர்கள் எதிர் நின்று குரல் கொடுத்த வீரத் தன்மானச் சிங்கம் வீரபாண்டிய கட்டபொம்மனின் தைரியமாய், இதோ வீற்றிருக்கின்றார்களே எங்கள் அம்மா அவர்களே நாட்டை ஆளத் தகுதியானவர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிவகங்கைச் சீமையை வென்றெடுத்த வேலு நாச்சியாராய், இதோ எங்கள் கண்முன்னே எங்கள் அம்மா, வீரத்துக்கு விலாசமாய், ஜான்சி ராணியாய், இதோ எங்கள் கண்முன்னே எங்கள் தங்க அம்மா, நீங்கள்தானே அம்மா முழுத் தகுதியும் படைத்த முத்தமிழ் தாய்.

ஏழைகளுக்கு பசித்தால் சோறு, கல்வி பயில மடிக் கணினி உண்டு, மிதிக்க மிதிவண்டி உண்டு, தாலிக்குத் தங்கம் உண்டு, பிரசவத்திற்கு பணம் உண்டு, பிழைக்க ஆடு, மாடு உண்டு, தினந்தோறும் வேலை உண்டு, வயதானால் முதியோர் பணம் உண்டு, நிதிநிலை அறிக்கை என்றால், தமிழக மக்களுக்கு சந்தோஷம் உண்டு. அம்மா உணவகத்துடன், அம்மா மருந்தகம் உண்டு. இனி பிள்ளைகள் தள்ளிவிட்டால் முதியோர் காப்பகமும் உண்டு. இது அத்தனையும் இந்திய மக்களுக்குக் கிடைக்க வேண்டுமானால், அம்மாவின் தலைமையில் மத்திய ஆட்சி நிச்சயம் உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

உலகளவில் இந்தியா பேசப்பட வேண்டுமென்றால், தமிழகம் தலைநிமிந்து வாழ வேண்டுமென்றால், 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்' என்ற புரட்சித் தலைவரின் பொன்வரிகள் நடக்க வேண்டுமென்றால், நாளை நமதாக வேண்டும், நாற்பதும் நமதாக வேண்டும். நடுவண் அரசு நமக்காகவேண்டும். அம்மா ஆட்சி தர வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவில் இன்பம் நிலைக்கவேண்டும். அம்மா உங்கள் பேச்சே உலகெங்கும் பேசவேண்டும். கழகம் காக்க உழைப்போம். காடு போகும்வரை உழைப்போம். அம்மா கை காட்டும் திசையெல்லாம் உழைப்போம். எங்கள் உயிர் உள்ளவரை உங்களுக்காக உழைப்போம். உங்களுக்காகவே எங்கள் உயிர் மூச்சைக் கொடுப்போம். வாழ்க தாயே, வளம் பெருக தாயே, நாளை உங்களது தாயே, தமிழகம் என்றும் உங்கள் பக்கம் தாயே. வாருங்கள், வாருங்கள். தமிழன் செய்த தவப் பலனாய், ஏழை முதல் மாடி வீட்டு சீமான் வரை அனைவருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரமாய்

[திரு. இரா. குமரகுரு] [2014 பிப்ரவரி 18

விளங்கும் எங்கள் அம்மாவே, எங்கள் சிந்தையில் கொண்டு செயல்படுவோம் தாயே. இதுவரை பாரத மாதாவுக்கு 'ஜே' என்பார்கள். இனி பாரத மாதாவான அம்மாவுக்கு 'ஜேஜே' என்று சொல்லி அகம் மகிழ்வார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் வாழ்வில் ஒளி வெள்ளம் ஏற்பட இதுவரை எப்போதும் கிடைக்காத அளவுக்கு இரண்டாண்டு காலத்திலே 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்திய, கருணைக் கடவுள் அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதிப் பிரச்சினைகள்: எனது தொகுதிக்குட்பட்ட பிடாகம் ஊராட்சி சுமார் 15,000-க்கு மேற்பட்ட மக்களையும், 20-க்கு மேற்பட்ட குக்கிராமங்களையும், 15 வார்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. எனவே, இப்பகுதி வளர்ச்சியடைய எலவனாசூர்கோட்டையை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,350 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மாணவிகள் மட்டும் சுமார் 650 பேர் பயின்று வருகின்றனர். ஆதலால், மாணவிகளுக்காக தனியாக திருநாவலூரில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட வெள்ளையூர் கிராமத்தில் சுமார் 8,000-த்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். வெள்ளையூர் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த ஊரைச் சுற்றி நத்தகாளி, ஏமம், அங்கனூர், சிறுப்பாக்கம், பு.கொணலவாடி, எ.குமாரமங்கலம், கணையார், குணமங்கலம் உள்ளிட்ட பல கிராமங்கள் உள்ளன. மேற்படி கிராம மக்கள் உடல் நலக் குறைவு, விஷக்கடி, பிரசவம்



2014 பிப்ரவரி 18] [திரு. இரா. குமரகுரு]

உள்ளிட்ட அவசர சிகிச்சைகளுக்கு ஏதுவாக மேற்படி வெள்ளையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பாதூர் கிராமத்தில் சுமார் 5,000-க்கு மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்படும்போது சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டை அல்லது விழுப்புரம் மருத்துவமனைக்குச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையாக பாதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் கிராமங்களில் அதிக அளவில் கால்நடைகளை நம்பியே கிராம மக்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். எனவே, ஆசனூர், பேரங்கியூர், பின்னல்வாடி, பாதூர், பெரியசெவலை, காந்தலவாடி, கூவாடு, வெள்ளையூர் போன்ற கிராம மக்களின் நலனுக்காக புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூரரை சுற்றிலும் சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஏழை, எளிய விவசாயிகள் குடிசைப் பகுதியில் மிகவும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் தீ விபத்து ஏற்படும்போது சுமார் 15 கி.மீ. தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டை மற்றும் திருவெண்ணெய்நல்லூர் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்பு வாகனங்கள் வருவதற்குள்ளாக தீ விபத்தினால் அப்பகுதியில் உள்ள வீடுகள் முழுவதும் எரிந்து சேதமடைந்து விடுகின்றன. எனவே, திருநாவலூரரை மையமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டையில் நீதிமன்றங்கள், 6 காவல் நிலையங்களை உள்ளடக்கியுள்ளதால் ஒ.பி. வழக்குகள்-500, எம்.எ.சி.டி. வழக்குகள்-2,000, கிரிமினல் வழக்குகள்-200 போன்ற வழக்குகள் சம்பந்தமாக விழுப்புரத்தில் உள்ள சார்பு நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குகள் நடத்த வேண்டியுள்ளதால் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே, பொதுமக்களின் நலனைக் கருதி உளுந்தூர்பேட்டையில் புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்திற்குச் சொந்தமாக 5.25 ஏக்கர் இடம் உள்ளது. மேலும், உளுந்தூர்பேட்டையில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் விசாரணை நீதிமன்றம்-I, குற்றவியல் விசாரணை நீதிமன்றம்-II, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்-I, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்-II போன்ற நீதிமன்றங்களை ஒருங்கிணைத்து, உளுந்தூர்பேட்டை மையப் பகுதி என்பதால் அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படவேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில், தென்மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது அந்தக் கிராமத்திற்குச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, தென்மங்கலம் மற்றும் அருகிலுள்ள கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தென்மங்கலம் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் மலட்டாற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக தரம் உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியம், கெடிலம் ஆற்றின் குறுக்கே பெரும்பட்டு கிராமத்திற்கு அருகிலுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட நெய்வணை கிராமத்திலிருந்து கலிங்கல்மேடு செல்லும் கிராமச் சாலையில் உள்ள தரைப் பாலத்தில் மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பொது மக்கள் கிராமத்தைவிட்டு வெளியே செல்ல முடியாமலும், பேருந்து வசதி இல்லாமலும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, நெய்வணை கிராமத்திலிருந்து கலிங்கல்மேடு செல்லும் சாலையில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், பே. குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சுமார்



3 கி.மீ. தூரத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலை-45-ஐக் கடந்து சென்று பேரங்கியூர் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பே. குச்சிப்பாளையம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பே. குச்சிப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கீழ்க்காணும் குக்கிராமங்களுக்கும் புதிய பகுதி நேரக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**உளுந்தூர்பேட்டை ஒன்றியம்**

பரிந்தல் நியாய விலைக் கடையைப் பிரித்து, பரிந்தல் மேட்டுக் காலனியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும், குணமங்கலம் நியாய விலைக் கடையைப் பிரித்து, குணமங்கலம், முஸ்லீம் தெருவில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும், எலவனாசூர்கோட்டை கடை எண் 1 நியாய விலைக் கடையைப் பிரித்து, ரஹிமான் தர்க்கா பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும், சீதேவி நியாய விலைக் கடையைப் பிரித்து, சவரியார்புரம் கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை அமைக்கவும், பின்னல்வாடி நியாய விலைக் கடையைப் பிரித்து, பின்னல்வாடி காலனிக்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருநாவலூர் ஒன்றியம்**

கொரட்டூர் நியாய விலைக் கடையைப் பிரித்து, கொ. குச்சிப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாச்சியார்பேட்டை நியாய விலைக் கடையைப் பிரித்து, நாச்சியார்பேட்டை மேடு பகுதிக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நியாய விலைக் கடையைப் பிரித்து, வாணியங்குப்பம் கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிள்ளையார்குப்பம் நியாய விலைக் கடையைப் பிரித்து, பரமநத்தம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. குமரகுரு] [2014 பிப்ரவரி 18

உடையானந்தல் ஊராட்சி, வைப்பாளையம் கிராமத்தில் சுமார் *15* வருடங்களாக அரசு அனுமதியின்றி தற்காலிகமாக பகுதி நேர நியாய விலைக் கடை இயங்கி வந்தது. ஆனால், தற்போது அந்தக் கடை இயங்கவில்லை. ஆதலால், வைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் *3* கி.மீ. தூரம் சென்று உடையானந்தல் நியாய விலைக் கடையில் ரேஷன் பொருட்களை பெற மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு காரணமாக வைப்பாளையம் கிராமத்திலிருந்து உடையானந்தல் கிராமத்திற்குச் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். இது இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் முக்கிய பிரச்சினையாகவே உள்ளது. எனவே, உடையானந்தல் நியாய விலைக் கடையைப் பிரித்து, வைப்பாளையம் கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம்**

திருமுண்டீஸ்வரம் கிராம நியாய விலைக் கடையைப் பிரித்து, சாராயமேடு பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணராம்பட்டு நியாய விலைக் கடையைப் பிரித்து, கண்ணராம்பட்டு காலனியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஆமூர் நியாய விலைக் கடையைப் பிரித்து, ஆமூர் காலனியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் கிராமத்திற்கு புதிய பேருந்து வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்:

உளுந்தூர்பேட்டை பணிமனையில் இருந்து திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டையில் இருந்து நரிப்பாளையம் கிராமத்திற்கு வெள்ளையூர், ஏம்ம, நத்தகாளி, வடகுறும்பூர், கூவாடு, எல்லைக்கிராமம், வடுகபாளையம், பெரியக்குறுக்கை, அத்திப்பாக்கம் வழியாக நரிப்பாளையம் வரை பேருந்து இயக்க வேண்டும்.



2014 பிப்ரவரி 18] [திரு. இரா. குமரகுரு]

உளுந்தூர்பேட்டையில் இருந்து செம்மணங்கூர் புதூர் கிராமத்திற்கு உளுந்தாண்டார்கோவில், செம்மணங்கூர் வழியாக புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டும்.

பண்ருட்டி பணிமனையில் இருந்து களமருதூருக்கு கெடிலம், மாரனோடை, பெரும்பட்டு வழியாக களமருதூர் வரை புதிய பேருந்து இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை பணிமனையில் இருந்து பரிக்கலுக்கு களமருதூர், பிள்ளையார்குப்பம், வேலூர், பெரும்பாக்கம் வழியாக பரிக்கல் வரை புதிய பேருந்து இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை பணிமனையில் இருந்து கெடிலம் களமருதூர், ஓரத்தூர், பெரும்பட்டு, மாரனோடை வழியாக கெடிலம் வரை புதிய பேருந்து இயக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை முதல் நெய்வேலிக்கு சேந்தநாடு, எலவத்தடி, முத்தாண்டிக்குப்பம் வழியாக நெய்வேலி வரை புதிய பேருந்து இயக்க வேண்டும்.

விழுப்புரம் முதல் அயன்வேலூருக்கு மடப்பட்டு, பரிக்கல், பெரும்பாக்கம் வழியாக அயன்வேலூர் வரை புதிய பேருந்து இயக்க வேண்டும்.

விழுப்புரத்திலிருந்து டி. குமாரமங்கலத்திற்கு பேரங்கியூர், இருவேல்பட்டு, காரப்பட்டு வழியாக டி. குமாரமங்கலத்திற்கு புதிய பேருந்து இயக்க வேண்டும்.

**உளுந்தூர்பேட்டை பணிமனை**

தடம் எண் *8* - உளுந்தூர்பேட்டையிலிருந்து கல்சிறுநாகலூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை சவரியார்புரம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.

தடம் எண் *13* - உளுந்தூர்பேட்டையிலிருந்து எறையூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை எஸ். மலையனூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.

**விழுப்புரம் பணிமனை**

விழுப்புரத்திலிருந்து இருந்தை வரை இயங்கும் நகரப் பேருந்தை கொ. குச்சிப்பாளையம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.

**பண்ருட்டி பணிமனை**

*தடம் எண் 5 - பண்ருட்டியிலிருந்து நன்னிக்குப்பம் வரை இயங்கும் நகரப் பேருந்தை தொப்பையான்குளம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*தடம் எண் 22 - பண்ருட்டியிலிருந்து பிள்ளையார்குப்பம் வரை இயங்கும் நகரப் பேருந்தை களமருதூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

**திருக்கோவிலூர் பணிமனை**

*தடம் எண் 5 - திருக்கோவிலூரிலிருந்து ஆமூர் வரை இயங்கும் நகரப் பேருந்தை பிள்ளையார்குப்பம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*திருக்கோவிலூரிலிருந்து எலவனாசூர்கோட்டை வரை இயங்கும் நகரப் பேருந்தை பு. மலையனூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*தடம் எண் 8 திருக்கோவிலூரிலிருந்து பாசார் வரை இயங்கும் நகர பேருந்தை சவரியார்புரம் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*கள்ளக்குறிச்சியிலிருந்து குரூபீடபுரம் வரை இயங்கும் நகர பேருந்தை ஆசனூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.*

*தடம் எண் 8 கள்ளக்குறிச்சியிலிருந்து மண்டகப்பாடி வரை இயங்கும் நகர பேருந்தை சவரியார்புரம் வரை நீடிப்பு செய்ய வேண்டும்.*

*கள்ளக்குறிச்சியிலிருந்து அதையூர் வரை செல்லும் பேருந்தை தானம் வரை நீடிப்பு செய்ய வேண்டும்.*

*கள்ளக்குறிச்சியிலிருந்து எறஞ்சி வரை செல்லும் பேருந்தை ஆசனூர் வரை நீடிப்பு செய்ய வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் வழித்தடங்களில் இயங்கும் நகர பேருந்துகளை கூடுதல் நடை இயக்க ஆவன செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*காந்தலவாடி கிராமத்திற்கு மதிய நேரத்தில் கூடுதல் நடை இயக்க வேண்டும். பூ. மலையனூர் கிராமத்திற்கு மதிய நேரத்தில் கூடுதல் நடை இயக்க வேண்டும். நன்னாவரம் கிராமத்திற்கு*



*காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டும்.*

*உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட மிகவும் பிரசித்தி பெற்ற கீழ்க்காணும் திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து, திருத்தேர், திருக்குளம் ஆகியவற்றைப் புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*உ. கீரனூர், அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில் சுமார் 17 வருடங்களுக்கு முன்பு குடமுழுக்கு செய்யப்பட்டது. எனவே, பிரசித்தி பெற்ற இத்திருக்கோயிலில் ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*மிகவும் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற உளுந்தூர்பேட்டை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*அருள்மிகு ஆதிசேகவப் பெருமாள் திருக்கோயிலில் ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*மிகவும் பிரசித்திபெற்ற உளுந்தாண்டார்கோயில் அருள்மிகு மேஷபுரீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆதலால், இக்கோவிலில் திருப்பணி செய்து, திருக்குளத்தைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*ஆதனூர் ஊராட்சி, பாச்சாப்பாளையம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அழகிரி வெங்கடேசப்பெருமாள்-சகுந்தலாவள்ளித் தாயார் திருக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த கோயில். இக்கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கோயிலில் திருப்பணி செய்து மற்றும் திருக்குளத்தைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*நெய்வணை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீசொர்ணகடேஸ்வரர் திருக்கோயில், திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம். இக்கோயில் திருக்குளம் மிகவும் பழுதடைந்துள்ளது. இத்திருக்குளத்தைப் பராமரிப்பு செய்து புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

[திரு. இரா. குமரகுரு] [2014 பிப்ரவரி 18

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை ஒன்றியம், எ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, அஜீஸ்நகர் பகுதியைத் தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியம், சேந்தமங்கலம் ஊராட்சியில் சுமார் *13,500* மக்கள் வசிக்கின்றனர். இந்த ஊராட்சியில் மட்டும் சுமார் *15*-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. எனவே, இந்த ஊராட்சியை சேந்தமங்கலம், மாரனோடை மற்றும் வண்டிப்பாளையம் ஊராட்சிகள் என மூன்று ஊராட்சிகளாகப் பிரித்து அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சித்தாணங்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, மாமந்தூரை ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், ஆமூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, துலங்கம்பட்டை ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், டி. கொளத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, கொண்டசமுத்திரத்தை ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சரவணப்பாக்கம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, கொத்தனூரை ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூரைச் சுற்றிலும் சுமார் *5,000* ஏக்கர் விளை நிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களின் விளைப் பொருள்களைப் பாதுகாக்கவும், உரிய விலை கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், இவர்களின் விளைப்பொருட்களை உளுந்தூர்பேட்டையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி, திருநாவலூரில் ஒழுங்குமுறை வேளாண்மை விற்பனைக்கூடம் ஒன்றைப் புதிதாக அமைக்க வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 18] [திரு. இரா. குமரகுரு]

எனது தொகுதிக்குட்பட்டட எறையூரைச் சுற்றிலும் சுமார் *10,000* ஏக்கர் விளைநிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களின் விளைப்பொருள்களைப் பாதுகாக்கவும், உரிய விலை கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், இவர்களின் விளைப்பொருட்களை உளுந்தூர்பேட்டையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி, எறையூர் கிராமத்தில் ஒழுங்குமுறை வேளாண்மை விற்பனைக்கூடம் ஒன்றை புதியதாக அமைக்க வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலைத் துறைக்குப் புதிய அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை ஒன்றிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருப்பெயர், செங்குறிச்சி, அரசூர் போன்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு *1,000* மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட ஒரத்தூர், திருநாவலூர், பெரியசெவலை, சேந்தநாடு, கூவாகம் போன்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நவீன அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்கள், எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் அரசினர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்:

செங்குறிச்சி அரசினர் உயர்நிலைப் பள்ளி

அரசூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி,

எம். குன்னத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி,

எலவனாசூர்கோட்டை அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி,

எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசினர் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்:

சீக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

அதையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

கல்லமேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

பாண்டூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

கிளாப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

பிள்ளையார்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

இலுப்பையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

பு.கிள்ளனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

கருவேப்பிலைபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,

எனது தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் பள்ளிகளுக்கு நபார்டு வங்கியின் மூலமாக கூடுதலாக *20* வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்:

பேரங்கியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

ஆசனூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

சரவணப்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

பாதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

கிளியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

எலவனாசூர்கோட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி,



திருநாவலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

களமருதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி,

எனது தொகுதிக்குட்பட்ட களமருதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் *650* மாணவிகள் பயின்று வருகின்றனர். மாணவிகளின் நலனில் அக்கறை கொண்டு களமருதூர் கிராமத்தில் மாணவிகளுக்காக தனியாக அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் நகர கூட்டுறவு வங்கி தொடங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட எலவனாசூர்கோட்டையைச் சுற்றி சுமார் *50*-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதிக்கு சுமார் *12* கி.மீ. தூரத்தில் உள்ள தியாகதுருகம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வருவதால் மின் இழப்பு ஏற்பட்டு இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின்னழுத்தக் குறைவு ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் சரிவர மின்சாரம் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பொதுமக்களின் நலனைக் கருதி எலவனாசூர்கோட்டையில் *110/22 - 11 (16* கே.வி.ஏ.) மின்திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் காவல் நிலையம் சுமார் *88* கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இக்காவல் நிலையத்திற்கு உட்பட்ட கிராமங்களில் பிரச்சினை ஏற்படும்போது உடனடியாகச் சென்று தீர்வு காண முடியவில்லை. எனவே, பொதுமக்களின் நலன் கருதி திருநாவலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, களமருதூரை மையமாகக் கொண்டு புறக் காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் சுமார் *103* கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. ஆனால், காவல் நிலையத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது உடனடியாகச் சென்று தீர்க்க முடியவில்லை. எனவே, திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து அரசூரை மையமாகக் கொண்டு புதிய புறக் காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. குமரகுரு] [2014 பிப்ரவரி 18

எனது தொகுதிக்குட்பட்ட தென்பெண்ணையாற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தைச் சுற்றிலும் சுமார் *10,000* ஏக்கர் பாசன விவசாயிகள் பயன்படும் வகையிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், நீரை சேமித்து வைப்பதற்கு ஏதுவாக பேரங்கியூர் கிராமத்திற்கு அருகில் தென்பெண்ணையாற்றில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் கிராம மக்களின் குடிநீர் தேவைக்காகவும், விவசாயத்திற்காகவும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு கீழ்க்கண்ட தடுப்பணைகள் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கெடிலம் ஆற்றின் குறுக்கே கிழக்கு மருதூர் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேஷா நதியின் குறுக்கே பாதூர் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நரியன் ஓடையின் குறுக்கே விஜயங்குப்பம் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கெடிலம் ஆற்றின் குறுக்கே ஆத்தூர் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேஷா நதியின் குறுக்கே பில்ராம்பட்டு கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நரியன் ஓடையின் குறுக்கே கூ. கள்ளக்குறிச்சி கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேஷா நதியின் குறுக்கே களவனூர் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கெடிலம் ஆற்றின் குறுக்கே மாரனோடை கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கெடிலம் ஆற்றின் குறுக்கே ஆத்தூர் கிராமத்திற்கு அருகில் தடுப்பணை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கொரட்டூர் கிராமத்தில் உள்ள தெரு ஓரங்களில் கழிவு நீர் வாய்க்கால் இல்லாததால் இப்பகுதியில்



2014 பிப்ரவரி 18] [திரு. இரா. குமரகுரு]

வெளிப்படும் கழிவு நீர், சாலையில் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் வசிக்கும் கிராம மக்களுக்கு அடிக்கடி உடல் நலக் குறைவு ஏற்பட்டு மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே, பொதுமக்களின் நலனைக் கருதி, கொரட்டூர் கிராமத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும் கழிவு நீர் வாய்க்கால் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கடலூர்-சேலம் நெடுஞ்சாலையில், திருநாவலூர் கிராமத்தின் சாலையில் இருபுறமும் கழிவு நீர் வாய்க்கால் அமைக்க வேண்டும் என்பது அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக உள்ளது. எனவே, பொதுமக்களின் நலனைக் கருதி திருநாவலூர் கிராமத்தில் நெடுஞ்சாலையின் இருபுறமும் கழிவு நீர் வாய்க்கால் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியத்தில் உள்ள கெடிலம் ஆற்றின் குறுக்கே புத்தனந்தல் அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டின் பயன்பாடு *4* ஊராட்சிகளில் உள்ள *6* ஏரிகளுக்கு அணைக்கட்டிலிருந்து நீர் வரத்து வாய்க்கால் சுமார் *7* கி.மீ. உள்ளது. அணைக்கட்டின் கற்கள் இடிந்துவிழுந்தும், வாய்க்காலில் மண் சரிந்தும் உள்ளது. இந்த அணையை செம்மைப்படுத்தினால் *4* ஊராட்சி, அதாவது *10* கிராம மக்கள் பயன் பெறுவார்கள். எனவே, அணையைச் சரி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தே.மு.தி.க.-வில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. து. முருகேசன், பேசுகிறார். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. து. முருகேசன், சுருக்கமாகவும், தெளிவாகவும் பேச வேண்டும்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. இரா. குமரகுரு அவர்கள், ஊழல் எதிர்ப்பு மாநாடு நடத்தி உளறி இருப்பதாகச் சொன்னார். ஊழல் எதிர்ப்பு மாநாட்டை நடத்துவதற்கான தகுதி தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்திற்கு மட்டும்தான் இருக்கின்றது. அதனடிப்படையிலேதான், (குறுக்கீடுகள்) எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். ஒரேயொரு நிமிடம். (குறுக்கீடுகள்) நீங்கள் எத்தனைபேர் வேண்டுமானாலும் பேசுங்கள். ஒரேயொரு நிமிடம் எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். யார் வேண்டாமென்று சொன்னார்கள்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. து. முருகேசன்:** மைக் கொடுங்கள். அந்தத் தகுதி இருக்கிறது. அதனால்தான் ஊழல் எதிர்ப்பு மாநாடு என எங்களுடைய தலைவர் கேப்டன் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திலே, உளுந்தூர்பேட்டைக்கு அருகிலே இருக்கின்ற எலஞ்சியில் நடத்தச் சொன்னார்கள். அதனடிப்படையிலே, இலட்சக்கணக்கான தொண்டர்கள் அங்கே குவிந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய கருத்து பதிவு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. து. முருகேசன், உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது பதிவு செய்யப்பட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றாக வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். திரு. ஏ. லாசர், பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அதனை வரவேற்றுள்ளது.

*(தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மற்ற உறுப்பினர்களுடைய நேரத்தை வீணாக்குகிறீர்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. ஏ. லாசர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர்கள் பேசினார்கள், அதற்கு நீங்களும் பதில் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. வி.சி. சந்திரகுமார், இது தவறு. மாண்புமிகு உறுப்பினர் இது தவறு, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அடுத்த உறுப்பினருடைய உரிமையைப் பறிக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஏ. லாசர், நீங்கள் பேசுங்கள்.



(குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ஏ. லாசர், நீங்கள் பேசுங்கள். அவர்களுடைய பேச்சை பொருட்படுத்தாமல், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** விவசாயம், தொழில், கல்வி, சுகாதாரம், சமூகநலத் திட்டம், உணவு, எஸ்.சி./எஸ்.டி., உட்கூறு திட்ட ஒதுக்கீடு, போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை என பல்வேறு மக்கள் நலம் சார்ந்த துறைகளுக்கு தமிழக அரசு தன்னுடைய பட்ஜெட்டில் கடந்த ஆண்டைவிட கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இது வரவேற்கத்தக்கது. அதோடு, கடந்த நான்கு பட்ஜெட்டுகளிலும் மக்கள் தலையில் புதிய வரிகள் எதுவும் சுமத்தாமல், அதே நேரத்தில் மக்களுக்காகத் திட்டங்களையும், முறையாக திட்டமிட்டு நிதிநிலை அறிக்கையினை மிக கவனமாகத் தயாரித்துள்ளதற்கு நானும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கடந்த ஆண்டு, கடுமையான வறட்சியை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வரின் தலைமையிலான இந்த அரசு பிரச்சினைகளை மிகத் திறமையாகக் கையாண்டு, அதனை சமாளித்தது. இந்த ஆண்டும் வட கிழக்கு, தென்மேற்குப் பருவமழை போதிய அளவு இல்லாத காரணத்தினால், பல மாவட்டங்கள் வறட்சியில் சிக்கியுள்ளன.

குறிப்பாக, தென் மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களில் தருமபுரி, வேலூர் போன்ற மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனப் பகுதி ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூரில் ஒரு பகுதியைத் தவிர்த்து, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், விருதுநகர் மாவட்டத்தில் 10 ஒன்றியங்களிலே மேற்கு மலையோரப் பகுதியைத் தவிர்த்து, ஏனைய பகுதிகள் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில், வாடிப்பட்டியில் 40 சதவிகிதமும், மேலூர் தாலுகாவில் 60 சதவிகிதமும் நெல் சாகுபடி மட்டும் எடுக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டப் பகுதிகள் முழுவதும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

பிற்பகல் 1-00

புதுக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டங்கள் இம்முறை வறட்சியினால் முழுமையாக, கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று சொல்லும் நிலையில் உள்ளன. கண்மாய்களில், ஆறுகளில், கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை. ஆழ்குழாய் கிணற்று நீர் பல நூறு அடி ஆழத்திற்கு கீழே சென்றுவிட்டது. கடந்த ஆண்டு வறட்சியோடு, இந்த ஆண்டு மழையும் இல்லாததால், மாட்டுத் தீவனங்கள் தட்டுப்பாடு, குடிநீர் தட்டுப்பாடு போன்ற பல பிரச்சினைகளை இந்த மாவட்டத்து மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி ஆகிய பகுதிகளில் காவேரி கடைமடை பாசனத்தின்மூலம் செய்யப்பட்ட விவசாயம் முழுவதும் கருகிப்போன சூழ்நிலையில், மிகப் பெரிய கண்மாய் பாசனத்தைக் கொண்ட இந்த மாவட்டம், கண்மாய்களில் தண்ணீர் இல்லாததால் மொத்தமும் பாதித்துள்ளது. இதே நிலைமைதான் திண்டுக்கல் மாவட்டத்திலும் நீடிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் பிரச்சினை பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இயற்கை நமக்கு சாதகமாக இல்லாத காரணத்தினால், பல்வேறு மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு வருவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கையிலே 681 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை வருகிறதோ, அந்தந்தப் பகுதிகளிலெல்லாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுக்கு முறையாக தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருவ மழைக் குறைவினால் ஏற்பட்ட நிலைமையை ஆய்வு செய்ய வேண்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில், தலைமைச் செயலாளர் தலைமையில், அனைத்துத் துறை அலுவலர்களுடன் கடந்த 20-1-2014 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, 2013 ஆம் ஆண்டில் குறைவான மழை பெறப்பட்டதைத் தொடர்ந்து, குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டும், கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையரால் 4-2-2014 அன்று வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, நகராட்சி நிருவாகம், பேரூராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகிய துறைத் தலைவர்களுடன், எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆலோசனையும், அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி துறைத் தலைவர்களிடமிருந்து வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் இதர 11 மாவட்டங்களான வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்கவும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும் முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டு, ரூ.189.16 கோடி நிதி ஒதுக்கீடு வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பட்ஜெட்டிலும் அதற்கான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கும், எடுத்த நடவடிக்கைகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*அரசு, புதுக்கோட்டை மாவட்டத்தில் மாட்டுத் தீவனங்களை 9 ரூபாய் 85 காசுக்கு கொள்முதல் செய்து, மாடு வைத்திருப்பவர்களுக்கு இரண்டு ரூபாய்க்கு வழங்கி வருவது ஒரு நல்ல அம்சம். பாதிக்கப்பட்ட பிற மாவட்டங்களிலும் இதுபோன்ற நடைமுறைகளைச் செய்வதால் ஏற்கெனவே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளைப் பாதுகாப்பதுடன், அந்த மக்களுக்கு ஒரு நம்பிக்கையையும் உருவாக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் இரண்டு ரூபாய்க்கு தீவனங்கள் வழங்கப்படுவதாகக் கூறினார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட அத்தனை மாவட்டங்களிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 125 தீவனக் கிடங்குகள் அமைக்க 12.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் ஏறக்குறைய 59 தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டுவிட்டன. இன்னும் 66 தீவனக் கிடங்குகள் இந்த மாத இறுதிக்குள் திறக்கப்படவிருக்கின்றன. அதுமட்டுமல்ல, ஏறக்குறைய ஒரு கிலோ தீவனம் எட்டு ரூபாய், ஒன்பது ரூபாய்க்கு வெளியிலே விற்கிறது. அம்மா அவர்கள் ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு, அதாவது ஒரு மாட்டுக்கு மூன்று கிலோ வீதம் கொடுக்கிறார்கள். ஒரு விவசாயிக்கு ஐந்து மாடுகள் வீதம் ஒரு நாளைக்கு 15 கிலோ தீவனத்தை ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*



*பிற்பகல் 1-05*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.*

*என்னுடைய பெரியகுளம் தொகுதியில் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் கடந்த ஆண்டே கருகிவிட்டன. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவசாயிகள் கொடுத்த மனுக்களின் அடிப்படையில், ஆட்சித் தலைவர் அவர்களும் விவரங்களைச் சேகரித்து நிவாரணம் வழங்குவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்கள். குள்ளப்புரம் என்ற ஊரில் 75 ஆண்டுகளாக வற்றாத பெரிய கண்மாய் இந்த ஆண்டு முற்றிலும் வற்றிப் போய்விட்டது. தேனி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இலட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் காய்ந்துவிட்டதாக அங்குள்ள மக்களிடமிருந்து புகார் மனுக்கள் வந்துள்ளன. இதுபோன்று மா, கொய்யா போன்ற பழம் தரும் மரங்களும் காய்ந்துள்ளன. இவை குறித்து முழுமையான விவரங்களை அரசு சேகரித்து, இவர்களுக்கும் உரிய நஷ்ட ஈடு வழங்கிட வேண்டுகிறேன்.*

*அதோடு வறட்சியான இந்த மாவட்டங்களுடன், பிற மாவட்டங்களிலும் போதிய பருவ மழை இல்லாததினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினை குறித்தும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் நானும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குடிநீர்ப் பிரச்சினை இப்பொழுதே ஏற்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில்கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை முழுமையாக, இன்னும் போர்க்கால அடிப்படையில், நிவாரணப் பணிகளை துவங்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து உரிய நிவாரணங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*மத்திய அரசிடம் மாநில அரசு கூடுதல் நிதி கேட்டு கோரிக்கை மனு அனுப்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு தமிழக விஷயத்தில் மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளாமல், தமிழகத்தின் இந்த நிலையை உணர்ந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.*

வறட்சியால் விவசாயத் தொழிலாளர்களுக்கு இவ்வாண்டு விவசாயத்தின்மூலம் நேரடியாக வேலை கிடைக்கும் வாய்ப்புகள் பெரும்பகுதி குறைந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு வறண்ட பகுதிகளை வறட்சிப் பகுதி என அறிவித்து, அங்கு கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தினை 150 நாட்கள் வேலை கிடைத்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மத்திய அரசைப் பற்றிச் சொன்னேன். கடந்த ஆண்டு வறட்சியான பகுதிகளில் 150 நாட்கள் வேலை வழங்கப்படும் என அரசு அறிவித்தது. ஆனால், மத்திய அரசு மார்ச் மாதத்துடன் அந்த ஆண்டின் பணிகள் முடிக்கப்பட வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், 150 நாட்கள் வேலை தமிழ்நாட்டில் பெரும் பகுதிகளில் நடைபெறவில்லை. இந்த ஆண்டு அதுபோன்ற நிலைமை ஏற்படாமல், தமிழக அரசு வரும் வடகிழக்கு பருவமழைக் காலம் வரை 150 நாட்கள் வேலை கிடைத்திடும் விதத்தில், மத்திய அரசுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசிய அந்த வரிகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. லாசர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையான விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற உழைப்பாளிகளுக்கு தினக்கூலி ரூ.148 என்பது மிகக் குறைவானது. அதுவும் பல இடங்களில் கிடைக்காத நிலை உள்ளது. இந்நிலையில் மத்திய அரசு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின்கீழ் தினக்கூலி ரூ.182 வழங்க வேண்டுமென அறிவித்துள்ளது. இந்த 182 ரூபாய் கூலி ரேகா பணிகளுக்கும் பொருந்தும் என மத்திய அரசு அறிவித்திட உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடும் வறட்சியினால் விவசாயத் தொழிலாளர்கள் தோண்டும் கண்மாய், வாய்க்கால் போன்றவை வறண்டு கிடப்பதினால், தமிழக அரசு தற்போது குறைத்து அறிவித்துள்ள 42 கன அடி மண்ணையும் வெட்டி எடுப்பது மிகவும் சிரமமாக இருக்கும். எனவே, அதை 24 கன அடியாகக் குறைத்து பணிகளைக் கொடுக்கவேண்டுமென்றும், அவர்களுக்கு முழுக் கூலியும் கிடைக்கும்வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள சுமார் 1 கோடி மக்கள் வாழ்க்கைப் பிரச்சினையாக இது இருப்பதினால் இந்த வறட்சிக் காலத்தில் இந்த மக்களுக்கு அரசு உரிய கவனம் செலுத்தி அதற்குரிய நிருவாக ஏற்பாடுகளைச் செய்து இம்மக்களை வறட்சிப் பிடியிலிருந்து மீட்டிட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எதிர்காலத்தில் விவசாய வேலை காலங்களில் விவசாயப் பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் மட்டும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது என்று அரசு அறிவித்திடவேண்டும். அதுபோன்ற ஒரு நிலை இல்லை என்றால் விவசாயப் பணிகளுக்கு விவசாயத் தொழிலாளர்களை முழுமையாகப் புறக்கணிக்கும் அபாய நிலை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தை அரசு கணக்கில் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அரசு கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 2 கோடியே 93 இலட்சத்து

[திரு. ஏ. லாசர்] [2014 பிப்ரவரி 18

86 ஆயிரத்து 519 பேர், பதிவு செய்யப்பட்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இது நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலகத்திலிருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் அடிப்படையில் பெறப்பட்ட விவரம் ஆகும். ஆனால், இவர்களுக்கான அடையாள அட்டைகளை அரசு வழங்காததன் காரணமாக, இவர்கள் ஒவ்வொரு நலத்திட்ட உதவிகளுக்கும் வி.ஏ.ஓ., ஆர்.ஐ., தாசில்தார் என்று ஒவ்வொருவரையும், ஒவ்வொரு முறையும் அணுகி, கையெழுத்திற்காக அலைந்து சிரமப்படுகின்றனர். இதனால், அவர்களுக்கு பொருளாதாரச் சிரமம், கால விரயம், மன உளைச்சல் போன்றவை ஏற்படுகின்றன; அரசின்மீதும் தேவையற்ற மனக் கசப்பைக்கூட இது ஏற்படுத்துகிறது. எனவே, அரசு இவர்கள் அனைவருக்கும் உழவர் பாதுகாப்பு அட்டைகளை கொடுத்திட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் குடிமனையில்லாதோர் பட்டா பிரச்சினை என்பது தொடர்ந்து அனுமார் வாலாக நீண்டு கொண்டிருக்கிறது. தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் ஒவ்வோர் ஆண்டும் தொகுப்பு வீடு, பசுமை வீடு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இத்தனை இலட்சம் வீடுகள் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு மேலாகவும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இருப்பினும், வீடில்லாதோர் பிரச்சினையும், பட்டா கிடைக்காதோர் பிரச்சினையும் தொடர்கிறது. எனவே, தமிழக அரசு கீழ்க்கண்ட சில விஷயங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிமனைப் பட்டா கோருகிற அனைத்து நபர்களினுடைய பட்டியல்களையும் தொகுத்து, அவர்கள் குடியிருக்கும் இடங்களில் வகை மாற்றம் செய்வதற்கான வாய்ப்புள்ள இடங்கள் அனைத்தையும் ஏக காலத்தில் வகை மாற்றம் செய்திட நடவடிக்கை எடுப்பதுடன், நத்தம் புறம்போக்கு, அரசு புறம்போக்கு இவற்றையும் இணைத்து ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இப்பட்டாக்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் பெரும்பகுதி குடிமனைப் பட்டா பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் என்று கருதுகிறேன்.

தலித் மக்களுக்கான குடிமனை இடங்களை அரசு வாங்கி வழங்குவதில் நிலத்தின் விலை உயர்வு ஒரு தடையாக சமீப காலங்களில் இருந்து வருகிறது. எனவே, தமிழக அரசு எஸ்.சி., எஸ்.டி., பகுதியினருக்கு ஒதுக்கியுள்ள சிறப்பு உட்கூறு நிதியிலிருந்து சுமார் 1,000 கோடி ரூபாயை இதற்கென ஒதுக்கி, மாவட்டத்திற்கு 15 கோடி அல்லது 20 கோடி என்று மக்கள் தொகையின் அடிப்படையில் பிரித்துக் கொடுத்தால் கணிசமான இடங்களை மார்க்கெட் விலைக்கு வாங்கி, இவர்களுக்கு வீட்டடி மனை வழங்கிட இயலும்.



2014 பிப்ரவரி 18] [திரு. ஏ. லாசர்]

தலித், ஆதிவாசி மக்களுக்கு 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட காலனி வீடுகள் இடியும் நிலையில் உள்ளன. குடிசை மாற்று வாரியம் பழுதடைந்த பழைய அடுக்குமாடி வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டித் தருவதுபோல இவர்களுக்கும் வீடுகளைக் கட்டித்தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** 30 ஆண்டுகளுக்கு மேலான காலனி வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், இத்துடன் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** கோயில் நில குடியிருப்புதாரர்கள், குத்தகைதாரர்கள், விவசாயிகள், போன்றவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளின் குடியிருப்பு வீடுகளுக்கும் அரசே இலவச பட்டா வழங்க வேண்டுமென்றும், அந்த இடங்களுக்கான மார்க்கெட் விலையை கோயில் நிருவாகத்தின் கணக்கில் அரசு செலுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மற்ற குடியிருப்புதாரர்களுக்கு மார்க்கெட் விலையின் அடிப்படையில், தவணை அடிப்படையில் வசூலித்து கோயில் நிருவாகத்திடம் ஒப்படைக்கலாம். கோயில் நில குத்தகை விவசாயிகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருப்பதனால் அந்தக் குத்தகைத் தொகைகளை தள்ளுபடி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், (குறுக்கீடு) திரு. லாசர், நீங்கள் நன்றி சொல்வதாகயிருந்தால் சொல்லுங்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள். 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 6 பேர் பேச வேண்டும்.

**திரு. ஏ. லாசர்:** இரண்டு விஷயங்களைப் பற்றி கூறிவிட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் 13 கடலோரப் பகுதி மீனவர்கள், தடை செய்யப்பட்ட இரட்டை மடி வலையை அனுமதிக்கக் கூடாது; அது மீன் வளத்தை அழித்துவிடுகிறது என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். தடை செய்யப்பட்ட இந்த இரட்டை மடி வலையை அரசு உரிய முறையில் விசாரித்து நடவடிக்கை எடுத்து, நடந்து கொண்டிருக்கக்கூடிய போராட்டங்களையும் தவிர்த்து, மீனவ மக்களுடைய உணர்வையும் மதித்து, அந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பெரியகுளம் தொகுதியில், தேனி நகரத்தினுடைய மேம்பாட்டிற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அங்குள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 150 ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய் இடத்தை நகராட்சியிடம் ஒப்படைத்தால், அந்த நகரத்திலுள்ள பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கும், பூங்காக்கள் அமைப்பதற்கும் அது எதிர்காலத்தில் உதவும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரும்பு வெட்டும் தொழிலாளிகள் தமிழ்நாட்டில் சுமார் 7 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களுக்கென தனியாக அடையாள அட்டை, வாரியம், விபத்துக்கால நிவாரணம் போன்றவை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர், விதவை, ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளி ஆகியோருக்கான பென்சன் தொகைக்கான ஒதுக்கீடு கடந்த மூன்றாண்டுகளில் இருந்ததைவிட 3,000 கோடி ரூபாய் அதிகமாக தமிழக அரசு உயர்த்தி அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால், இதில் தகுதியில்லாதவர்களுக்கு நிதி உதவி கிடைப்பதும், தகுதி இருப்பவர்களுக்குக் கிடைக்காத நிலை இருப்பதையும் அரசு கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்துத் தடுத்து நிறுத்திடவேண்டும். அரசின் கொள்கையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு இது கிடைத்திட, உரிய ஏற்பாட்டை இன்னும் பலப்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சில பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களாக குறிப்பிட்ட பகுதியினருக்கு இந்த நலத் திட்ட உதவித் தொகை போய்ச் சேரவில்லை என்ற புகாரும் உள்ளது. அவற்றைக் களைந்திட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, எந்தப் பகுதியிலும் மூன்று மாதங்களாக முதியோர் ஓய்வூதியத் தொகை கொடுக்கப்படாமல் இல்லை. ஜனவரி மாதம் வரை 36.4 இலட்சம் பயனாளிகளுக்கு முழுமையாக முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் 6 உறுப்பினர்கள் பேசவேண்டும். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். அரசின்மீது குற்றச்சாட்டாக சொல்லவில்லை. 3 விதவைப் பெண்கள் என்னிடம் வந்து, இரண்டு மாதங்களாக எங்களுக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை என்று கூறிய தகவலின் அடிப்படையில் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 1979 தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், சமீபத்தில் அமல்படுத்தப்பட்டதால் சிறு, குறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இது அதிகமான நிலங்களை வைத்திருக்கக்கூடிய எஸ்டேட் உரிமையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் ஆகும்.

[திரு. ஏ. லாசர்] [2014 பிப்ரவரி 18

இதை அமல்படுத்துவதன்மூலம், ஏழை விவசாயிகள் தங்கள் குழந்தைகளின் திருமணத்திற்காகவும் கல்விக்காகவும் தங்களின் நிலங்களை விற்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையும் கவனத்தில்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். தேனி மாவட்டம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியக்கூடிய 204 தற்காலிகத் தொழிலாளர்கள் 8 வருடங்களாக 33 ரூபாயை ஊதியமாக பெற்று வருகிறார்கள். இப்போது outsourcing முறையிலே புதிய ஆட்களை வேலைக்கு எடுத்து, அவர்களுக்கு ஊதியமாக ரூ.150/- தரப்படுகிற சூழ்நிலை இருப்பதால், 8 வருடங்களாக 33 ரூபாய்க்குப் பணிபுரிந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு, வாழ்க்கை இழந்து, குடும்பத்தோடு தெருவில் நிற்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனம் செய்கின்ற பட்ஜெட், இந்த பட்ஜெட் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எனது வரவேற்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதிப் பங்கீட்டையும், மாநில திட்டங்களுக்கான நிதியையும் முழுமையாக கொடுக்காதபட்சத்தில், மொத்த பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாக விவசாயம், கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மக்கள் நல திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. அனுமதிக்கப்பட்ட அளவைவிட குறைவாகவே கடந்த மூன்றாண்டுகளாக கடன் பெற்று சமாளித்து வருவதும், நடப்பு நிதியாண்டிலும் குறைவான கடன் தொகையை பெற முடிவு செய்திருப்பதும் சிறந்த நிதி நிருவாகத்தைக் காட்டுகிறது.

பொதுவாக, ஆளும் கட்சி என்றாலே காவல் நிலையங்களில் தலையிடுவதும், சட்டத்தை வளைப்பதும் வாடிக்கையான ஒன்று. ஆனால், அப்படி எந்தவொரு நிகழ்வுக்கும் துளிகூட இடம் கொடாமல், நடுநிலையாளர்களே பாராட்டும்வகையில் காவல்



2014 பிப்ரவரி 18] [திரு. பி.எல். சுந்தரம்]

துறையின் நடவடிக்கைகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழும் மனிதர்களின் வயிற்றுக்குச் சோறிட விலையில்லா அரிசி, அம்மா உணவகம் ஆகியவற்றோடு வாடிய பயிரைக் கண்டு வாடி—வறட்சிக்கு நிவாரணம்; கால்நடைகளுக்குத் தீவனம் ஆகியவற்றை வழங்கியது மிகவும் வரவேற்புக்குரியவை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த ஆண்டு குடிநீர் மற்றும் தீவனத் தட்டுப்பாடுகளை சமாளிக்க 681 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரணத் தொகையை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. மலைப்பாங்கான பகுதிகளில் சிறப்புத் தேவைகளுக்காக உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்க இருப்பதுபோல், என்னுடைய தொகுதியில், தாளவாடி மலைப் பகுதியை மையமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கவேண்டும். வீட்டுமனைப் பட்டா வழங்கும் தேவை இன்னும் நீடிப்பதால் ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தை கால நீட்டிப்பு செய்ய வேண்டும்.

பருத்தி உற்பத்தியைப் பெருக்க தனி இயக்கத்தை தொடங்கவிருப்பது பாராட்டுக்குரியது. பற்றாக்குறையான நீராதாரத்தைக் கொண்டு நமது மாநிலத்தின் நீர் நிருவாகத்தினை மேம்படுத்த சொட்டு நீர்ப்பாசனத்திற்கு மானியம் அளித்திருப்பது மிகுந்த அவசியமான ஒன்று. சொட்டு நீர்ப்பாசனத்திற்கான மானியத்தின் ஏக்கர் அளவிலான வரம்பினை நீக்கி, அனைவருக்கும் நூறு சதவிகிதம் மானியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாவாரி விவசாய பரப்பு குறைந்து வருகிறது. பருப்பு மற்றும் எண்ணெயை நாம் இறக்குமதி செய்கிறோம். மானாவாரி சாகுபடி முறையில் ஏக்கருக்கு செலவிடும் முதலீட்டு செலவை ஈடுகட்டும்வண்ணம் ஒரு தொகையை நேரடி மானியமாக வழங்குவதன்மூலம் மானாவாரி சாகுபடியை பாதுகாக்க முடியும். தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கமுடியும். எப்படி தோட்டக் கலைக்கென தனியாக துறை உள்ளதோ, அதேபோல மானாவாரி விவசாயத்திற்கென்று தனித் துறையை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துவிட்டதால், உணவே நஞ்சாகிவிட்டது. எனவே, இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும்வகையில், அதற்கு மானியம் வழங்கவேண்டும். சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்கள், மாணவர் விடுதிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கவேண்டும். தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் கனவை நனவாக்கும் வேளையில், பால் உற்பத்தியாளர்களை பாதிக்கும் தீவன விலையேற்றத்தை ஈடுசெய்யும்வகையில், ஒரு லிட்டருக்கு 5 ரூபாய் அளவு மானியமாக வழங்கவேண்டும்.

மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட, இந்த பட்ஜெட்டிலும் நிதி ஒதுக்கி, 'நாளை வங்கத்தில் ஓடிவரும் மிகை நீரை, மையத்து நாட்டிற்குக் கொண்டு வருவோம்; இந்திய நதிகளின் இணைப்பை நாங்கள்தான் செய்யப்போகிறோம்' என்று சொல்லாமல் சொல்லியிருப்பது பாராட்டுக்குரியது. மத்திய அரசின் நிதி கிடைக்காவிட்டாலும், மாநில அரசே, கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்குப் பயன்படும் அவினாசி-அத்திக்கடவு திட்டத்தினை நிறைவேற்றும் என்று இந்த அவையிலே ஏற்கெனவே அறிவித்திருந்ததை மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பவானி ஆற்றிலிருந்து நீரெடுத்துப் பயன்படுத்திவரும் நீரேற்றுப் பாசனத்தை அரசு அகற்றாமல் முறைப்படுத்தவேண்டும். வன வளத்தைப் பெருக்க பல்வேறு திட்டங்களைச் செயலாக்கிவரும் வேளையில், வனத்தை விட்டு வெளியே வரும் விலங்குகளால் பயிர்களுக்கும், உயிர்களுக்கும் ஏற்படும் சேதம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. அகழிகள் தோண்டுதல், வேலி அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளில் கர்நாடக மாநில வனத் துறை கையாண்டு வரும் சில முறைகளை நமது வனத் துறை பரிசீலிப்பது அவசியம். வனத்தை விட்டு வெளியே வரும் காட்டுப் பன்றிகள், தோட்டத்திற்குள்ளேயே தங்கி குட்டியையும் ஈன்று, பெருகிவிட்டன. இனியும் காலந்தாழ்த்தாமல் காட்டுப் பன்றியை அரிய வன விலங்குப் பட்டியலிலிருந்து நீக்கிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.



கச்சா எண்ணெயின் விலை உயர்ந்தால், டீசல் விலை உயரும். ஆனால், கல்வி வரி, கார்கில் போர் வரி போன்றவற்றைக் குறைத்தால், டீசல் விலை குறையும். ஆனால், அதை மைய அரசு செய்யாது. தெருவோரத்தில் கத்திரிக்காய் விற்கும் பாட்டிகூட, 5 கிலோ கத்திரிக்காயை ஒன்றாக வாங்கினால், விலையைக் குறைத்துக் கொடுப்பார். ஆனால், மத்திய அரசு மொத்த டீசல் கொள்முதலுக்கு விலையை உயர்த்தியுள்ளது. டீசல் விலையேற்றத்தால் நெருக்கடிக்குள்ளாகிவரும் போக்குவரத்துத் துறைக்கு 500 கோடி ரூபாய் டீசல் மானியம் அளித்திருப்பது நல்லது.

ஓட்டுநர் உரிமம் பெற எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்கிற தகுதி அளவை விலக்கி, தாய் மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்று தகுதி நிர்ணயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச முதலீட்டை ஈர்க்கும் முயற்சி, குறுந்தொழில் குழுமங்களுக்கான ஆதரவு நடவடிக்கை போன்றவை வரவேற்கத்தக்கவை. நாட்டுச் செங்கல் சூளைகளுக்கு சொந்த நிலத்திலிருந்து மண் எடுக்க விதித்திருக்கும் தடையை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, செங்கல் சூளைக்குத் தனியார் இடத்திலிருந்து மண் எடுப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எந்தக் காலத்திலும் இதுபோன்ற தடையை விதிக்கவில்லை. சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெற்று மண்ணை எடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கின்றது. அந்த ஆணையை ஏற்று, மத்திய அரசு நமக்குத் தாக்கீது அனுப்பியிருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான், நீங்கள் சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெற்று மணல் எடுங்கள் என்று சொல்லியிருக்கின்றோமேயொழிய, தடை என்பது எந்த இடத்திலும் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநிலச் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீட்டு ஆணையத்தின்

வாயிலாக அதற்கு மனு செய்தால், அதைப் பரிசீலித்து, உடனடியாக ஆணை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். யாராவது மனு செய்திருந்தால், அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாகத் தகவல் சொல்வார்கள் என்று சொன்னால், நாங்கள் அவர்களுடைய மனுவைப் பரிசீலித்து, உடனடியாக அனுமதியைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணல் அள்ளுகிற பிரச்சினையைப் பொறுத்தவரையில், தொடர்ந்து இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்குச் சுற்றுப்புறச் சூழல் துறையினுடைய அனுமதியை வாங்கிச் செய்வதிலே எந்தத் தடையும் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், பல மாவட்டங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் உள்ள நிலை குறித்து நான் கடந்த முறையும் குறிப்பிட்டேன். அங்கே சுற்றுப்புறச் சூழல் துறையிலிருந்து அனுமதி வாங்குவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அரசாங்கத்தின் சார்பில், பொதுப் பணித் துறையின் சார்பில் பரிந்துரைக்கப்பட்ட மனுக்களே பரிசீலிக்கப்படாமல், கடலூரிலும், சிதம்பரத்திலும் ஏறக்குறைய *30*-க்கும் மேற்பட்ட மணல் குவாரிகளுக்கு இதுவரையில் அனுமதி அளிக்கப்படாமல், அங்கு மணல் தொழிலே நின்று போயிருக்கிறது. எனவே, இதில் அரசு அருள்கூர்ந்து தலையிட்டால்தான் நடக்குமே தவிர, சம்பந்தப்பட்டவர்களே அதற்கான அனுமதி வாங்கி நடத்த வேண்டும் என்பது சாதாரணமாக நடக்கக்கூடிய காரியமல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்



அவர்கள் செங்கல் சூளைக்கு பட்டா நிலத்தில் மண் எடுப்பதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், தனியார் மணல் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறுவது கடினமாக இருக்கிறது, அதை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எந்தவொரு மனுவாக இருந்தாலும் அதை உடனடியாக அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பி, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்று, தங்கு தடையில்லாமல் மணல் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றது. இதில் எங்கே பிரச்சினை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களது கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால், உடனடியாக அதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது மணல் எடுப்பது பற்றிய சில பிரச்சினைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். உயர் நீதிமன்றம் இதில் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெற்றுதான், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மணல் எடுப்பதற்கான உரிமம் வழங்க வேண்டும் என்று அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால்தான், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் என்னென்ன சான்றுகளையும், ஆவணங்களையும் கேட்கின்றதோ, அவற்றையெல்லாம் அரசின் சார்பாகக் கொடுத்து, அதற்குப் பிறகுதான் மணல் குவாரிகளுக்கு அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில், இதுவரை *26* மணல் குவாரிகளுக்கு அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது. அந்த *26* மணல் குவாரிகளிலிருந்து எடுக்கப்படுகின்ற மணல் *34* stock yard-களில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

வைக்கப்பட்டு, அந்த stock yard-கள் மூலமாகத்தான் இன்று மணல் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தனிக் கவனம் செலுத்தி, மாநிலம் முழுவதும் மணல் பரவலாக demand இல்லாமல் கிடைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதால், மணல் விலை கட்டுப்படுத்தப்பட்டு, இன்றைக்கு குறைந்த விலையில் மணல் விற்கப்படுகிறது என்பதை இங்கே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்து போக்குவரத்து அதிகம் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின்கீழ் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பு அவசியமானதொன்றாகும். பேருந்து போக்குவரத்தை அளவுகோலாகக் கொள்ளாமல் 5 கிலோமீட்டர் நீளத்திற்கு அதிகமாக உள்ள அனைத்து உள்ளாட்சி சாலைகளையுமே நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின்கீழ் கொண்டு வருவதுதான் சிறந்த பராமரிப்பிற்கு உகந்ததாக இருக்கும் என்பதால், இதுகுறித்து பரிசீலிக்க வேண்டுகிறேன். எனது தொகுதியில் ஒரு மலைப் பகுதியில் உள்ள பின்தங்கிய உள்ளாட்சி அமைப்பில் சுமார் 15 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை இருக்கிறது. அந்த உள்ளாட்சி அமைப்பு அதைப் பராமரிப்பதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கிறது. ஆகவே, இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்பு திகைத்து நிற்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதியாண்டில்கூட 928 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள் மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனால் கிட்டத்தட்ட 1,28,000 கிலோ மீட்டர் சாலைகளை உள்ளடக்கிய தமிழ்



2014 பிப்ரவரி 18] [திரு. கே.பி. முனுசாமி]

மாநிலத்தில் அனைத்து சாலைகளும் மேம்படுத்தப்பட்டு, தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. எனவே, திகைக்கத் தேவையில்லை. மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை போட முடியவில்லை என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொள்ளாயிரத்து என்று சொன்னதை ஒன்பதாயிரம் என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் 6,000 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அறிவிக்கின்ற கூலியை தொழிலாளர்கள் எங்கும் முழுமையாகப் பெற முடியவில்லை. வேலை அளவினை நிர்ணயிப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலவுகிறது. இத்தொழிலாளர்கள் முழுமையான கூலியைப் பெறாதபட்சத்தில் திட்டத்தின் நோக்கம் முழுமையடையாது. ஆகவே, வேலை அளவில் கூலி கொடுப்பதற்கு பதிலாக கால அளவில் கூலி வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்தினை பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவேண்டும். நகர்ப்புறத்தில் வாழும் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கும்வகையில் நகராட்சி எல்லைக்கு வெளியே

ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அரசு நிலங்களில் வீட்டு மனைகள் ஒதுக்கக்கூடாது என்ற தடையை நீக்கவேண்டும். ஒரு வட்டாரத்திற்கு இரண்டு நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கும் திட்டம் அற்புதமானதாகும். எட்டாத தொலைவிலுள்ள குக்கிராமங்களில் மருத்துவத் தேவைகளை இக்குழுக்கள் நிச்சயம் பூர்த்தி செய்யும்.

*பிற்பகல் 1-30*

கடந்த ஆட்சிக்காலத்தில் தனியார் இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு இலாபம் ஈட்டிக் கொடுத்த மருத்துவ காப்பீடு திட்டம், இந்த ஆட்சியில் பொதுத் துறைக்கு பயன்படுவதோடு பொது மருத்துவமனைகளுக்கும் பணத்தை ஈட்டிக்கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஏறக்குறைய ரூ.*21,000* கோடிகளுக்கு மேல் இந்த அரசு, பள்ளிக் கல்விக்கும், உயர் கல்விக்கும் நிதி ஒதுக்கியிருப்பது "கல்வியில் சிறந்தது தமிழ்நாடு" என்ற பாரதியின் கனவினை மெய்யாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் அரசின் கல்வி நிறுவனங்களை அமைக்க வேண்டுமென்ற இந்த அரசின் குறிக்கோளின் அடிப்படையில் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் நிறைந்து வாழும் எனது பவானிசாகர் தொகுதியில் நான் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டிருக்கிற கலை, அறிவியல் கல்லூரியை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருமண உதவித் திட்டங்கள் பெண் கல்வியை ஊக்குவிப்பதிலும், குறைந்த வயதில் திருமணம் செய்வதை தடுப்பதிலும் பெரும் சாதனையை செய்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதே திட்டம் மத்திய அரசின் திட்டமாக இருக்குமேயானால், கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கேற்ப, டீசல் விலை உயர்வதுபோல், தங்கத்தின் விலை உயர உயர நான்கு கிராம் மூன்றாகி, மூன்று இரண்டாகி, இரண்டு ஒன்றாகி, தங்கமே இல்லாமல் குறைந்து கரைந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நெருக்கடிக்கு இடையிலேயும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில எல்லையில் வசிக்கும் மொழிச் சிறுபான்மையினருக்காக நமது அரசு பள்ளிகளை நடத்துகிறது. (குறுக்கீடு) இப்பள்ளியில் பயிலும் மாணவிகள் தாய் மொழி வழி உயர் கல்விக்காக பக்கத்து மாநிலங்களுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி விஜயதரணி, உங்கள் உறுப்பினர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள் (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள் (குறுக்கீடு) அவையின் நேரத்தை நீங்கள் வீணடிக்க வேண்டாம். (குறுக்கீடு) இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் ஒன்றும் ஆட்சேபகரமான கருத்துகளைச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** நாங்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தர மாட்டேன் என்கிறீர்களே, இது என்ன ஓரவஞ்சனை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, ஓரவஞ்சனை என்று எல்லாம் சொல்லக்கூடாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து உங்கள் உறுப்பினர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியில் ஓரவஞ்சனை செய்வதால்தான் நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக உள்ள இந்தத் திட்டம் பெண் எங்கு சென்று படித்தாலும் உதவும் வகையில் இருக்கவேண்டும். எனது தொகுதியிலுள்ள கர்நாடக எல்லையோர பகுதியான தாளவாடி வட்டாரத்தில் *11* பெண்கள் மட்டுமே இந்த உதவியினைப் பெற்றுள்ளார்கள். ஆனால், மாவட்டம் முழுவதும் உள்ள *14* வட்டாரங்களில் *1,088* பேர் இந்த உதவிகளைப் பெற்றுள்ளார்கள். ஆகவே, அண்டை மாநிலங்களுக்குச் சென்று உயர் கல்வி பெற்று வரும் மொழிச் சிறுபான்மையின பெண்களுக்கும் இந்தத் திட்டம் கிடைக்கச் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த அன்னையர்களுக்கு வழங்கும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி ஆகியவை விலை கொடுத்து வாங்கும் பொருட்களைவிட நல்ல தரமானதாக உள்ளன என்ற பாராட்டைப் பெற்றுள்ளது என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், விலையில்லாமல் வழங்கப்படும் சைக்கிளின் தரத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவர்கள் மதம் மாறியிருந்தாலும், அவர்கள் உயர் கல்விக்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தை செலுத்தும் திட்டம், (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் கல்வி உயர்வு பெற பேருதவியாக உள்ளது. அரசு என்னதான் உதவினாலும், தனியார் கல்வி நிறுவனங்கள் அதற்கு மேல் மேசை, நாற்காலி என கணக்கு போட்டு, மாணவர்களின் தலையில் சுமையை ஏற்றிவிடுகின்றன. இது முற்றிலும் தடுக்கப்படும்போதுதான், அரசின் உதவி முழுமையான பலனைத் தரும் என்று கருதுகிறேன். எனது மாவட்டத்தில், பழங்குடியினர் நலத் துறையின்மூலம் *2006* வன உரிமைச் சட்டப்படி, பழங்குடியினருக்கு நில உரிமை வழங்கும் பணியினை துவக்கியிருக்கிறது என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக *435.55* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பழங்குடியினர் வாழும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று சேரவேண்டும். நூற்றுக்கும் மேற்பட்ட பழங்குடியின கிராமங்களைக் கொண்ட ஈரோடு மாவட்டத்திற்கு துணைத் திட்ட நிதி எதுவும் கடந்த ஆண்டில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அனைத்து தரப்பினரும் பயனடையும் திட்டங்களுக்கு துணைத் திட்ட நிதியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு திட்டங்களுக்கு மட்டும் துணைத் திட்ட நிதியைப் பயன்படுத்துவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியப் பணிகளை தாலுகா அளவில் மேற்கொள்ள வழி செய்யவேண்டும். கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக கட்டுமானத் தொழிலிலும், பத்திரப்



பதிவிலும் ஏற்பட்ட குறையினைப் போக்கும்வகையில் வழிகாட்டி மதிப்பினை சற்றுக் குறைப்பது பற்றி, பரிசீலிக்குமாறு அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

*பிற்பகல் 1-35*

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எங்களின் குல தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, நாளைய பாரதத்தின் பிரதமராகவும், எதிர்கால இந்தியாவின் ஏற்றமிகு தலைவியாகவும் விளங்கப்போகும் அம்மாவின் பொற்பாத மலர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். கடனில்லா பாரதத்தைக் கட்டிக் காப்பதற்கும், கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்கும், கலவரம் இல்லா பூமியாக்கி காந்தி தேசத்தை அமைதிப் பூங்காவாக மாற்றுவதற்கும், அம்மா பிரதமர் ஆகவேண்டும். எதிர்கால இந்தியாவை ஆளப்போகும் அம்மா அவர்களுக்கு *66*-வது பிறந்த நாள். அம்மா அவர்கள் *100* ஆண்டு, பல கோடி நூறாண்டு எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ இறைவனிடம் கையேந்துகிறேன். இறைவனை வணங்குகின்றேன்.

அரியதாய், பெரியதாய், வணக்கத்திற்குரியதாய், எளியதாய், வலியதாய், என்றுமே இனியதாய், மலர்ந்ததாய். கனிந்ததாய். மனதிலே நிறைந்த தாய்! வளர்ந்ததாய் வாழ்வதாய் வந்த தாய் எங்கள் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா எங்கள் தாய்! எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பணிவான வணக்கத்தை அவர்தம் மலர்ப் பாதங்களில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன். மண்ணின் பெருமை, மரபினர் புகழையெல்லாம் தன் புகழ் ஆக்கிக்கொண்ட தலைவி. சிகரங்களைத் தொட்டு, சிந்தையில் நிறைந்து எங்கள் மனங்களில் வாழும் மனிதப் புனிதவதி. தென்றலாய் தொண்டரையும், எங்களையும் கரை சேர்க்கும் ஞானத் தாய். அகந்தையை அழிப்பவர், ஆற்றலைக் கொடுப்பவர் அவர்தான் எங்கள் அன்னை மகா சக்தியாக விளங்குகின்ற அம்மாவின் மலர்ப் பாதங்களுக்கு மீண்டும் என் பணிவான வணக்கங்கள்.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2014 பிப்ரவரி 18

வரியில்லா நிதிநிலை அறிக்கையை தந்து, வரலாற்றில் இந்த நிதிநிலை அறிக்கைக்கு நிகரில்லை என்று சொல்லி அத்தனை தமிழ் நெஞ்சங்களும் ஓர் அடி உயர்ந்து நின்று அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் புரட்சித் தலைவி அம்மா எங்களைக் காப்பாற்றுவார் என நம்புகிறார்கள். வியர்வையில் குளித்து, சேற்றையே ஆடையாகக் கொண்டு வரப்புகளிலே உலவுகின்றானே உழவர்குடி பெருமகன், அவன் நம்புகிறான், புரட்சித் தலைவி அம்மா எங்களைக் காப்பாற்றுவார் என்று. கருமேகங்கள் விலகி, பத்தாம் பசலி காகங்கள் பொது வாழ்க்கையில் இருந்து விரட்டப்பட்டு உரிமை தாகத்தினை தணித்துக் கொள்கின்ற வேகம் நாடு முழுவதும் பரவலாக எழுந்துவிட்டது. இந்த நிலையிலேதான் களைப்பறியா உழைப்பும், கடமை மறவாத பண்பும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரியில்லாத நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள்.

தமிழகத்தை ஆண்டு சென்ற மைனாரிட்டி அரசு நாட்டின் நிதிநிலையை சீர் குலைத்து சென்றுவிட்டது. தனக்கும், தன் மகனுக்கும், பேரனுக்கும், மகளுக்கும் பதவி வாங்க ஆளாய் பறந்தவர்கள் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் சிக்கி, திகார் சிறைச்சாலையிலிருந்து ஜாமீன் பெற, செய்யக் கூடாததையெல்லாம் செய்து தமிழ்நாட்டுக்கே தலைகுனிவை ஏற்படுத்தியவர்கள். காவேரி நதிநீர் உரிமையை தன் பதவி சுகத்துக்காக விட்டுக் கொடுத்தவர்கள், கச்சத் தீவை தாரை வார்த்து கொடுத்தவர்கள், தொப்புள் கொடி உறவான இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்கு துணை போனவர்கள், தன் குடும்ப சண்டையையே தீர்க்க முடியாத கட்சித் தலைவர் ஒருபக்கம். உளுந்தூர்பேட்டையில் உளறி, ஊர் சிரித்து, டில்லி கோட்டைக்குச் சென்று, உளறி நாடே சிரிப்பாய் சிரித்து, எதற்காக டில்லிக்கு சென்றோம் என்று சென்றவர்களுக்கும் தெரியவில்லை. எதற்காக வந்தார்கள், ஏன் வந்தார்கள், என்ன சொன்னார்கள், (குறுக்கீடுகள்) என்ன பேசினார்கள் என்று ரோபோ பொம்மைக்கும் தெரியவில்லை. கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர் எல்லாம் வானம் ஏறி வைகுண்டம் போகப் போகிறாராம். உள்ளூரில் விலை போகாதது, வெளியூரில் விலை போகுமா? சிரிப்பாய் சிரித்து வந்ததுதான் மிச்சம். (குறுக்கீடுகள்) இப்படிப்பட்டவர்கள் நிதிநிலை அறிக்கையை பற்றிப் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 18] [திரு. இரா. துரைக்கண்ணு]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதமான இந்தியாவிற்கே எடுத்துக் காட்டாக, வரும் காலத்தில் இதைப்போன்ற உன்னதமான ஒப்பற்ற நிதிநிலை அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய இருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உளுந்தூர்பேட்டை மாநாடு பற்றி உங்கள் கருத்தைப் பதிவு செய்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உளுந்தூர்பேட்டை உங்களுக்கு மட்டுமா சொந்தம்? உட்காருங்கள். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** வருங்கால பாரதப் பிரதமர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையை நாடே போற்றுகிறது. (குறுக்கீடுகள்) அம்மா அம்மாதான், மற்றவர்கள் எல்லாம் வெறும் சும்மாதான்.

வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் என்று பாடிய பாரதியின் கூற்றுப்படி அத்தனை குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசியை வழங்கி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து இருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) குடியிருக்க மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகளும், பசும் தளிர்களாம் பள்ளிப் பிள்ளைகளுக்கு சீருடைகளையும் பாமர மக்களுக்கு விலையில்லா வேட்டி சேலைகளையும் வழங்கி ஏழைகளின் நெஞ்சிலே நிறைந்து இருக்கிறார் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இப்படி உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று ஒரு மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் வழங்கியிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் கோடானுகோடி நன்றி தெரிவிப்பதை நாடு முழுவதும் எங்களால் காண முடிகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் என்ன பேசினார் என்பதைப் பார்த்துவிட்டு பிறகு முடிவு செய்யலாம். (குறுக்கீடுகள்) நடவடிக்கைக் குறிப்பினை பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இத்தாலி நாட்டில் சுடர் ஒளியாக விளங்கினார் மாஜினி. அவர் துணிவையும் தன்னம்பிக்கையையும் இரண்டு கால்களாகக் கொண்டு அரசியலிலே வெற்றி பெற்றார். அதேபோல, துணிவையும், தன்னம்பிக்கையையும் இரண்டு கண்களாகக் கொண்டு அரசியல் வானிலே இந்தியத் திருநாட்டிற்கே ஒளி வீசப் போகிறார் இதய தெய்வம் அம்மா அவர்கள்.

மரத்தடியில் வகுப்புகள் நடைபெற்ற காலத்தைப் போக்கி, மடிக்கணினி வகுப்பாக்கிய பெருமை அம்மாவுக்கு உண்டு. ஆலைகள், கல்விச் சாலைகள், தொழிற்கூடங்கள் அனைத்தும் அம்மாவின் ஆட்சியிலே மேம்பாடு அடைவதற்கு நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 1-40

“என்றுமுள தென்றமிழ்” என்றான் கம்பன், “கன்னித் தமிழ்” என்றான் சுந்தரம்பிள்ளை.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்”

என்றான் பாரதி.

“தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்”

என்று உரைத்திட்டான் பாரதிதாசன்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தமிழ் மொழியின் வளர்ச்சிக்கென தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் 31.61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதையும், வரும் ஆண்டிற்கு ரூ.6.55 கோடி ஒதுக்கப்பட்டதையும், இந்நிதியாண்டிற்கு ரூ.39.29 கோடி அனுமதிக்கப்பட்டதையும் நினைவுகூர்ந்து என் நெஞ்சார்ந்த நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பிக்கிறேன்.

தேனாறு பாயுது, செங்கதிர் சாயுது ஆனாலும் விவசாயத்திலே உன்னத நிலையை அடைய முடியவில்லையே என்று ஒருகாலத்திலே விவசாயிகள் ஏங்கித் தவித்தார்கள். அந்த நிலையை மாற்றியமைத்து உற்பத்தித் திறனை உயர்த்தி, இரண்டாம் பசுமை



புரட்சியை உருவாக்கி, உன்னத இலட்சியத்தை எட்டிட திட்டங்களை, உற்பத்தித் திறனை உயர்த்தி விவசாயிகளுக்கு கூடுதல் பலன் கிடைக்க அம்மாவின் அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.323 கோடி நிதி ஒதுக்கி வழிவகை செய்திருக்கிறது என்பதை அறிந்து ஒவ்வோர் உழவர் பெருமக்களும் அன்போடு வாழ்த்துகிறார்கள். காவேரிப் பிரச்சினையில் தமிழக மக்களுக்கும், காவேரி டெல்டா விவசாயிகளுக்கும் துரோகம் இழைத்து, கச்சத் தீவு பறிபோவதற்கு காரணமாயிருந்த ஒரு தலைவரும், பாருக்குள்ளே நல்ல நாடு, என்று கவிஞர் சொன்னதை “BAR-க்குள்ளே” என் வீடு என்று இருக்கிறார் இன்னொரு கட்சித் தலைவர். இவர்கள் இருவருக்கும் சவுக்கடி கொடுப்பதுபோல அம்மாவின் நிதிநிலை அறிக்கை அமையப்பெற்றிருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சட்டம், ஒழுங்கு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கட்டப் பஞ்சாயத்து, நில ஆக்கிரமிப்பு, ரவுடியிசம் ஆகியவை ஒழிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சென்ற ஆட்சியில் மதுரைக்குச் செல்ல முடியாதவர்கள் இன்று அம்மா ஆட்சியில் சர்வ சாதாரணமாக நடைபயிற்சி பெற்று வருகின்றார்கள். சிறப்பாக செயல்படுகின்றது காவல் துறை. காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ.5,186.20 கோடி ஆகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ரூ.189.65 கோடி ஒதுக்கீடு. சிறைச்சாலைகள் துறைக்கு ரூ.194.66 கோடி ஒதுக்கீடு.

சென்ற ஆட்சியில் நீதி வழங்கும் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை. ஆனால் இன்று பாதுகாப்பான, நேர்மையான நீதி நிருவாகம் நடைபெறுகிறது. அந்த நீதி நிருவாகத் துறைக்கு ரூ.783.02 கோடி ஒதுக்கீடு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** தன் குடும்பத்திற்காக நடத்தப்பட்டது கோவையில் செம்மொழி மாநாடு. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழுக்காக தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் அறிஞர்களைக்கொண்டு நடத்தப்பட்டது 8-வது உலகத் தமிழ் மாநாடு. உலகத் தமிழ் மாநாடு கண்ட தமிழ்த் தாய் அம்மா அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டி மீண்டும் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2014 பிப்ரவரி 18

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான இந்த வரவு-செலவு திட்டத்தில் புதிய வரிவிதிப்போ நடைமுறையிலுள்ள வரிவிகிதத்தினை உயர்த்துவதோ தேவையில்லையெனக் கருதி தமிழக வளர்ச்சி, தமிழக மக்களின் நல்வாழ்வே என் குறிக்கோள் என மக்களுக்காகவே திட்டம் வகுத்து வரலாறு படைத்துள்ளார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தில் தமது அரசாட்சியை அருளாட்சியாக நடத்திக்கொண்டுவரும் தங்கத் தாரகை, காவேரித் தாய், பொன்னியின் செல்வி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீண்ட ஆயுளையும், ஓங்கிய புகழையும் நீடித்த வெற்றியை பெற்றிடவும் இந்தியாவிலேயே முதன் மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கு எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் ஈடற்ற வெற்றிபெற வேண்டியும், எதிர்கால இந்தியாவின் பாரதப் பிரதமராக தலைமையை ஏற்கும் மகா சக்தியாக விளங்கிடவும் *(மேசையைத் தட்டும் ஒலி)* எல்லாம் வல்ல இறைவனை வணங்கி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு பல ஆயிரம் நன்றி பூக்களை காணிக்கையாக்கி வணங்குகிறேன் தாயே அம்மா.

தங்களின் 66-வது பிறந்தநாளில் எல்லா வளமும் நலமும் பெற்று பல்லாண்டு பலகோடி நூறாண்டு நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"எங்கம்மா மகராசி எல்லாம் உன் கைராசி, மத்தியில் அமையப் போவது புரட்சித் தலைவி அம்மாவின் பொற்கால ஆட்சி".

நன்றி, வணக்கம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உளுந்தூர்பேட்டை, டெல்லி என்றுதான் சொன்னார். வேறு ஏதேனும் சொல்லியிருந்தால் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக் குறிப்பினை பார்த்துவிட்டு முடிவு செய்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் இப்பொழுதுதான் வந்தேன். நான் இப்பொழுதுதான் வந்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* எனக்கு அது என்னவென்று தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)* அது என்னவென்று



2014 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

பார்த்துவிட்டு முடிவெடுக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

பிற்பகல் *1-45*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2014-2015* ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் விவாதத்தில் கலந்துகொண்டு தமிழக காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், எனது தொகுதி சார்பாகவும் கோரிக்கைகளை இங்கே பதிய வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்னும் சிறப்பாக, இம்மாதம் *24* ஆம் தேதி தனது *66*-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடவிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறுவதோடு, நீங்கள் மங்காப் புகழோடு நீடித்த வாழ்வு வாழ வாழ்த்துகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகத்தின் தலைநகரம் சென்னையில் ஓடும் கூவம் நதியைச் சீரமைக்க *3,834* கோடி ரூபாய் முதலீட்டில் திட்டம் வைத்திருக்கிறீர்கள். ஆனால், குமரியில் ஓடும் எந்த ஆற்றையும் சீரமைக்க திட்டம் வகுக்காதது கவலையைத் தருகிறது. ரூ.*745.59* கோடியில் உலக வங்கியிடம் *104* அணைகள் புனரமைக்கப்படவிருப்பதாக கூறியிருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். குமரி மாவட்டத்தின் ஜீவ அணையாக விளங்கக்கூடிய பேச்சிப்பாறை அணையை தூர் வாருவதற்குக்கூட எந்த அறிவிப்பையும் அறிவிக்காதது எனக்கு மட்டுமல்ல, மாவட்ட மக்களுக்கும் கவலையை உருவாக்கியிருக்கிறது. இந்த அணையில் வண்டல் மண், மணல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பேச்சிப்பாறை அணையும், அணை புனரமைப்புத் திட்டத்தின் ஆய்வில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் வண்டல் மண்ணை நல்ல விலை

கொடுத்து வாங்கிக்கொள்ள விவசாயிகள் தயாராக உள்ளனர். இங்குள்ள மணலை அரசு விற்பனை செய்வதாக இருந்தால் குமரி மாவட்ட மக்கள் மிகுந்த மனநிறைவு அடைவார்கள் என்பதையும், இதனால் அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்பதையும் இம்மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தில் குளம் என்றால் என்ன? குட்டை என்றால் என்ன? ஆறு என்றால் என்ன என்பதைப் பற்றி ஆவணங்களைப் பார்த்தோ அல்லது பள்ளிப் பாடத் திட்டங்களைப் பார்த்துதான் மக்கள் அறிந்துகொள்ளவேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதை மிகுந்த கவலையோடும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜேக்கப், மைக்கை விட்டு சிறிது தள்ளி நின்று பேசுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** கோடைக்காலத்தில் குளங்களை ஆழப்படுத்துவதற்கு விதிகளைத் தளர்த்தி தேவையான அளவு இலவசமாக மண்ணை அள்ளிச் செல்ல அனுமதி அளித்தால், அதன்மூலம் இலவசமாக குளங்களை சீரமைக்க முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இதனால் நிலத்தடி நீர் பெருகும். குடிநீர் தட்டுப்பாடு உருவாவது தடுக்கப்படும் என்பதும் எனது கருத்து. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு மேலும் கொண்டு வருவது என்னவென்றால், குமரி மாவட்டத்தில் கடந்த 10 வருடங்களில் 126 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது, காணாமல் போயிருப்பதாக எமது மாவட்ட மக்கள் கூறுகிறார்கள். இந்த ஆண்டு ஜனவரி 14 ஆம் நாள் கீழக்குருமனையைச் சேர்ந்த அந்தோணிப்பிள்ளை என்பவர் கடலில் மீன் பிடிக்கச்சென்று 2 நாட்கள் கழித்து பிணமாக மீட்கப்பட்டார். இந்த மாதம் 1 ஆம் தேதி இணையம் சின்னத்துறையைச் சேர்ந்த சிங்கராயன் என்பவரது மகன்களான 37 வயதான ரிஜிஸ்டன், 35 வயதான ஆண்டனி ஆகிய இருவரும் இன்றுவரையிலும் வீடு திரும்பவில்லை. அவர்கள் கிடைக்கும் வரை மாதம் ரூ.10,000 வரை அந்த இரு குடும்பங்களுக்கும் உதவித் தொகை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு முதல் இம்மாமன்றத்தில் வலியுறுத்தி வருகின்ற முக்கிய கோரிக்கை என்னவென்றால், கடலில் காணாமல் போகின்ற மீனவர்களை கண்டுபிடிக்க குமரி மாவட்டத்தில் ஒரு ஹெலிகாப்டர் தளம் அமைக்கவேண்டும் என்பதுதான். குமரி மாவட்டத்தில் ஒருவர் காணாமல் போய்விட்டால் சென்னைக்கு தகவல் கொடுத்து சென்னையிலிருந்து ஒரு ஹெலிகாப்டர் வந்து சேர குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது ஆகிவிடுகிறது. கடலில் தத்தளிக்கும் ஒருவர் 6 மணி நேரம் தனியாக போராடுவது என்பது இயலாத காரியம். எனவே, காணாமல் போகும் மீனவர்களை கண்டுபிடிக்க அதிநவீன விசைப்படகு, அதிநவீன கேமராக்கள் கொண்ட மீட்பு ஹெலிகாப்டர் தளம் அமைத்து குமரி மாவட்ட மீன்பிடி தொழிலாளர் பாதுகாப்பிற்கு உதவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழக நெடுஞ்சாலைத் துறைக்கு 2,800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை பாராட்டுகிறேன். நான் பல மாவட்டங்களுக்குச் சென்றபோது, அங்குள்ள சாலைகளைவிட, தமிழகத்தில் மோசமான நெடுஞ்சாலைகளை உடைய மாவட்டம் குமரி மாவட்டம் என்பது நான் கண்ட அனுபவம். பல இடங்களில் சாலைகள் இருந்தும் அதற்கான அடையாளம் இருக்கிறதே தவிர சாலைகள் இல்லை. இதனால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-50

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலான சாலைகள் மோசமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இங்கே ஒரு புள்ளிவிவரத்தை குறிப்பிட விரும்புகிறேன். கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை தருகின்றேன்.

சாலை அமைப்பதற்காக அவர்கள் ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி, 2006-2007-லே 1,183 கோடி ரூபாய், 2007-2008-லே 729 கோடி ரூபாய், 2008-2009-லே 1,015 கோடி ரூபாய், 2009-2010-லே 1,148 கோடி ரூபாய். 2010-2011-லே 1,950 கோடி, ஆக மொத்தம்

*5 ஆண்டுகளிலே 6,006 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டரை ஆண்டு காலங்களிலே 2011-2012-லே 1,900 கோடி ரூபாயும், 2012-2013-லே 2,262 கோடி ரூபாயும், 2013-2014-லே 3,285 கோடி ரூபாயும், என 7,447 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இலாகாவிற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, எல்லா மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. குமரி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, படிப்படியாக சாலைகள் சீரமைக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். முந்தைய ஆட்சியிலே சரியான நிருவாகம் இல்லாத காரணத்தாலே பெரும்பாலான சாலைகள் சீரழிந்திருக்கின்றன. அவையெல்லாம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியதற்கு நன்றி. ஆனால், எங்கள் மாவட்டத்திற்கு நீங்கள் வந்து ஆய்வு செய்யவேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியைவிட, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அதிக அளவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே சாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *நன்றி. இந்த ஆண்டும் 200 கோடி ரூபாயாவது ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 200 கோடி ரூபாயில் ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கப் போவதாக*



*அறிவித்துள்ளதற்கு மகிழ்ச்சியடைகிறேன். தென்கோடி முனையான குமரி, மாவட்ட அரசு போக்குவரத்துக் கழகத்தை நம்பியுள்ளது. தமிழ்நாட்டிலேயே பழைய பஸ்கள் அங்குதான் அதிகம் காணப்படுகின்றன. எனவே, குறைந்தபட்சம் 200 புதிய பஸ்களையாவது எங்கள் மாவட்டத்திற்கு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அதுமாத்திரமல்ல, பழைய பஸ்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை வாங்கிக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 50,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரத்த தானம் செய்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரவு, பகல், மழை, குளிர், காற்று என எல்லா சூழ்நிலைகளிலும் சிரமமான பணியை மேற்கொண்டுள்ள அவர்களின் சமூகப் பார்வை என்னைக் கவர்ந்திருக்கிறது. இவர்கள் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்றும், புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டுமென்றும், மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்குவது போன்று தங்களது ஊதியம் மற்றும் சலுகைகளை அரசே நேரடியாக வழங்கவேண்டுமென்றும் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடைநிலை ஆசிரியர்களைவிட ஓட்டுனர்கள், நடத்துனர்களுக்கு ஊதிய உயர்வு இருந்தது. ஆனால், இன்றோ நிலைமை வேறு என்று கூறுகிறார்கள். ஆகவே, அவர்களது கோரிக்கையை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திற்குப் பின், குமரி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் தற்போது மத்திய அரசு உதவியுடன்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே இதே அவையிலே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளேன். முந்தைய ஐந்தாண்டுகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் திருநெல்வேலி மாவட்டத்தில் இயக்கப்பட்ட பேருந்துகளையே கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேர்த்து இயக்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கன்னியாகுமரி*

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2014 பிப்ரவரி 18

மாவட்டத்தின்மீது சிறப்புக் கவனம் செலுத்தி, புதிய பேருந்துகள் இயக்கவேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில், 201 பேருந்துகள் இந்த மாவட்டத்தில் மட்டும் புதியதாக இயக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பணிமனைகளுக்கு உதிரி பாகங்கள் வேண்டுமென்று சொன்னார். திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை, முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் இயக்கத்தின்போது பழுது ஏற்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 5,682. ஓர் ஆண்டிற்கு சராசரியாக பல்வேறு வழித்தடங்களில் பழுதடைந்து நின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 1,136. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய முறையில் அவற்றை இயக்கவேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில், தரமான உதிரி பாகங்கள் வாங்கப்பட்டதன்மூலம், 2011-2012 ஆம் ஆண்டு 317 பேருந்துகள் மட்டுமே பழுதடைந்தன. 2012-2013 ஆம் ஆண்டு 33 பேருந்துகள் மட்டுமே திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பழுதடைந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2013-2014 ஆம் ஆண்டில் வெறும் 29 பேருந்துகள் மட்டுமே பழுதடைந்திருக்கின்றன. எனவே, தரமான உதிரி பாகங்கள் வாங்கப்பட்டு, பேருந்துகள் நன்றாகப் பாராமரிக்கப்பட்டு இயக்கப்படுகின்றன. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** தமிழகத்திலேயே அதிக கல்வியறிவு பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கிருக்கின்ற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகூட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சுயநிதி கல்லூரியாகவே உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு



2014 பிப்ரவரி 18] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

நிதியாண்டில் ஓர் அரசு விவசாயக் கல்லூரியோ அல்லது அரசு சட்டக் கல்லூரியோ அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு போக்குவரத்தில் பின்தங்கிய பகுதியான எனது கிள்ளியூர் தொகுதியில் தொலையாவட்டத்தில் ஒரு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் திட்டத்தை இரத்து செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், கோரிக்கை ஏதாவது இருந்தால் எழுதிகொடுத்து விடுங்கள். அவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம், நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக பல்வேறு கருத்துகளையும், ஆலோசனைகளையும் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

தொடர்ந்து 10 ஆண்டுகளாக இயற்கை பொய்த்ததன் காரணமாக பாலாறு ஓடுகின்ற மாவட்டங்கள் எல்லாம் வறண்டு போய் இன்றைக்கு நிலத்தடிநீர் அதல பாதாளத்திற்கு சென்றது மட்டுமல்லாமல், நகர்ப் பகுதி மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள கழிவுநீர் பாலாற்றில் ஓடவிடப்பட்டு, இருக்கின்ற நீரும் குடிதண்ணீருக்கு லாயக்கற்ற வகையில் இருக்கின்ற காரணத்தினால், நதிநீர் இணைப்பை இந்த அரசு விரைவுபடுத்தவேண்டுமென்றும், தென்பெண்ணை ஆறு, பாலாறு இணைப்பை விரைவுபடுத்தவேண்டுமென்றும் இதை விவசாயிகளின் ஒரு கோரிக்கையாகவும், சமூக ஆர்வலர்களின் ஒரு கோரிக்கையாகவும் நான் இந்த நேரத்திலே முன் வைக்கின்றேன்.

கர்நாடக மாநிலம் ஹசன் மாவட்டத்திலே மேற்கு தொடர்ச்சி மலையிலே 10 சிறு ஆறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நேத்ராவதி என்ற ஆறு உருவாகி, அங்கே இரண்டு மாவட்டங்களுக்கு அந்த ஆறுகளிலே தண்ணீர் ஓடுகின்றது. வருடத்திற்கு 2,500 டி.எம்.சி. அடி தண்ணீர் அரபிக்கடலிலே கலக்கின்றது. அந்த நீரை நம்முடைய பாலாற்றுடன் இணைக்கின்றபட்சத்திலே, வட மாவட்டங்கள் மட்டுமல்ல, எந்தெந்த மாவட்டங்களிலெல்லாம்

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2014 பிப்ரவரி 18

பாலாறு ஓடுகின்றதோ நிச்சயமாக அந்த மாவட்டங்கள் எல்லாம் பயன்பெறும், விவசாயப் பெருந்தகைகள் எல்லாம் பயன்பெறுவார்கள். நிலத்தடி நீரும் உயரும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நேத்ராவதி ஆற்றை பாலாற்றுடன் இணைக்கக்கூடிய அந்த அருமையான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தவேண்டுமென்று நான் முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திலே 6,729 சொத்துகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்ட சொத்துகள் ஆக்கிரமிப்பிலே இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்பை மீட்டுத் தருவதற்கு இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிஷம் வக்ஃபு வாரியத்தைப் பற்றி நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள். ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 127 பணியிடங்களில் 87 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஏறத்தாழ பத்து ஆண்டுகளாக. ** விரைவிலே காலியாக இருக்கின்ற 87 பணியிடங்களை நிரப்பி, தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்கு வாய்ப்பளிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை மிக விரைவிலேயே நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. பணியிடங்கள் காலியாக இருந்தாலும், வாரியத்தின் பணிகள் எவ்வித தொய்வும் இன்றி நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 18]

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் உறுப்பினர் என்ற அடிப்படையிலேதான் நான் இங்கே அதைப் பதிவு செய்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது வக்ஃபு வாரியத்தில் சொத்துகள் எல்லாம் ஆக்கிரமிப்பிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய் மதிப்பிலான வக்ஃபு வாரிய சொத்துகளை (மேசையைத் தட்டும் ஒலி) மீட்ட ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் சார்பாக சென்னையிலே ஒரு முஸ்லிம் மகளிர் தங்கும் விடுதி கட்டப்படவேண்டும். ஏனென்று சொன்னால், வெளி மாவட்டங்களிலிருந்து முஸ்லிம் பெண்கள் இங்கே படிக்க வருகின்றார்கள், வேலைக்கு வருகின்றார்கள். அவர்கள் தங்குவதற்காக ஒரு விடுதி கட்டப்பட வேண்டும். அதேபோன்று, கோவை, மதுரை, திருச்சி போன்ற பகுதிகளிலே மண்டல அலுவலகங்களைக் கட்டி அங்கே வக்ஃபு வாரிய செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வக்ஃபு வாரியத்தின் சார்பாக முஸ்லிம் மகளிர் தங்கும் விடுதி அமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, சென்னை, காஞ்சிபுரம், சேலம், கோவை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வெலி, வேலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் வக்ஃபு வாரிய மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, 2014-2015 ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின்கீழ் மண்டல அலுவலகங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 21 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்லாயிரம் புதிய பேருந்துகளை நாம் வாங்கியிருக்கின்றோம். பல்லாயிரம் பணியிடங்களை நிரப்பியிருக்கின்றோம். ஆனால், என்னுடைய தொகுதியில், மாதனூர் ஒன்றியத்தில், ஏற்கெனவே கிராமப் பகுதிகளில் இயங்கிக் கொண்டிருந்த தடம் எண்கள் 17, 18, 21, 89 போன்ற பேருந்துகளை, டீசல் விலை உயர்ந்துவிட்டது, கட்டுப்படியாகவில்லை, நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி மூன்று மாதங்களாக நிறுத்தி இருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பல்வேறு முறை டீசல் விலையை உயர்த்தினாலும்கூட, தமிழகத்திலுள்ள கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, பேரூராட்சியாக



இருந்தாலும் சரி, அனைத்துப் பகுதி மக்களும் சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்று, 2011 ஆம் ஆண்டு 19,167 இயக்கப் பேருந்துகளாக இருந்த எண்ணிக்கையை, மக்களுடைய தேவைக்கேற்ப, இந்த இரண்டரை ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 20,634 பேருந்துகளாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். அப்பேருந்துகள், தற்போது மக்களுடைய பயன்பாட்டில் இயங்கி வருகின்றன. எந்தப் பகுதியிலும் இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களை சொல்கின்றார். அவர், எந்த பேருந்து, எப்போது நிறுத்தப்பட்டது என்று சொன்னால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். இயக்கப்பட்ட பேருந்துகள் எந்தப் பகுதியிலும் நிறுத்தப்படவில்லை. மேலும், கடந்த 5 ஆண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகள் அதிக கட்டணத்தில் இயக்கப்பட்டன. இன்று 52 சதவிகித பேருந்துகள் சாதாரண கட்டணத்தில், ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி), இன்று மக்களுடைய பயன்பாட்டில் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிகாட்டியதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** தடம் எண்ணோடு சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தால், நான் சொன்னது உண்மையா, உண்மைக்கு மாறானதா என்று தெரிந்துவிடும். ஆகவே நான் சொல்லும்போது, பல புதிய பேருந்துகளை வாங்கியிருக்கின்றீர்கள், பணியாளர்களை நியமித்திருக்கின்றீர்கள் என்று சொல்லிவிட்டு, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த, நிறுத்தப்பட்ட தடம் எண்ணோடு சொல்லியிருக்கின்றேன். நீங்கள் ஆய்வு செய்துகொள்ளுங்கள். உண்மையாக இருந்தால் தயவுசெய்து அதை நிறைவேற்றித் தாருங்கள். அதைத்தான் நான் கேட்கின்றேன்.

[2014 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாக நான் சுட்டிக்காட்டுகின்றேன். எந்த வழித் தடத்திலும், இயக்கப்பட்ட பேருந்துகளில் ஒரு பேருந்துகூட நிறுத்தப்படவில்லை. மக்களுடைய தேவைகளுக்காகத்தான் 19,167-லிருந்து 20,634 பேருந்துகளாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எண்ணிக்கையை உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள். ஆறாயிரம் புதிய பேருந்துகளில் 3,994 பேருந்துகளை மக்களுக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அவருடைய தொகுதியில் வேறு எங்கேனும் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தால் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அந்தப் பகுதிகளுக்கும் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக இன்றைக்கு கிராமங்களிலே பசுமை வீடுகள், இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகளெல்லாம் கட்டிக்கொண்டு வருகின்றார்கள். இப்போது இருக்கின்ற ஒரேயொரு பிரச்சினை, மணல் பிரச்சினை என்பது இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். என்ன பிரச்சினை என்று சொன்னால் மூன்று யூனிட்டுகள் கொண்ட ஒரு டிப்பர் லாரி மணல் வாங்க வேண்டுமென்று சொன்னால் 20,000 ரூபாய் ஆகின்றது. ஏற்கெனவே மாட்டு வண்டிகளிலே ஒரு யூனிட் மணல் ஆயிரம் ரூபாய் என்று வாங்கிக் கொண்டு வீடுகளை கட்டிக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு இந்த மணல் வண்டிகளிலே மணல் வியாபாரம் செய்வது முழுமையாக தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், வாலாஜாபாத்தில் இருக்கின்ற குவாரியிலிருந்து டிப்பர் லாரியிலே மூன்று யூனிட் கொண்டு வந்து என்னுடைய தொகுதியாகட்டும், வாணியம்பாடி தொகுதியாகட்டும், குடியாத்தம் தொகுதியாகட்டும் இந்தப் பகுதிகளிலே கட்டடம் கட்ட வேண்டும் என்று சொன்னால் 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து அந்த மணலை வாங்கிக் கட்டுகின்றபோது நிறைய பேர் கட்ட முடியாமல் சிரமப்படுகின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள். . .



2014 பிப்ரவரி 18] [திரு. அ. அஸ்லம் பாஷா]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள் தவறான தகவலை இங்கே தந்துகொண்டிருக்கின்றார்கள். இரண்டு யூனிட் மணல் வேலூரில் 4,000 ரூபாய்க்குக் கிடைக்கிறது. நீங்கள் எத்தனை யூனிட் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். எத்தனை யூனிட் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். சிலபேர் மணலை வாங்கிக்கொண்டு போய் வெளியில் விற்பனை செய்கிறார்கள். நீங்கள் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், அது தவறு. அதேபோல மாட்டு வண்டி (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதைத்தான் சொல்கிறேன். அதாவது சுற்றுச்சூழல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெற்றுத்தான் மணல் குவாரியை நடத்த முடியும். அந்தச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்கு பல்வேறு சான்றிதழ்கள், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதற்குப் பின்னால், அவர் ஆணையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வந்து, அவர் அரசாணை தந்ததற்குப் பின்னால்தான் மணல் குவாரிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இது உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. அந்த அடிப்படையில்தான் இப்போது மணல் கொடுக்கப்படுகிறது.

பொதுப் பணித் துறையின் சார்பாக முன்பு நாம் அரசாணை பெற்றுத் தந்தோம். ஆனால் இப்போது அந்த நிலைமை இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் வரைமுறையில்லாமல் இங்கே விலை ஏற்றம் இருக்கிறது என்று சொன்னார்கள், அது தவறு. உங்களுக்கு எத்தனை யூனிட் வேண்டுமோ அத்தனை யூனிட் மணலை நேரடியாகப் போய் Yard-லே வாங்கிக்கொள்ளலாம். கடந்த ஆட்சியில் முன்பெல்லாம் ஆற்றுப் படுகையின் பக்கத்திலேயே மணல் yard-கள் இருந்த காரணத்தினால் சில இடங்களில் விலையேற்றம் இருந்தது. அவற்றையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முறைப்படுத்திய பின்னர், அனைத்து மாவட்டங்களிலும் stock yard-கள் திறக்கப்பட்டிருக்கின்றன. 34 stock yard-கள் மாநிலத்தில் இருக்கின்ற மாவட்டத் தலைநகரங்களிலே திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த stock yard-களிலிருந்து உங்களுக்குத் தேவைப்படுகின்ற மணலை அங்கங்கு நிர்ணயம் செய்திருக்கின்ற விலையில் இரண்டாம் விற்பனையின்மூலமாக விற்கப்படுகிறது. அதை நீங்கள் வாங்கிக்கொள்ளலாம். எங்கும் மணல் விலை ஏற்றம் இல்லை என்றே நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரம் ஆகிவிட்டது.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டிலே நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முதல் கேள்வியாக நான் அதைத்தான் கேட்டேன். 2005 ஆம் ஆண்டில் ஆம்பூர் நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டது. ஏதோ இன்றுவரையிலே அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, ஆம்பூர் நகருக்கான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, பேரணாம்பட்டு தொகுதியிலே பாரதப் பிரதமரின் சாலை விரிவாக்கத் திட்டம் என்ற ஒரு. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப் படுகையில் இரண்டு யூனிட் மணல் அள்ளுக்கூலி இல்லாமல் இப்போது 800 ரூபாய்க்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை வாங்கிக்கொண்டு இரண்டாம் விற்பனையில்தான் நான் சொல்கின்ற yard-களில் விற்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகிரிப் பட்டறையில் இருந்து பொன்னம்பள்ளி என்ற மிகவும் interior ஆன ஒரு கிராமத்தில் 61 இலட்சம் ரூபாயில் 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டு பணியை முடிக்க வேண்டிய காலமும் முடிந்துவிட்டது. ஆனால், அந்தப் பணியை எடுத்தவர்கள் நன்றாக இருந்த சாலையையும் கொத்தி எடுத்துவிட்டார்கள். அதனால் இன்றைக்கு அங்கே பேருந்தும் செல்வதில்லை. இரண்டு சக்கர வாகனங்களும் செல்ல முடியவில்லை. பலமுறை இதை நான் அரசு அதிகாரிகளிடத்தில் சொல்லியும்கூட இன்றுவரையில் அந்தச் சாலைப் பணியை துரிதப்படுத்தாமல், முடிக்காமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். அங்கே நிலைமை அவர் சொல்வது போல் இருப்பின் உடனடியாக அதை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. இந்த ஆண்டும் 11,731 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்வேறு ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் பணி அல்லாத பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் உருது மொழி ஆசிரியர்கள், உருது மொழி வாயிலாக பிற subject-களை சொல்லிக்கொடுக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை காலியாக இருக்கின்றன. தொடர்ந்து நாங்கள் கோரிக்கை வைத்து வருகிறோம். இந்த உருது மொழி வாயிலாக சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்கள் மட்டும் இதுவரை நிரப்பப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், வேலூர் அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி, (Government Muslim Higher Secondary School) 9 பணியிடங்கள் ஏறத்தாழ 12 ஆண்டுகளாகக் காலியாக இருக்கின்றன. இதை நாங்கள் பலமுறை அரசுக்கு தெரிவித்துவிட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களிடமும் தெரிவித்துவிட்டோம். இதுவரை அங்கு பணி நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2012 ஆம் ஆண்டு 20 ஆயிரம் ஆசிரியர்களுக்கு மேலாக ஒரே நேரத்தில் பணி ஆணை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவினைப் பிறப்பித்தார்கள். தமிழகத்திலே தற்போது ஆசிரியர் பற்றாக்குறை இல்லை என்கின்ற அளவிற்கு பள்ளிகள் எல்லாம் வெகு சீரோடும், சிறப்போடும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போது



வேலூரிலே உருது பள்ளிகளிலே ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். தற்போது, இடைநிலை ஆசிரியர்கள் பட்டாதாரி ஆசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்கள் முதுநிலை ஆசிரியர்களாகவும் பதவி உயர்வு பெற்று பல்வேறு இடங்களுக்கு மாறுதல் பெற்றுச் சென்றிருப்பார்கள். அதனால் அங்கு காலிப் பணியிடம் ஏற்பட்டிருக்கும். தற்போது ஆசிரியர் தகுதித் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் கூடிய விரைவில் பணி ஆணையை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளியில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு பள்ளிக் கல்வித் துறை முயற்சி எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அஸ்லம் பாஷா, பொதுவாக இந்தமாதிரி ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்லவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது ** என்று குறிப்பிட்டதும், இதுகுறித்து நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய வேலூர் உருது பள்ளியிலே ஆய்வுகளை மேற்கொண்டு, ஆசிரியர் பற்றாக்குறை இருக்குமானால் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அந்தப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படுமென்று தங்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அஸ்லம் பாஷா, நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள். (குறுக்கீடு) 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இல்லை, எல்லோரும் இப்படி பேசினால் எப்படி நான் அவை அலுவல்களை முடிப்பது. (குறுக்கீடு) 17 நிமிடங்கள் பேசிவிட்டு இப்போது பேசவில்லை என்கிறீர்கள். (குறுக்கீடு) அதற்கு நான் என்ன செய்வது? குறுக்கீடு இல்லாமல் பேச

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*கற்றுக்கொள்ளவேண்டும். (குறுக்கீடு) திரு. பார்த்திபன், நீங்கள் பேசுங்கள். உரையை 2.20 மணிக்குள் முடித்துவிடுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு வழங்கிய ஊழல் எதிர்ப்பு நாயகன், உளுந்தூர்பேட்டையிலே மாநாடு கண்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* பல பேரின் தூக்கத்தைக் கெடுத்த, தமிழகத்தின் ஏழை மக்களுடைய இதயத்திலே நீங்காத இடம்பெற்ற அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அன்புத் தலைவரை இந்த நேரத்திலே வணங்கி ஒரு சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்கள் யாரைச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. பல பேருடைய தூக்கத்தைக் கெடுத்த என்று சொன்னார். டெல்லியில் குளிர் அதிகமாக இருக்கிறது, அதனால், இவருடைய தலைவர், பல பேரின் தூக்கத்தைக் கெடுத்துவிட்டார் என்று நினைக்கிறேன்.

*பிற்பகல் 2-15*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** உளுந்தூர்பேட்டை கூட்டத்தைப் பார்த்தவர்களுக்கு தூக்கம் கலைந்திருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அ. அஸ்லம் பாஷா, உட்காருங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை நான் பேசியதாக இங்கே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பேருடைய தூக்கத்தைக் கெடுத்தார் என்று சொன்னார், மூட்டைப்பூச்சிகூட பல பேருடைய தூக்கத்தைக் கெடுக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மூட்டைப்பூச்சி கடி வாங்கியவர்களுக்குத் தெரியும், எங்களுக்குத் தெரியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவையிலிருந்து வெளியேறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், சப்ஜெக்டைப் பற்றி பேசுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** நான்தான் சப்ஜெக்டுக்குப் போகிறேன். அவர்தான் மூட்டைப்பூச்சி, கொசு என்று பேசுகின்றார். மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேச்சேரி, நங்கவள்ளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள 698 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 6 பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என பல்வேறு காலகட்டங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி மேட்டூர் அணையின்கீழ்புறம் தொட்டில்பட்டி அருகில் உள்ள காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ரூ.12,105 இலட்சங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வாரிய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அரசிடமிருந்து நிருவாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இன்றைக்கு மேட்டூர் அணை, மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் இருந்தாலும்கூட, குறிப்பாக, கொளத்தூர், மேச்சேரி போன்ற பகுதிகளிலே வாழ்கின்ற கிராம மக்களுக்கு வாரத்திற்கு ஒரு முறைகூட தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் குடிநீருக்காக மக்கள் பல கிலோ மீட்டர் நடந்துசென்று தண்ணீர் பெறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதைப் போக்குகின்ற வகையில் அரசு இந்தச் சிறப்புத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீருக்காக அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று

கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மேச்சேரி, நங்கவள்ளி திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 37 வருவாய் கிராமங்களில் விவசாய விளைநிலங்கள் 57,100 ஏக்கரும், தரிசு நிலம் 21,142 ஏக்கரும் உள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 49 விவசாயிகளுக்கு மட்டும்தான் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக 3 ஆயிரம் ரூபாய், 4 ஆயிரம் ரூபாய்தான் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூரிலே 55,100 ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பக்கத்து மாநிலமான கர்நாடகாவிற்கு செல்லும் ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் மேட்டூரிலே உள்ள விவசாயிகளுக்கு மிகப் பெரிய அளவிலே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசு கூடுதலாக நிதியை ஒதுக்கி, அந்த விவசாயிகளின் வாழ்வை உயர்த்த வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 2013-2014-ல் எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் 2012-2013-ல் இருந்த வரி வருவாய் 73,560.17 கோடியிலிருந்து 11 சதவிகிதம் உயர்ந்து 86,065.40 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டது. ஆனால், திருத்திய மதிப்பீட்டின்படி, 2013-2014-ல் 13.32 சதவிகிதம் மட்டுமே வரி வருவாய் உயர்ந்து 83,363.21 கோடியாக மட்டுமே இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது எதிர்பார்த்த கணிப்புகளைவிட 2,072.19 கோடி மாநில வரி வருவாய் குறைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. 2014-2015 நிதிநிலை அறிக்கையில் கடந்த ஆண்டு சொந்த வரி வருவாயில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது



49 நபர்களுக்குத்தான் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். ஆனால், 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிப்பு இருந்தால்தான் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்த வரி வருவாயில் 10.16 சதவிகிதம் உயர்ந்து 91,835.35 கோடியாக அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், கடந்த ஆண்டு 17 சதம் உயரும் என எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் கணக்குகளில் 13.32 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தது. ஆனால், வருகின்ற நிதியாண்டில் 10.16 சதவிகிதம் மட்டுமே வளர்ச்சி இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளதைப் பார்த்தால், மாநிலத்தினுடைய சொந்த வருவாய் ஈட்டுவதிலே இந்த அரசு தோல்வியடைந்திருப்பதாகவே நான் கருதுகிறேன்.

பிற்பகல் 2-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன் ஏதோ திறமையாக பேசுவதைப்போல நினைத்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். நிதிநிலை குறியீட்டில் மிகவும் விவரமாகச் சொல்லியிருக்கிறோம். அதாவது அந்த வருடத்தினுடைய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கின்றபோது மதிப்பீடுகளை முதலிலே சொல்கிறோம். எதிர்பார்க்கின்ற வருவாய் இனங்கள் வரும் என்ற மதிப்பீடுகளைச் சொல்லி, 20 சதவிகிதம் மதிப்பீடுகள் வரும் என்ற கணக்கின்படி நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்படுகிறது. அந்த வருடத்தினுடைய பொருளாதார வளர்ச்சி, வீழ்ச்சி இதனடிப்படையில் சில மாற்றங்கள் ஏற்படும். தற்போது இந்திய அளவில் மிகப் பெரிய மந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மத்திய காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசுதான் காரணம். இது உலகத்திற்கே தெரியும். இந்தியாவில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 18

தமிழ்நாடு ஒரு மாநிலம். இந்தியாவைச் சார்ந்த மாநிலம். அதனுடைய பாதிப்பு இங்கேயும் இருக்கும். அதனால்தான் குறைந்திருக்கிறதேயொழிய, மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாய் குறையவில்லை. எல்லா வரி வருவாயிலிருந்து வருகின்ற வரி இனங்களை திடகாத்திரமாக வசூல் செய்துகொண்டிருக்கிறோம். அதனுடைய வளர்ச்சி படிப்படியாக கூடிக்கொண்டுதான் இருக்கிறது. அதில் எந்தக் குறைபாடும் இல்லை. ஒட்டுமொத்த 20 சதவிகித மதிப்பீடு என்பது குறைந்திருக்கிறது. அதைத்தான் நாங்கள் நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்கள் புரிந்துகொண்டு பேச வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரம் அஸ்தம்பட்டி, எம்.டி.எஸ். நகர் பகுதியைச் சேர்ந்த ஒரு கூலித் தொழிலாளி முருகேசன் என்பவர் கடந்த நவம்பர் மாதம் இதய நோயினால் இறந்து போனார். மிக வறுமையில் வாடிய அந்தக் குடும்பத்தினுடைய அனைத்துச் சுமையையும் அந்த முருகேசனுடைய மனைவி தாங்க வேண்டிய நிலை. அவருடைய மகள் கௌசல்யா ஏழாம் வகுப்பு படிக்கிறார். அவருடைய மகன் கௌதம் தனியார் கல்லூரியிலே பி.காம். படித்து வருகிறார். இந்தக் குடும்பத்தை வழிநடத்துவதற்காக படித்துக் கொண்டிருந்த அந்த மாணவன் இரவு நேர பாஸ்ட் புட் கடையிலே பணியாற்றுகிறான். அப்படி பணியாற்றுகின்றபொழுது ** (குறுக்கீடு) எல்லாவற்றையும் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன், இப்படியெல்லாம் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** எல்லா ஆதாரமும் என்னிடம் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இருந்தால் என்னிடம் காண்பித்திருக்க வேண்டும். திரு. பார்த்திபன் அவர்கள் கூறிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இதையெல்லாம் என்னிடம் முன்கூட்டியே காண்பித்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னிடம் ஆதாரத்தைக் காண்பித்துவிட்டு பேசவேண்டும். நீங்கள் காட்டாமல் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால், அந்தக் குற்றச்சாட்டில் இருக்கக்கூடிய ஆதாரத்தை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடம் முன்கூட்டியே தர வேண்டும். அது உண்மையென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கருதுவார்களேயானால், அதை அனுமதிக்கலாம். அப்படித்தான் விதி இருக்கின்றது. அதை முதலில் திரு. பார்த்திபன் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பார்த்திபன், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) பத்திரிகைச் செய்தியையெல்லாம் வைத்து பேச முடியாது. ஆதாரத்தோடுதான் பேசவேண்டும். (குறுக்கீடு) பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டெல்லாம் பேச முடியாது. ஆதாரத்தோடுதான் பேசவேண்டும். (குறுக்கீடு) ஆதாரத்தை என்னிடம் கொண்டு வந்து காண்பித்திருக்கவேண்டும். நான் அனுமதி கொடுத்த பின்னால் நீங்கள் பேசவேண்டும். (குறுக்கீடு) அதுதான் முறை. அவை மரபுகளையும், அவை விதிகளையும் தெரிந்து கொண்டு பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 ஆயிரத்து 660 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமீபத்திலே அறிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** ஆனால், தமிழகத்தில் உள்ள மொத்த உள் நாட்டு உற்பத்தி தொடர்ந்து சரிவை சந்திப்பதற்கான காரணம்

என்ன என்பதை இந்த அரசு விளக்கவேண்டும். அதேபோல, இந்த அரசு கடந்த *3* ஆண்டுகளிலே *56* ஆயிரத்து *790* கோடி ரூபாய் கடன் சுமையை ஏற்றுள்ளது. இந்தக் கடனைப் போக்குவதற்கு தமிழக அரசால் ஏதேனும் சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா என்பதை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது *10* ஆயிரத்து *660* கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக இருக்கின்றது என்று கூறிவிட்டு, மீதி எப்பொழுது என்று கேட்டிருக்கின்றார். நேற்றையதினம் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்கின்றபொழுதே நான் சொன்னேன். புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது *7* ஆண்டு காலம் வரை இருக்கின்றது என்பதைத் தெளிவாக நேற்று சொல்லியிருந்தேன். மீண்டும் அவர் கேட்டுக்கொண்டிருக்கின்றார். உற்பத்தித் துறையிலே சரிவு ஏற்பட்டதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாகத்தான் அந்த நிலைமை உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தமிழகத்திலிருந்துதான் *30* முதல் *35* சதவிகிதம் வரை ஏற்றுமதி ஆகின்றது. மற்ற மாநிலங்களில் அந்தளவிற்கு இல்லை. உலகளவில் மந்த நிலை ஏற்பட்டதன் காரணமாகத்தான் குறைந்து இருக்கின்றதேயொழிய, இங்கே உற்பத்தியினுடைய அளவு குறையவில்லை என்றும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *2-25*

அதுபோல, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவர்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் வெறும் ரூ.*25,000* கோடி அளவிற்கு மட்டும்தான் முதலீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த இரண்டரை ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே



ரூ.*29,000* கோடி அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, இப்பொழுது ரூ.*10,000* கோடி அளவிற்கு முதலீடுகள் செய்யப்பட்டு, உற்பத்தி துவங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மது விற்பனைமூலம் நடப்பாண்டிலே ரூ.*26,292* கோடி அளவிற்கு வருவாய் இலக்காக அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் இந்த இலக்கினால் இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்திலிருந்து, வீட்டு வாசல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கு, நிர்ணயம் செய்வது இல்லை, அது எதிர்பார்க்கப்படும் வருமானம். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அதனை எட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், உளுந்தூர்பேட்டையிலே மாநாடு நடந்தபோது பல மடங்கு கூடுதலாகத்தான் மது விற்றிருக்கிறது. ஏறக்குறைய ரூ.*10* கோடி அளவிற்கு விற்பனை நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சில நேரங்களில் வரும்போது, அதை எதிர்பார்த்து இவ்வளவு வருமானம் வரும் என்று எதிர்பார்த்து கணக்கிடப்படுகிறது. இவ்வளவுதான் விற்க வேண்டுமென்று யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. இலக்கும் நிர்ணயம் செய்யப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் மாதவரத்தில் மாநாடு நடத்தினால், ரூ.*50* கோடி அளவிற்குமேல் மது கண்டிப்பாக விற்பனையாகும். அதில் கண்டிப்பாக மாற்றுக் கருத்து கிடையாது. அதுபோல் விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆக்கப்பூர்வமாகப் பேசவேண்டும். (குறுக்கீடுகள்) அங்கே வியாபாரத்தை. . . (குறுக்கீடுகள்) பொறுமையாகக் கேளுங்கள். அங்கு வியாபாரத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, அது நிர்ணயிக்கப்படுகிறது. அரசு விற்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. உளுந்தூர்பேட்டையிலே இந்த அளவிற்கு விற்றிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார் என்றால், அங்கே வியாபாரம் ஆனதற்கு ரெக்கார்டுகள் இருக்கின்றன. அங்கே விற்றிருக்கிறது என்று சொன்னால், நீங்கள் அட்மிட் செய்கிறீர்களே? நாங்கள் குடித்தோம் என்பது போல நீங்களே ஒப்புக்கொள்கிறீர்களே? அந்தப் பேச்சு அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** உரையை நிறைவு செய்துவிடுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் ஒரு டன் கரும்புக்கு ரூ.3,500/- எனவும், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,000/-எனவும், நிர்ணயம் செய்து அறிவிக்கப்படாதது ஏன் என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.

கிராமங்களிலே 2,000 பொதுவான சேவை மையங்கள் தோற்றுவிப்பது மற்றும் அதுபோன்ற மையங்களை நகரங்களிலும் திறப்பது, மதுரை முதல் தூத்துக்குடி வரை தொழில் மேம்பாட்டு வழித்தடம் மற்றும் சிப்காட்டில் 2 திறன் மேம்பாட்டு மையங்களைத் திறப்பது என இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பது வேதனைக்குரியதாகும்.

அதுபோல, இந்த நிதிநிலை அறிக்கையிலே மக்கள் நல்வாழ்வுத் துறையிலே கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மாநிலம் மருத்துவத் துறையில் பெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எனது தொகுதியான மேட்டூரைத்



தலைமையிடமாகக்கொண்டு இயங்கிவரும் மருத்துவமனையிலே 58 மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனால் தினமும் 2,000-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்ற இந்த மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறையின் காரணமாக, தற்போது மேட்டூர் தொகுதிவாழ் மக்கள் 50 கிலோமீட்டர் தூரம் பயணித்து சேலத்தில் உள்ள தலைமை மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலையைப் போக்குகின்ற வகையில் அந்தக் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றதற்குப் பின்னாலே 2,334 மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே இந்தியாவிலேயே வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கி, அந்தத் தேர்வு வாரியத்தின்மூலமாக 2,027 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, இதுவரை 4,361 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இந்த அவையிலே பதியவைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல மேட்டூரிலே ஏதேனும் குறைபாடு இருந்தால் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசென்று அந்தக் காலிப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பார்த்திபன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியில், ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன, அவற்றின்மூலம் எவ்வளவு

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2014 பிப்ரவரி 18

மின் உற்பத்தி பெறப்படுகிறது? நம்முடைய மின் தேவை அடுத்த ஆண்டுகளில் எவ்வளவு வளரும்? அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென்ற விவரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை தெளிவாகப் படித்திருக்கவேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த புதிய திட்டங்களில், ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற புதிய திட்டப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, ஏறத்தாழ 2,500 மெகா வாட் அளவிற்கு புதியதாக மின் உற்பத்தித் திறன் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு மின் உற்பத்தித் திறன் இப்போது மேம்பட்டிருக்கிறது. இன்னும் வருகின்ற கோடைக் காலங்களிலே ஏற்படுகின்ற கூடுதல் மின் உற்பத்தித் திறனை எதிர்கொள்வதற்கு வேண்டிய முயற்சிகளையும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. தற்போது தேவையைப் பூர்த்தி செய்கின்ற நிலையை எட்டியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளும், அறிவித்த திட்டங்கள் குறித்து இதற்கு முன்புகூடச் சொன்னேன். உடன்குடி Super Critical, 1,320 மெகா வாட் திறன் கொண்ட மின் உற்பத்திக்கான பணிகள் விரைவில் அறிவிக்கப்படவிருக்கின்றது. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் முடிவுற்று, எந்த நிறுவனம் என்று தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. அதுவும் இந்த வாரத்தில் முடிந்துவிடும். ஆகவே, எல்லா வகையிலும், ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கின்ற திட்டங்களை விரைவுபடுத்தி முடித்து, உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றோம். 2,500 மெகா வாட் உற்பத்தியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை மீண்டும் ஒரு முறை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



2014 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பார்த்திபன், சீக்கிரம் உரையை முடியுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புது சப்ஜெக்ட்டுக்கு போகாதீர்கள். நேரம் ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** காவல் துறை மிகச் சிறப்பாக செயலாற்ற வேண்டுமென்பதற்காக, 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 5,186.20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி அனைத்தும் காவல் துறையை வளப்படுத்துவதற்காகவும், நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்பதற்காகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவும் இவ்வளவு தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விஷயம்.

அதேநேரத்தில், எதிர்க்கட்சி என்ற முறையிலே சட்டம்-ஒழுங்கு பிரச்சினைபற்றி சில தகவல்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. பார்த்திபன், நீங்கள் பேசும்போதே எதையும் ஆதாரமில்லாமல் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். ஆதாரம் இருந்தால் என்னிடத்தில் காட்டிவிட்டு பேச வேண்டும். திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** என்னுடைய தொகுதி கோரிக்கைகள்.

மேட்டூர் சட்டமன்ற தொகுதியிலுள்ள கொளத்தூர் குடிநீர்த் திட்டத்திற்கான அரசாணையை இந்த ஆண்டே வெளியிட வேண்டுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மேச்சேரி நங்கவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அரசு உடனடியாக செயல்படுத்தி நங்கவள்ளி ஒன்றியம், கோனூர் ஊராட்சி மற்றும் மேச்சேரி பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுகிறேன்.

மேட்டூர் நகரத்தில் வசிக்கின்ற மக்கள் பல ஆண்டு காலமாக பட்டா வேண்டி போராடி வருகிறார்கள். அவர்களுக்கு விரைவில் பட்டா கிடைத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள 58 மருத்துவர் மற்றும் மருத்துவர் அல்லாத பணியிடங்களை உடனடியாக நிரப்பிடுமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவித்தும், தங்கத் தேர் செய்வதற்கு சிறப்பு அனுமதியும் கிடைத்திட இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலைய விரிவாக்கப் பணிக்காக புதுரெட்டியூர், சின்னக்காவூரில் வசித்து வந்த 358 ஏழைக் கூலித் தொழிலாளர்களின் நிலங்கள் அரசினால் கையகப்படுத்தப்பட்டன. அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு மின் வாரியம் கூறியதுபோல், குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பினை அளித்திட மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, மேட்டூர் ஆர்.எஸ். பகுதியில் அமைந்துள்ள சிட்கோ நகரில் உள்ள சாலைகள் அனைத்தையும் செப்பனிட்டு அங்குள்ள தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள நகரமைப்பு வரியை சீரமைத்திட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



மேட்டூர் சட்டமன்ற தொகுதி, மேச்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி பொது மருத்துவமனையாக மாற்றிட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேச்சேரியில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் கிளை பணிமனையினை தொடங்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரி முதல் பூனாண்டியூர் நெடுஞ்சாலையிலிருந்து வெடிக்காரனூர் கிழக்கு காட்டுவளவு வழியாக செங்கோடன் தெரு வரை தார்ச் சாலை அமைத்து அந்தப் பகுதியில் வாழும் பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் தார்ச் சாலை அமைத்திட ஆவன செய்யுமாறு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்ற தொகுதி, கண்ணாமூச்சியில் அமைந்துள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேச்சேரி தேர்வுநிலை பேரூராட்சி 9-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பழைய பஸ் நிலையம் வரை பைப் லைன் விஸ்தரிப்பு செய்வதற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களை ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, செட்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட மாண்புமிகு

[திரு. எஸ்.ஆர். பார்த்திபன்] [2014 பிப்ரவரி 18

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி நரியனூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டுமாய் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, சாம்ராஜ்பேட்டையில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை ஊராட்சியில் மலைவாழ் மக்கள் 31 குக்கிராமங்களில் வாழ்கின்றனர். அந்த மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை, தெரு விளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை போர்க்கால அடிப்படையில் அரசு விரைந்து செயல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-2-2014) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*21. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 5-9-2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./I.M.(SC)/7-28-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*



2014 பிப்ரவரி 18]

*22. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*23. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*24. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்ட]றிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*25. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

*****